பக்கங்கள்: இருபத்து எட்டு + 2

# உதயன்

விலை ரூபா 20.00

www.uthayan.com

சுடர் 26 வள்ளுவர் ஆண்டு 2042 ஆடி 32 புதன்கிழமை (17.08.2011) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 264



14
ஊடக சுதந்திரத்தில் தலையிடாதீர்கள்



21
ஹஸாரே திடீர் கைது



25
இலங்கையின் வியூகத்தில் வீழ்ந்தது ஆஸி.

### வடக்கு-தெற்கு ஊடகவியலாளர்கள் ஜனநாயகத்துக்காகப் போர்க்கொடி




உதயன் பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மீதான தாக்குதலைக் கண்டித்து யாழ். நகரில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பத்திரிகையாளர்கள்.

# இனப்பிரச்சினைத் தீர்வில் இந்திய நேரடித் தலையீடு

## தமிழ்க் கட்சிகளை பேச்சுக்கு அழைக்கிறது டில்லி

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 17

இலங்கைத் தமிழர் பிரச்சினையில் மீண்டும் இந்திய நேரடித் தலையீடுகள் ஏற்படத் தொடங்கி உள்ளன. இதன் முதற்கட்டமாகத் தீர்வு தொடர்பில் பேசுவதற்கு வருமாறு இலங்கையில் உள்ள தமிழ்க் கட்சிகளுக்கு இந்தியா அழைப்பு விடுத்துள்ளது. இலங்கை அரசுடன் ஒரு தீர்வை எட்டுவதற்கு முன்பாகத் தமிழ்க் கட்சிகளிடம் ஒருங்கிணைந்த கருத்தை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டே இந்தக் கூட்டத்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக சென்னையின் இராஜதந்திர வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. தமிழ்க் கட்சிகள் இந்தியாவுக்கு அழைக்கப்பட்டுள்ளன என்பதை உறுதிப்படுத்திய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன், இந்திய அரசியல் தலைவர்களுடனான ஒரு சந்திப்பாக இந்தக் கூட்டம் இருக்கும் என்றார்.

இலங்கை அரசு மீதான போர்க் குற்றச்சாட்டுக்கள், போர் முடிந்த பின்னரும் தமிழருக்கு தீர்வை முன்வைக்காமல் இழுத்தடிக்கும் கொழும்பின் போக்கு என்பவற்றால் இந்தியாவின் ஆளும் காங்கிரஸ் தலைமையிலான அரசுக்கு எதிர்க் கட்சிகளால் நெருக்கடிகள் அதிகரித்து வருகின்றன.

அதேவேளை, இலங்கை அரசு சீனா பக்கம் அளவுக்கு அதிக

பக் 28

# யாழ். நகரில் நேற்றுப் பகல் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம்

யாழ்ப்பாணம், ஓக.17

ஊடக அடக்குமுறைகளுக்கும் யாழ்ப்பாணத்தில் தொடர்ச்சியாக ஊடகவியலாளர்கள் தாக்கப்படுவதையும் கண்டித்து நேற்று யாழ். நகரில் பிரமாண்டமான ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

யாழ். மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாக இடம்பெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பெருந்திரளான அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த முன்னாள், இந்நாள் நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாநகர சபை, பிரதேச சபைகளின் உறுப்பினர்களும் பொது மக்களும் பெரும் எண்ணிக்கையில் கலந்து கொண்டனர்.

*உதயன்* பத்திரிகையின் செய்தி ஆசிரியர் ஞா.குகநாதன் மிலேச்சத்தனமாகத் தாக்கப்பட்டதைக் கண்டித்தும் இரண்டு வாரங்கள் கடந்த பின்னரும் குற்றவாளிகள் நீதியின் முன் நிறுத்தப்படாததைக் கண்டித்தும் இந்த ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது.

சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியம் ஏற்பாடு செய்திருந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் நாட்டின் 7 ஊடகவியலாளர்கள் அமைப்புக்களும் யாழ்ப்பாணத்து ஊடகவியலாளர்களும் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாண பிரதான பஸ்நிலையத்துக்கு முன்பாக வீதியை மறித்துத் திரண்ட ஆர்ப்பாட்டக்காரர்கள் கோஷங்களை எழுப்பினர். இந்தப் போராட்டத்துக்கென தென் இலங்கையில் இருந்து சிங்கள, தமிழ், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தனர்.

''யாழ்ப்பாணத்தில் ஊடகவியலாளர்களின் உயிர்களுக்கு யார் பாதுகாப்பு?'', ''ஊடக சுதந்திரத்தைப் பாதுகாக்க ஒன்றிணைவோம்'', ''ஊடக சுதந்திரமும் ஜனநாயகமும் பாதுகாக்கப்படவேண்டும்''.

பக் 27

### கல்விச்சுடர்

தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களை இறுதிப் பரீட்சைக்குத் தயார்படுத்தும் படிமுறைப் பரீட்சை இல.15 இன் வினாத்தாள்-I இன்றைய உதயனின் 16, 17 ஆம் பக்கங்களில் வெளியாகி உள்ளது.

## புதுடில்லியில் இலங்கை பற்றிய விவாதம் ஒத்திவைப்பு

புதுடில்லி, ஓக. 17

இந்திய நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நடக்கவிருந்த இலங்கை விவகாரம் தொடர்பான விவாதம் காந்தியவாதி அன்னா ஹஸாரே கைதானதையடுத்து ஏற்பட்ட அமளிதுமளியினால் பிற்போடப்பட்டது.

ஊழலுக்கு எதிராக வலிமையான லோக்பால் மசோதாவை உருவாக்கக் கோரி டில்லியில் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தவிருந்த காந்தியவாதி அன்னா ஹஸாரே கைதுசெய்யப்பட்ட விவகாரம் இரு சபைகளிலும் எதிரொலித்தது. எதிர்க்கட்சியினர் கூச்சலிட்டு அமளி துமளிப்படுத்தினர்.

பக் 27

# ஐ.தே.கட்சிக்குள் பெரும் குழப்பம் தலைமை குறித்து இன்று முடிவு

கொழும்பு, ஓக. 17

தலைமைப் போட்டியால் ஐக்கிய தேசியக் கட்சிக்குள் ஏற்பட்டுள்ள உட்பூசல் பெரும் பூதாகாரமாகி உள்ளது. இன்று கட்சியின் செயற்குழு கூடி எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலுக்கான வேட்புமனுக் குழுவை நியமிக்க உள்ள நிலையில், கட்சிக்குள் மறுசீரமைப்பு வேண்டும் எனக் கோரிவரும் கிளர்ச்சிக் குழுவினர் கட்சியின் தலைமையகம் அமைந்துள்ள சிறிகோத்தாவில் இன்று சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடப் போவதாக அறிவித்துள்ளனர்.

நடந்து முடிந்த தேர்தல்களில் ஐ.தே.க. தொடர்ச்சியான தோல்வியைச் சந்தித்து வருவதன் காரணமாக, கட்சித் தலைமைப் பதவியை

பக் 27

# இராணுவத்தினரின் தலையீட்டால் பூநகரி மக்கள் வாழ்வு அச்சத்தில்

யாழ்ப்பாணம், ஓக. 17


இராணுவத் தலையீடு காரணமாக பூநகரிப் பகுதியில் வாழும் மக்கள் பயத்துடனும் பீதியுடனுமே வாழ்கின்றனர் என்று குற்றஞ்சாட்டி உள்ளார் தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர் வீ.ஆனந்தசங்கரி. உள்ளூராட்சித் தேர்தலுக்குப் பின்னர் அந்தப் பகுதியில் நடைபெறும் விடயங்கள் தொடர்பில் அவர் ஜனாதிபதிக்கு அவசர மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார். தேர்தலில் ஆளும் தரப்புக்கு ஆதரவாக வீடுவீடாகச் சென்று பிரசாரம் செய்த இராணுவத்தினர் தற்போது பலநோக்குக் கூட்டுறவுச்

பக் 28

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

உதயன்
தொடர்புகளுக்கு
ஆசிரியபீடம் : 021-2229933
தொலைநகல்: 021-2229944
செய்தி/படங்கள்:
021-5679933
021-5679944
விளம்பரம்: 021-5671111
விநியோகம்: 021-5677222
மின் அஞ்சல்
செய்தி : news@uthayan.com
கருத்து: comments@uthayan.com
விளம்பரம்:
advt@uthayan.com
இணைய முகவரி:
www.uthayan.com




அனைத்து மாவட்டங்களிலும் இடியுடன் கூடிய மழைக்கான கூடுதல் சாத்தியம் உள்ளது.

### சாவகச்சேரியில் இனந்தெரியாதோர் அச்சுறுத்தல்

# பீதியுற்ற முஸ்லிம் மக்கள் பள்ளிவாசலில் தஞ்சம்

தென்மராட்சி, ஒக17

சாவகச்சேரியில் இனந்தெரியாத சிலரின் அச்சுறுத்தலை அடுத்து பீதியில் அங்கு மீள் குடியமர்ந்துள்ள முஸ்லிம் மக்கள் நேற்றுமுன்தினம் இரவு அருகில் உள்ள பள்ளி வாசலில் தஞ்சமடைந்தனர்.

நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் சாவகச்சேரி பள்ளி வாசலை அண்டிய பகுதிகளுக்கு4பேர் அடங்கிய குழு ஒன்று சென்றுள்ளது.

அங்கு முஸ்லிம்களின் வீடுகளுக்குத் தனித்தனியாகச் சென்ற அந்தக் குழு ''நீங்கள் இதுவரை காலமும் எங்கே இருந்தீர்கள்'' என்ற பாணியில் விசாரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

இதனால் பதற்றமடைந்த முஸ்லிம் மக்கள் நேற்றுமுன் தினம் இரவு பள்ளிவாசலில் தஞ்சமடைந்தனர்

இந்த விடயம் தொடர்பாக பொலிஸார் சாவகச்சேரி நீதிமன்றத்தின் கவனத்துக்குக் கொண்டு வந்தனர்.

இதனையடுத்து அந்தப் பகுதிகளில் பொலிஸ் பாதுகாப்புப் போடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-207)

# 'கிறிஸ் மனிதர்கள்' அச்சுறுத்தல்; கோத்தபாயவின் தலைமையில்!

## இராணுவப் புலனாய்வுப் பிரிவால் முன்னெடுப்பு; மங்கள குற்றச்சாட்டு

கொழும்பு, ஒக. 17

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கிறீஸ் மர்ம மனித அச்சுறுத்தல், பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையில், இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் முன்னெடுக்கப்படும் செயற்றிட்டம் - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் தொடர்பாடல் பிரிவுத் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான மங்கள சமரவீர தெரிவித்துள்ளார்.

கிறீஸ் மனிதன் என்ற மாயை ஏற்படுத்தி நாட்டில் மீண்டும் பதற்றமான சூழலை ஏற்படுத்துவதற்கு மஹிந்த ராஜபக்ஷ அரசு தயாராகி வருகிறது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் பதற்றமான சூழலை ஏற்படுத்தி, அதனூடாக சில அரசியல் கட்சிகளைத் தடை செய்யும் முயற்சிகளையும் அரசு மேற்கொண்டுள்ளது என்றும் அவர் குற்றஞ்சாட்டினார்.

மாத்தறையில் நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றும்போதே மங்கள சமரவீர மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுகுறித்து மேலும் தெரிவித்தவை வருமாறு -

கடந்த காலங்களில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்டுவந்த 'வெள்ளை வான் அச்சுறுத்தல்' நடவடிக்கையை முன்னெடுத்த தரப்பினரே தற்போது இந்த கிறீஸ் மர்ம மனித செயற்றிட்டத்தையும் முன்னெடுத்து வருகின்றனர் என பல தகவல்கள் கிடைத்துள்ளன.

**சிக்கியவர்களில் பலர் இராணுவச் சிப்பாய்கள்**

கிறீஸ் மர்ம மனிதர்களாக நடமாடிய நபர்கள், பிரதேச மக்களின் கைகளில் சிக்கிய பின்னர் அவர்களில் ஏராளமானோர் இராணுவச் சிப்பாய்கள் எனத் தெரியவந்துள்ளது. அத்துடன், இவ்வாறு பிடிக்கப்பட்டவர்களில் சிலர் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட பின்னர், அவர்கள் தமது அடையாளத்தை உறுதிப்படுத்தி விடுதலையாகியுள்ளனர்.

அத்துடன், கிறீஸ் மர்ம மனித பதற்றத்தை ஏற்படுத்தி கிராம மட்டத்தில் இராணுவத்தை நிலைகொள்ளச் செய்து, இராணுவ நிர்வாகத்திற்குத் தேவையான புறச்சூழலை பாதுகாப்புச் செயலாளர் ஏற்படுத்தி வருகிறார்.

அத்துடன், கிறீஸ் மர்ம மனிதர்களிடமிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு வழங்கும் போர்வையில், கிழக்கு மாகாணத்தில் பாதுகாப்புக் குழுக்களை ஸ்தாபித்து சுமார் 5 ஆயிரம் இராணுவத்தினர் அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் அனைத்து மாவட்டங்களிலும் குறைந்தது தலா ஒரு விசேட அதிரடிப்படை முகாமை அமைப்பதற்கும் இந்த கிறீஸ் மர்ம மனித செயற்றிட்டத்தின் ஊடாக பாதுகாப்புச் செயலாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

- இப்படி அவர் தெரிவித்தார். (ஒ-ஐ)

## நல்லூரில் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஒக. 17

வடமாகாண பண்பாட்டு அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் மாலை 6 மணி முதல் சமய சொற்பொழிவுகளும் கலை நிகழ்வுகளும் இடம்பெற்று வருகின்றன.

இன்று புதன்கிழமை 15 ஆம் திருவிழாவில் 'ஒரு திரு முருகன்' எனும் தலைப்பில் நா.தர்மராஜா சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்தவுள்ளார். (த-313)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், ஒக. 17

பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரரின் இயங்குநரும் யாழ். பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளருமான அருட்.திரு. ரூபன் மரியாம்பிள்ளை எழுதிய 'ஆசிரியர் தலையங்கம் ஓர் அறிமுகம்' என்ற நூல் வெளியீட்டு விழா நாளைமறுதினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு நடைபெறவுள்ளது.

இல.891, ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள பிஷப் சவுந்தரம் மீடியா சென்ரரில் ஆசிரியர் பி.றெஜிஸ் நியூட்டன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் கி.விசாகரூபன் கலந்துகொள்வார்.

சிறப்பு விருந்தினராக மன்னார் தமிழ் சங்கத்தின் தலைவரும் 'மன்னா' ஆசிரியருமான அருள்திரு தமிழ்நேசன் அடிகள் கலந்துகொள்வார்.

ஆய்வுரைகளை யாழ். பல்கலைக்கழக ஊடகக்கற்கை உதவி விரிவுரையாளர் கிருத்திகா தர்மராஜாவும், ஆசிரியர் என்.விஜயசுந்தரமும் நிகழ்த்துவார்கள்.

முதற்பிரதியை ஓய்வூதியர் திருமதி இமானுவேல் சவரியம்மா பெற்றுக்கொள்வார். (த)

## நிரம்பி வழியும் விருந்தினர் விடுதிகள்

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ்.நகரிலும் அதனை அண்டிய புறநகர்ப் பகுதியிலும் கடந்த சில மாதங்களாக வெறிச்சோடிக் காணப்பட்ட விருந்தினர் விடுதிகள் தற்போது சுற்றுலாப் பயணிகளால் நிரம்பி வழிகின்றன.

கடந்த சில நாள்களாக யாழ்ப்பாணத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது.

தற்போது பாடசாலை விடுமுறை காலமாக உள்ளமையால் அதிகளவான தென்னிலங்கை மக்கள் யாழ்ப்பாணம் வருகின்றனர். இவர்களின் வருகையால் விருந்தினர்கள் விடுதிகள் நிரம்பி வழிகின்றன. (த-26)

## எரிகாயங்களுக்கு இலக்கான யுவதி நேற்று மரணம்

யாழ்ப்பாணம், ஒக. 17

தனக்குத்தானே தீ மூட்டிக் கொண்டதனால் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த யுவதி சிகிச்சை பயனளிக்காது மூன்றாவது நாளான நேற்று மரணமானார்.

மயிலங்காடு, சூராவத்தைப் பகுதியில் உள்ள அவரது வீட்டில் கடந்த 13 ஆம் திகதி பிரஸ்தாப யுவதி எரிகாயங்களுக்கு உள்ளானார். இதே இடத்தைச் சேர்ந்த எம்.கிருபா (வயது -23) என்ற யுவதியே மரணமானவராவார்.

யாழ். நீதிமன்ற நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா மரண விசாரணைகளை மேற்கொண்ட பின் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (த-4)

# கூட்டமைப்பு உறுப்பினர்கள் சனிக்கிழமை பதவியேற்பர்

## வைபவம் நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில்

வலி.வடக்கு, ஒக. 17

உள்ளூராட்சித் தேர்தலில் வெற்றியீட்டிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்களின் பதவியேற்பு வைபவம் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்ப்பாணம்,கிளிநொச்சி, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் உள்ளூராட்சிச் சபைகளுக்குப் போட்டியிட்டு வெற்றியீட்டிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் உறுப்பினர்கள் அனைவரும் சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மண்டபத்தில் நடைபெறும். பதவியேற்பு வைபவத்தில் சத்தியப்பிரமாணம் செய்து கொள்ளவுள்ளனர்.

இந்த நிகழ்வு தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், கட்சி முக்கியஸ்தர்கள், பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொள்ளவுள்ளனர். (த-86)

## கிணறுகளை சுத்தம் செய்ய 5 இலட்சம் ரூபா

யாழ்ப்பாணம், ஒக. 17

நெடுந்தீவுப் பகுதியில் உள்ள கேணிகள், கிணறுகளை இறைத்துச் சுத்தம் செய்வதற்காக நெடுந்தீவு பிரதேச சபைக்கு ஐந்து லட்சம் ரூபா நிதி வழங்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவுக்குச் சென்ற பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர், மாகாண ஆளுநர் ஆகியோர் இந்த நிதியை வழங்கினார்கள்.

நெடுந்தீவில் நீண்ட காலமாகக் கேணிகள், கிணறுகள் இறைத்துத் துப்புரவு செய்யப்படாத நிலையில் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-7)

# நிகழ்வுகள்

### விஞ்ஞான வார நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ். பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான பீடத்தால் வருடந்தோறும் நடத்தப்பட்டு வரும் விஞ்ஞான வார நிகழ்வின் இறுதி நிகழ்வும், பரிசளிப்பு நிகழ்வும் இன்று புதன்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ். பல்கலைக் கழகத்தின் கைலாசபதி கலையரங்கில் நடைபெறவுள்ளன.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் வசந்தி அரசரட் ணம் கலந்து கொள்வார். (ம-313)

### கற்றல் மேம்பாட்டு உதவி வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ். எயிட் நிறுவனத்தால் நலிவுற்ற மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக் கான கற்றல் உபகரணங்கள் வழங்கும் நிகழ்வு இன்று புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு காரைநகர் ஊரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடைபெறவுள்ளது.

பாடசாலையின் அதிபர் ஆர்.சிறிதரன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக [illegible] நகரில் இருந்து வருகை தந்துள்ள நித்திய ஒளி அற அமைப்பின் தலைவர் அம்பல வாணர் தர்மராஜா கலந்து கொள்வார். (ம-313

### கும்பாபிஷேகம்

சுன்னாகம், ஒக.17

மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆல யத்துக்கு புதிதாக வசந்த மண்டப மொன்று அமைக்கப்பட்டுள்ளது.

15 லட்சம் ரூபா செலவில் ஜேர் மனியில் வதியும் வி.சுரேஸ் என்பவரால் இந்த வசந்த மண்டபம் அமைக்கப்பட் டுள்ளது.

இந்த மண்டபத்தின் கும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை காலை 7.40 மணியளவில் நடைபெறவுள்ளது.

சிவஸ்ரீ செந்தில்நாத சிவாச்சாரியார் கும்பாபி ஷேகக் கிரியைகளை நடத்தி வைப்பார். (ம-38)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோத்தபாயவை விலக்கி வைக்க வேண்டும் மஹிந்தவுக்கு 'இந்து' பத்திரிகை ஆலோசனை

கொழும்பு, ஒக. 17

ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தனது சகோதரர் கோத்த பாய ராஜபக்ஷவை தூர விலக்கி வைக்க வேண்டும் - என்று சென்னையிலிருந்து வெளியாகும் தமிழர் விரோதப் போக்கையும் தேசிய பிரமாணித்துவத்தை வலியுறுத்துவதுமான இந்து நாளிதழ் தனது ஆசிரிய தலை யங்கத்தில் மஹிந்த ராஜபக்ஷ வுக்கு ஆலோசனை வழங் கியுள்ளது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக செயற்பட்டு வருகி றது என அரசியல் வட்டாரங் களில் விமர்சிக்கப்பட்டு வரும் இந்து பத்திரிகை கோத்தபாய ராஜபக்ஷ இந்திய ஹெட்லைன்ஸ் டுடே தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டி தொடர்பாக கட்டுப்பாட்டை மீறிச் செல்லும் ஒரு சகோதரர் (A brother out of control) என்ற தலைப்பில் எழு திய ஆசிரிய தலையங்கத்தின் மேற் கண்டவாறு தெரிவித்துள்ளது.

விடுதலைப் புலிகளை இரா ணுவ ரீதியில் இரண்டு வருடங் களுக்கு முன்பு தோற்கடித்த இலங்கை அரசு சில முக்கிய பிரச் சினைகளிலிருந்து வெளிவர கஷ்டப்படுகின்றது.

✱ ஒன்று, சமாதானத்தின் தன்மை.

பெரும்பான்மை சிங்களத் துக்கும் சிறுபான்மை தமிழ ருக்கும் இடையே அரசியல் நல் லிணக்கம் ஒன்றைக்காணு வதாகும்.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ வெற்றியா னது ஜனாதிபதி ராஜபக்ஷ வுக்கு நாடாளுமன்றத்தில் பலத்தை வழங்கியிருக்கின் றது. யுத்தத்துக்கு முன்னதாக இருந்து வரும் தமிழ் மக்களின் மனக்குறைகளுக்கும் 30 வருட கால யுத்தத்தில் ஏற்பட்ட காயங்களை தீர்க்கக்கூடியதா னதுமாக அமையும் முன்னேற் றமான அரசியல் வரைவு ஒன்றை முன்வைக்கும் வாய்ப்பை என் றுமே இல்லாத ஒரு வாய்ப்பை- அவரின் அரசுக்கு வழங்கியி ருக்கின்றது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கை யின்போது இலங்கையுடன் நின்றிருந்த இலங்கையின் நண் பனான இந்தியாவுக்கு இது அக்கறையான ஒன்றாகக் கரு தப்படுகின்றது.

✱ இரண்டாவது, 2009 இல் இடம்பெற்ற யுத்தத்தின் இறு திக்கட்ட நிகழ்வில் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகள் தொடர் பான சனல் 4 ஆவணப்படம் மற் றும் ஐ.நா. நிபுணர் குழு அறிக்கை ஆகியனவாகும்.

இரண்டும் ஸ்ரீலங்கா இராணு வம் மீது போர்க்குற்றச்சாட்டுக் களைச் சுமத்தியுள்ளன. நன்றா கத் தெரிந்தும் இலங்கை இராணு வம் சிவிலியன்கள்மீது சுட்டு ஆயி ரக் கணக்கானவர்களைக் கொன்ற தாகும். சிறை பிடிக்கப்பட்ட வர்களை படுகொலை செய்தது மற்றும் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தியது ஏனைய குற் றச்சாட்டுக்களாகும்.

சரியான உணர்வுடன் இக் குற்றச்சாட்டுகள் குறித்து விசா ரணை செய்யாமல் இலங்கை அரசின் உயர்பதவி வகிக்கும் அதிகாரியான பாதுகாப்புச் செய லாளர் கோத்தபாய, (ஜனாதிபதி யின் சகோதரர்) தற்போதைய சூழ்நிலையை மேலும் சீர் குலைக்கும் முகமாக வரம்புக்கு மீறிய தன்னடக்கமற்ற முறை யில் முதலமைச்சர் ஜெயலலிதா மீது அவரின் உள்நோக்கத்து டன் கூடியதாக தமிழ்நாடு சட்ட சபையில் இலங்கை பற்றி நிறைவேற்றப்பட்ட தீர்மானங் கள் குறித்து கண்டனம் தெரி வித்துள்ளார்.

ஹெட்லைன்டஸ் டுடேயில் தெரிவிக்கப்பட்ட கோத்தபாய ராஜபக்ஷவின் கருத்துக்கள் தமிழ் சிறுபான்மையினரின் மீதான கவலையைத் தருகின்ற இகழ்ச்சி யாக அமைகின்றது.

தற்போது நடைபெற்று வரும் அரசியல் தீர்வு காணும் பேச்சுவார்த்தைகளை குப்பைக் கூடைக்குள் வீசுவதாக அவரின் கருத்துக்கள் அமைந்துள்ளன.

தற்போது நடைபெறும் பேச்சை பொருத்தமற்றது என்றும் நாம் பயங்கரவாதத்தை ஒழித்து விட் டோம் என்றும் 13 ஆவது அரச மைப்புத் திருத்தச் சட்டத்தை தயாரிப்பதில் இலங்கை அரசு சம்பந்தப்படவில்லை என்றும் விடுதலைப் புலிகள் அழிக்கப் பட்ட பின்னர் அரசமைப்புச்சட் டத்தை மேலும் திருத்த வேண் டிய தேவை இல்லை என்றும் அவர் தெரிவித்திருக்கின்றார்.

உணர்வுபூர்மான விடயங்க ளில் கோத்தபாய தெரிவிக்கும் கருத்துக்களிலிருந்து ஜனா திபதி ராஜபக்ஷ, அவரை தூர விலகிக் கொள்ளவேண்டும் என்று ஆலோசனை கூறுகின் றோம். இவ்விடயங்களில் கருத் துத் தெரிவிக்க கோத்தபாய ராஜ பக்ஷவிற்கு உரிமையில்லை.

சனல் 4 இற்காக பேட்டி கண்ட பிரிட்டன் வாசியான கவர்ச்சிகர மான அப்பெண் எப்படி கற்பழிக் கப்படாமல் அல்லது கொல்லப் படாமல் எவ்வாறு இலங்கைப் படையினரிடமிருந்து தப்பினார் என்பது உண்மையாக இருக்க முடியாது என்று கோத்தபாய ராஜபக்ஷ தெரிவித்த அவ மதிக்கும் கருத்து இதில் அடங் குகின்றது. இந்த ஒரு கருத்துக் காக மட்டுமே கோத்தபாய ராஜ பக்ஷ மீது நடவடிக்கை எடுக்க முடியும் - இப்படி இந்துவின் ஆசிரிய தலையங்கத்தில் தெரி விக்கப் பட்டுள்ளது.

யாழ்.போதனா வைத்தியசாலை

# விடுதிக்குள் அத்துமீறி நுழைய முயன்ற இளைஞரைத் தடுத்தவேளை கைகலப்பு

## பாதுகாப்பு ஊழியர் காயம்; சந்தேக நபர் கைதானார்

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ்.போதனா வைத்திய சாலையில் நேற்றுப் பாதுகாப்பு ஊழியருக்கும் பொதுமகனுக் கும் இடையே கைகலப்பு ஏற் பட்டுள்ளது. இதில் பாதுகாப்பு ஊழியர் தலையில் காயம டைந்து சிகிச்சை பெற்றுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று மதி யம் இடம்பெற்றுள்ளது.

நஞ்சருந்திய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலை யில் தீவிர சிகிச்சை பெற்று வரும் ஒருவரைப் பார்ப்பதற்கா கப் பார்வையாளர் நேரம் முடிந்த பின் குறித்த இளைஞன் விடுதிக் குள் நுழைய முற்பட்டுள்ளான். அவரை வைத்தியசாலைப் பாதுகாப்பு ஊழியர் மறிக்க, வேறொரு பாதையில் உள்நுழைந்த இளைஞரை அந்தப் பகுதியில் கடமையில் இருந்த பாதுகாப்பு ஊழியர் மறித்துள்ளார். தடுப்பை மீறிச் செல்ல முற்பட்டதால் பாது காப்பு ஊழியர் பிடிக்க முயன்ற போது குறித்த இளைஞர் மதி லேறி வெளியே செல்ல முயன் றுள்ளார்.

அப்போது இருவருக்கும் இடையே கைகலப்பு ஏற்பட நிலத்தில் கிடந்த கற்களாலும் இரும் புக் கம்பிகளாலும் பாதுகாப்பு ஊழியர் மீது இளைஞர் தாக்கு தல் நடத்தியுள்ளார்.

இதன்போது பாதுகாப்பு ஊழி யர் தலையில் காயமடைந்தார். இதனை அடுத்து பாதுகாப்பு ஊழி யர்கள் அனைவரும் சேர்ந்து அந்த இளைஞனைப் பிடித்துப் பொலி ஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் இன்று நீதிமன்றில் ஆஜர் செய் யப்படுவார் எனப் பொலிஸார் தெரிவித்தனர். (ஓ-10-4)

(மற்றுமொரு செய்தி 10 ஆம் பக்கத்தில்)

# குழந்தையைக் குப்பையில் போட்டு தீமூட்டி எரித்த தாய் நேற்றுக் கைது

அக்கராயன்குளம் பகுதியில் கொடூரம்

கிளிநொச்சி, ஒக.17

கிளிநொச்சி, அக்கராயன் குளம் பகுதியில் பிறந்த குழந் தையை தீமூட்டி எரித்த தாயொ ருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இதுகுறித்து மேலும் தெரிய வருவதாவது:

அக்கராயன் சந்திக்கு அரு கில் குடியிருப்பு ஒன்றில் வசித்து வரும் மூன்று பிள்ளைகளின் தாய் ஒருவர் தான் பெற்றெ டுத்த குழந்தையை வீட்டுக் குப்பைக்குள் போட்டுத் தீ மூட்டி எரித்துள்ளார்.

இதனைக் கண்ட அயல் வீட்டார் இராணுவத்துக்குத் தக வல் கொடுக்க, இராணுவத் தினர் பொலிஸாருக்குத் தெரி யப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து குறிப் பிட்ட இடத்துக்கு விரைந்த பொலிஸார் சம்பவத்துடன் தொடர் புடைய தாயைக் கைது செய் துள்ளனர்.

கைது செய்யப்பட்ட அந்தப் பெண் கணவனை இழந்தவர் என்றும் விசாரணைகளின் போது தெரியவந்ததாகத் தெரிவித்த பொலிஸார் தொடர்ந்தும் விசா ரணைகள் நடைபெற்று வருவதா கவும் தெரிவித்தனர். (ஓ-10-15)

# இராணுவக் கல்லூரியின் தலைவராக மேஜர் ஜெனரல் உதய பெரேரா

கொழும்பு, ஒக.17

அமெரிக்க இராணுவ பயிற் சிக் கல்லூரியின் தலைவராக மேஜர் ஜெனரல் உதய பெரேரா தெரிவு செய்யப்பட்டுள்ளார். இவ் வாறான பதவிக்கு இலங்கை இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவு செய்யப்படுவது இதுவே முதற் தடவையாகும். இதற்காக இவர் 67 நாடுகளைச் சேர்ந்த இராணுவ உயர் அதிகாரிகளின் வாக்குகளைப் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு வருடமும் அமெரிக்க இராணுவ பயிற்சிக் கல்லூரியில் கலந்து கொள்வ தற்காக 70 இராணுவ அதிகாரி களுக்கு ஐக்கிய இராச்சியத்தின் பாதுகாப்புப் படைப் பிரதானி யினால் அழைப்பு விடுக்கப்படு வதும் குறிப்பிடத்தக்கது. (ற)

# நயினாதீவுக்கு கல்விச் சுற்றுலா

சாவகச்சேரி கண்டுவில் ஒழுங்கை பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய சிறார்கள் அண்மையில் நயினாதீவுக்கு கல்விச் சுற்றுலாவுக்கு அழைத் துச் செல்லப்பட்டனர்.

நயினாதீவு நாகபூஷணி அம் பாள், பௌத்த விகாரை ஆகிய வற்றைப் பார்வையிட்ட சிறார் கள் படகுகளில் பயணித்த அனுபவத்தைப் பெற்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-207)

# உடல் முழுவதும் எரிகாயங்களுடன் யுவதி ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதி

யாழ்ப்பாணம், ஒக.17

தனக்குத் தானே மண் ணெண்ணை ஊற்றித் தீமூட்டிக் கொண்டதாகக் கூறப்படும் யுவதி ஒருவர் உடல் முழுவதும் எரிகாயங்களுக்குள்ளான நிலை யில் யாழ்.போதனா வைத்திய சாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

சண்டிலிப்பாய், மாசியப் பிட்டியில் பிரதேஸ்தாப யுவதி யின் சகோதரியின் வீட்டில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் மல்லாகத்தைச் சேர்ந்த பாலசிங்கம் தயாவதி (வயது - 32) என்பவரே எரிகாயங்க ளுக்கு இலக்கானவர் ஆவார்.

மல்லாகத்தில் வசித்து வரும் இவர் கடந்த ஒரு வார மாக சகோதரியின் வீட்டில் தங்கி யிருந்தார் என்றும் இந்த நிலை யில் நேற்று இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் கூறப் பட்டது.

சங்கானை வைத்தியசாலை யில் உடனடியாக அனுமதிக்கப் பட்ட யுவதி பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (ஓ-4)

# சிமெந்து மூடையின் விலையை 35 ரூபாவால் அதிகரிக்க அனுமதி கோரும் நிறுவனங்கள்

கொழும்பு, ஒக.17

சிமெந்து மூடை ஒன்றின் விலையை 35 ரூபாவால் அதி கரிப்பதற்கு மூன்று சிமெந்து நிறுவனங்கள் நுகர்வோர் செயற் பாடுகள் தொடர்பான அதிகாரசபை யிடம் அனுமதி கோரியுள்ளது.

சிமெந்து மூடையின் தற் போதைய கட்டுப்பாட்டு விலை ரூபா 750 ஆகும். அந்த விலை மட்டத்தை 785 ரூபாவாக அதி கரிப்பதற்கு அனுமதிக்குமாறு அல்ட்ரா ரெக், டோக்கியோ சிமெண்ட் மற்றும் லபாஜ் ஆகிய மூன்று நிறுவனங்களும் எழுத்து மூலமான கோரிக்கைகளை விடுத்துள்ளதாக நுகர்வோர் செயற்பாடுகள் தொடர்பான அதிகார சபை தெரிவித்தது.

உலகச் சந்தையில் சிமெந்து உற்பத்திக்கான மூலப் பொருள் களின் விலைகள் உயர்வடைந் துள்ளதால் சிமெந்து விலையை அதிகரிக்குமாறு அந்த நிறு வனங்கள் கோரியுள்ளன.

இது சம்பந்தமான தீர்மானம் ஒன்றை மேற்கொள்வதற்கான கூட்டம் எதிர்வரும் இந்த வாரத்தில் கூடவுள்ளது. (ஓ-22)

# வளர்ப்பு நாய்களுக்கு இன்று விசர்நோய் தடுப்பூசி

யாழ்.மாநகர சபைக்கு உட் பட்ட நாவாந்துறைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக ளில் உள்ள வளர்ப்பு நாய்க ளுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பூசி வழங்கும் நிகழ்வு இடம்பெற்று வருகின்றது.

இன்று புதன்கிழமை காலை 9 மணிக்கு சென்.நீக்கிலஸ் சன சமூக நிலையத்திலும் முற்பகல் 10 மணிக்குக் கலைவாணி முன்பள்ளியிலும் முற்பகல் 11 மணிக்குக் கோயில் ஒழுங்கை யிலும் தடுப்பூசி வழங்கப்பட வுள்ளது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### சிகிச்சை நிலையங்களில்

# சிறைச்சாலை அதிகாரிகளுக்கு முன்னுரிமை அளிக்க அறிவுறுத்து

குருநகர், ஓக.17

அரச வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுவதற்காக வருகை தரும் சிறைச்சாலை அதிகாரிகளுக்கு சிகிச்சை நிலையங்களில் முன்னுரிமை வழங்கி அவர்களுக்கு சிகிச்சை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு கொழும்பு மத்திய சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது. சகல பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர்கள், வைத்தியசாலைகளின் பொறுப்பு வைத்திய அதிகாரிகள் ஆகியோருக்கு இது தொடர்பான சுற்று நிருபம் ஒன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சிறைச்சாலை அதிகாரிகள் தமது அலுவலக சீருடையில் வரும்போது மட்டுமே இந்த முன்னுரிமை வழங்கப்பட வேண்டும் எனவும் மத்திய சுகாதார அமைச்சு இந்தச் சுற்று நிருபத்தில் மேலும் குறிப்பிட்டுள்ளது.

(ம-51)

# நல்லூர் ஆலயச் சூழலில் இன்று

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூர் இளங்கலைஞர் மன்றம் தெல்லிப்பழை துர்க்காதேவி ஆலயத்தின் அனுசரணையுடன் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு தெய்வீக இசையரங்கை நடத்தி வருகின்றது.

இன்று புதன்கிழமை 14 ஆம் திகதி விழாவில் திருமதி சிவரஞ்சினி ரமணா, கே.குகபரன், வி.ரமணா, கே.நந்தகுமார் ஆகியோர் பங்கு பற்றும் இசையரங்கு இடம்பெறும். (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.17

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லூர் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் பிற்பகல் 3 மணிக்கு சமய சொற்பொழிவுகளையும், கலை நிகழ்வுகளையும் நடத்தி வருகின்றது.

இன்று புதன்கிழமை 14 ஆம் திருவிழாவில் ''சைவவிஞ்ஞானம்'' எனும் தலைப்பில் என்.ரி.ஸ்ரீந்திரன் சிறப்புச் சொற்பொழிவை நிகழ்த்துவார்.

அதனைத் தொடர்ந்து காரைநகர் சிவகாமி அம்பாள் அறநெறிப் பாடசாலை, நாரந்தனை தான்தோன்றி மனோன்மணி அம்பாள் அறநெறிப் பாடசாலை, ஆனைக்கோட்டை, அந்திக்குளி ஞானவைரவர் அறநெறிப் பாடசாலை ஆகியன பங்குபற்றும் கலை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன. (ம-313)

* * *

யாழ்ப்பாணம், ஓக.17

அபிவிருத்திக்கான சமூக அமைப்புக்களின் வலையமைப்பின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு தினமும் ஆன்மீக சொற்பொழிவுகள் நடத்தப்பட்டு வருகின்றன.

நல்லூர் 63 நாயன்மார் மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு இடம்பெறும் ஆன்மீகச் சொற்பொழிவுகளில் இன்று புதன்கிழமை 'முருகவழிபாடு' எனும் தலைப்பில் பேராசிரியர் மா.வேதநாதன் சொற்பொழிவு நிகழ்த்துவார்.

(ம-311)

* * *

யாழ்ப்பாணம், ஓக.17

நல்லூர் சைவ மகா சபையின் ஏற்பாட்டில் நல்லூர் திருவிழாவை முன்னிட்டு நல்லை ஆதீன குருமூர்த்த ஆலய மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு ''கம்பராமாயணம்'' பற்றிய தெய்வீகத் தொடர் இசைப் பேருரையை பிரம்மஸ்ரீ சிவ வை.நித்தியானந்த சர்மா நிகழ்த்தி வருகின்றார்.

இன்று புதன்கிழமை 14 ஆம் திருவிழாவில் 'பரசு ராமன்' எனும் தலைப்பில் இசைப் பேருரை இடம்பெறவுள்ளது.

(ம-313)





சீட்டிழுப்பு இலக்கம் 776 திகதி 15-08-2011

வெற்றி எண்கள்

02 08 42 56 ஆங்கில எழுத்து I

ஜக்பொட் பரிசு ரூ. 12,340,980/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 4 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | - | 12,340,980/= | - |
| 4 இலக்கங்கள் பொருந்தினால் | 02 | 400,000/= | 800,000/= |
| 3 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 11 | 50,000/= | 550,000/= |
| 3 இலக்கங்கள் பொருந்தினால் | 362 | 1,000/= | 362,000/= |
| 2 இலக்கங்களுடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 615 | 1,000/= | 615,000/= |
| 2 இலக்கங்கள் பொருந்தினால் | 15623 | 60/= | 937,380/= |
| 1 இலக்கத்துடன் ஆங்கில எழுத்து பொருந்தினால் | 8040 | 40/= | 321,600/= |
| 1 இலக்கம் பொருந்தினால் | 206371 | 20/= | 4,127,420/= |
| ஆங்கில எழுத்து | 30101 | 20/= | 602,020/= |
| | | மொத்தம் ரூ. | 8,315,420/= |
| வெல்லப்படாத டிக்கட்டுகளுக்காக கொடுக்கப்பட்ட பணப்பரிசுகளின் பெறுமதி | 08 | 50,000/= | 400,000/= |

ரூபா.50,000 வீதம் பணப்பரிசுகள் வெற்றிபெற்ற 8 டிக்கட்டுகளின் தொடர் இலக்கங்கள்.

| | |
|---|---|
| மொனராகலை | 600521851-3-03 |
| காலி | 600537390-0-10 |
| மாத்தளை | 600523726-4-24 |
| நுவரெலியா | 600530143-3-43 |
| பதுளை | 600533869-7-37 |
| கண்டி | 600529434-1-31 |
| மட்டக்களப்பு | 600531790-8-38 |
| கொழும்பு | 600527950-3-13 |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை 8,715,420/=

இந்த வியாழக்கிழமை சுப்பர் ஜக்பொட

ரூ. 12,744,120/=

செம்மஞ்சள் நிற டிக்கட்டுகள் 2011 ஒகஸ்ட் 18 ஆம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

அபிவிருத்தி லொத்தர் சபை
356, கலாநிதி கொல்வின் ஆர் டி சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு-02
தொ.பே: 2333546/7

Enriching Your Life
DEVELOPMENT LOTTERY


# திடீரெனக் கொட்டித் தீர்த்தது மழை; அறுவடை செய்த வெங்காயம் அழிவு

யாழ்ப்பாணம், ஓக.17

வலி. கிழக்கு பகுதியில் திடீரெனக் கொட்டி தீர்த்த கனத்த மழையால் தோட்டங்களில் அறுவடை செய்யப்பட்டு உலர விடப்பட்ட வெங்காயங்கள் நனைந்து பழுதடைந்தன.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நண்பகல் வேளையில் திடீரென இந்த மழை பெய்துள்ளது.

கனத்த மழையால் விவசாய நிலங்களில் அறுவடை செய்து வைக்கப்பட்ட வெங்காயங்கள் வெள்ளத்தில் மூழ்கின. பெரும் எண்ணிக்கையிலான விவசாய நிலங்களில் வெங்காயம் அறுவடை செய்து வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்ற பெண் பிடிபட்டார்

பண்டத்தரிப்பு, ஓக17

சில்லாலை, கதிரை மாதா ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழாவில் கலந்துகொண்ட பக்தர் ஒருவரின் தங்கச் சங்கிலியை அபகரிக்க முயன்ற பெண் ஒருவர்கையும் மெய்யுமாக பிடிக்கப்பட்டு இளவாலைப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் காலை ஆலயத்தின் வழிபாட்ட இடத்தில் இடம்பெற்றுள்ளது. இளவாலைப் பொலிஸார் பிரஸ்தாப பெண்ணிடம் விசாரணைகளை மேற்கொணட போது அவருடன் கூடவந்த மற்றுமொரு பெண்ணும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்டார். இவர்கள் இருவரும் இன்று நீதி மன்றில் முற்படுத்தப்படுவர் என பொலிஸார் தெரிவித்தனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் வெளிமாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்று தெரிவிக்கப்பட்டது.

(ஒ-10-130)

# யாழ். முனீஸ்வரன் வீதியில் வடிகால்

யாழ்ப்பாணம், ஓக.17

யாழ். முனீஸ்வரன் வீதியில் புதிதாக வடிகால் அமைக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.புல்லுக்குளத்தில் கழிவுநீர் தேங்கு வதைத் தடுக்கும் முகமாக இந்தக் கால் வாய் அமைக்கப்பட்டு வருகிறது.

திறந்த வெளி அரங்கு வீதியைக் குறுக்கறுத்து இந்த வடிகால் அமைக்கப் படவுள்ளமையால் அந்த வீதி போக்கு வரத்துக்குத் தடை செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (ம-26)

# கிராம அபிவிருத்திச் சங்கம் உருவாக்க பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம், ஓக.17

20 வருடங்களின் பின்னர் மீள் குடிய மர்வு இடம்பெற்றுள்ள வயாவிளான் மேற்கு கிராமத்தில் கிராம அபிவிருத்திச் சங்கம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது. இதற்கான பொதுக்கூட்டம் செப்ரெம்பர் இரண்டாம் திகதி முற்பகல் 10 மணிக்கு வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத் தில் நடைபெறவுள்ளது. (ம-313)

# குருமனை திறந்து வைப்பு

குருநகர், ஓக.17

யாழ். மரியன்னை பேராலயவளவில் அமைக்கப்பட்ட குருமனை யாழ். ஆயர் மேதகு தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்ட கையால் ஆசீர்வதித்து திறந்துவைக்கப்பட்டது.கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9 மணியளவில் யாழ். மரியன்னை பேராலய திருவிழாத் திருப்பலி நிறை வில் இப்புதிய குருமனைக் கட்டடம் திறந்து வைக்கப்பட்டது.

யாழ். மரியன்னை பேராலயப் பங்குத் தந்தை வண. பிதா எஸ்.சகாநாயகர் அடிகளாரின் தனிப் பெரும் முயற்சியால் அவரது நிதி சேகரிப்பில் அமைக்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம-51)

## மரண அறிவித்தல்

### திருமதி திருச்செல்வம் லூர்த்தம்மா



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனிய்யை வசிப்பிடமாகவும் கொண்ட திருச்செல்வம் லூர்த்தம்மா கடந்த 09.08.2011 செவ்வாய்க்கிழமை ஜேர்மனியில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சந்தியோ - அன்னம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற திருச்செல்வத்தின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற இராசரத்தினத்தின் அன்பு சகோதரியும் செபஸ்தியாம்பிள்ளை (முன்னாள் பணியாளர் - கட்டடத் திணைக்களம், ஜேர்மனி), மைக்கல் (பொறியியலாளர்), இம்மானுவல் (முன்னாள் பணியாளர் - யாழ். பல நோக்குக் கூட்டுறவு சங்கம், ஜேர்மனி), கில்டா, பிலிப்யோசப் (முன்னாள் பணிப்பாளர் - சீநோர் நிறுவனம், ஜேர்மனி) லம்பேட் (கணினி ஆசிரியர் - ஜேர்மனி) அன்ரன்மெல் (ஆய்வுகூட உத்தியோகத்தர் - யாழ். பல்கலைக்கழகம், ஜேர்மனி), லிப்டன் யோன்சன் (லண்டன்), கட்சன் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயும் ஜெயராஜகுலேந்திரன் (ஓய்வுபெற்ற அதிபர்) டொறின், புஸ்பவதி, ஜெயராணி, மரிய கோகிலா, சிறீரங்கநாயகி, ஜெயா, ஞானமலர், புஸ்பவதி ஆகியோரின் அன்பு மாமியும் வோல்வின் (ஆசிரியர் ஓமந்தை ம.க.) டயானா (JSAC), கமிதா, டிலான், மைதிலி, மிருணா, றீகன், லூட்சியா, அனிஸ், அனுஜா, ஜொய்ஸ்,லமானி,லக்ஷி, அன்சோனியா, ஜெனிங்ஸ் டன், அன்சோபியா, கெறோலின், யப்டிசன், கபில்டன், பிரவீனா, கனிஸ்டன், சாருமதி (இலங்கை வங்கி), எட்மன்தீட், ஜெரின் (விரிவுரையாளர் - தொழில் நுட்பக்கல்லூரி, திருகோணமலை), அமீர் ஆகியயோரின் அன்புப் பேர்த்தியும், டீலன், லிருணா,செறினா, ராமான், ஆர்மன் ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.08.2011) நல்லடக்கம் செய்யப்படும். அன்னாரின் யாழ்ப்பாண இல்லமான இல.44 டேவிட் வீதியில் இறைவழிபாடு நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**

மருமகன் (இளைப்பாறிய அதிபர்) அ.ஜெயராஜகுலேந்திரன்
பேரன் (ஆசிரியர்) ஜெ. வோல்வின்

இல.44, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

(6959)


## நாய்கள் விற்பனைக்கு

அல்சேசன் ஆண் கறுப்பு வயது 3 பொமரேனியன் ஆண், பெண் பெரிது (கறுப்பு, வெள்ளை) கூண்டும் விற்பனைக்குண்டு.
0777245077

## பகுதி நேர பெண் உதவியாளர் தேவை

சிவா பற்சிகிச்சை நிலையம்

விவசாயப் பாடசாலை அருகில்,
இல.32, பலாலி வீதி,
திருநெல்வேலி.

## விரைவான லீஸிங்

பதிவு செய்யப்பட்ட அல்லது பதிவு செய்யப்படாத அனைத்து வாகனங்களுக்கும் ஒரு மணித்தியாலயத்துக்குள் லீஸிங்.

பதிவு செய்யப்படாத வாகனத்துக்கு விசேட சலுகை!

மேலதிக தொடர்புகளுக்கு:-
இல.88, ஆஸ்பத்திரி வீதி,
மாட்டின் ஒழுங்கை,
யாழ்ப்பாணம்.
தொ.பே.இல: 0214922455
0777696991
0770638705


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் கிள்ளுக்கீரையா என்ன...?

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை 9 இல் இருந்து 6 ஆக குறைத்துவிட தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ள முடிவு சரியானதா தவறானதா என்பது ஒரு புறமிருக்க, உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல் நடந்து முடிந்த சூடு தணியு முன்னரே இந்த அறிவித்தலை தேர்தல் ஆணையாளர் விடுத்திருப்பதானது பல்வேறு விதமான கருத்துக்களுக்கும் விமர்சனங்களுக்கும் இடமளித்திருக் கின்றது.

தேர்தல் திணைக்களமும் ஆணையாளரும் அரசியலுக்கு அப்பாற்பட்டவர்களாகவே கருதப்பட வேண்டியவர்கள். ஆனால் அரசியல் நெருக்குதல்களுக்கு அவர்கள் உள்ளாக மாட்டார்கள் என்று நூற்றுக்கு நூறு வீதம் சொல்லி விட முடியாது. ஆணையாளர் புதியவர். அவர் கண்காணிப்பில் இப்பொழுதான் பரீட்சை போல ஒரு தேர்தல் நடந்து முடிந்துள்ளது. தேர்தலில் எத்தனையோ விதமான தில்லு முல்லுகள் - ஊழல்கள், அச்சுறுத்தல் எல்லாம் நடைபெற்றிருந்த போதிலும் வாக்களிப்பில் மக்கள் உறுதியுடன் திடமாக செயற்பட்டிருந்தார்கள்.

தெற்கில் ஆளும்கட்சியினர் அபார வெற்றியைப் பெற்றபோதிலும், முழு அரசாங்க இயந்திரமும் இயக்கி விடப்பட்டிருந்த நிலையிலும், வடக்கில் அரசும் அதன் ஆதரவு சக்திகளும் மண் கவ்வும் படியான நிலையை இங்குள்ள மக்கள் ஏற்படுத்தினார்கள். இது நிச்சயமாக அரசுக்கோ, அதன் அதன் வால் பிடிக்கும் தரப்புகளுக்கோ மகிழ்ச்சியைக் கொடுத்திருக்க முடியாது.

யாழ்.தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையை வெட்டிக் குறைக்கும் முடிவுக்கும் அரசுக்கும் எதுவித சம்பந்தமும் இல்லை - இது முழுக்கவும் தேர்தல் ஆணையாளர் எடுத்துள்ள முடிவு என்று அரசு அடித்துக் கூறிவிட்டது. ஆனால் நாட்டிலுள்ள அனுபவ மிக்க அரசியல் வாதி கள், சட்டத்துறை வல்லுநர்கள் மற்றும் எதிர்க் கட்சிகளும் கூட தேர்தல் ஆணையாளரின் முடிவை கண்டித்துள்ளார்கள். அரசியல் அமைப்புக்கு மாறானது என்றும் சுட்டிக் காட்டியுள்ளார்கள்.

முப்பது வருடகால இரத்தக் களரிக்கு பின்னர் ஏற்பட்டுள்ள அமைதிச் சூழ் நிலையில் இது பாரதூரமான எதிர் விளைவுகளை ஏற்படுத்தும் என்றும் எச்சரித்துள்ளார்கள்.

குறிப்பாக, முன்னாள் பிரதம நீதியரசரான சரத் என்.சில்வா தேர்தல் ஆணையாளர் அவசரப்பட்டு செயல்பட்டிருக்கிறார் என்று சுட்டிக்காட்டியிருப்பது கவனத்துக்குரியது.

இவ்வாறான ஒரு தீர்மானத்தை எடுப்பதற்கு பல விடயங்களை - அதன் எதிர்விளைவுகளை - தேர்தல் திணைக்களம் ஆலோசனைக்கு எடுத் திருக்க வேண்டும் என்பது அவரது கருத்து.

போரின் காரணமாக பல எண்ணிக்கையிலான மக்கள் இடம்பெயர்ந்து நாட்டின் பல இடங்களிலும் வாழ்ந்து வருகிறார்கள். வெளிநாடுகளிலும் ஏராளமான வாக்காளர்கள் வதிகிறார்கள் என்பதை சுட்டிக்காட்டும் சரத் என்.சில்வா, தேர்தல் ஆணையாளர் இதைப்பற்றி எண்ணிப்பார்த்திருக்க வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்து முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த மக்கள் அனைவரும் இன்னும் முறையாக தமது சொந்த இடங்களில் குடியமரவில்லை. அந்த முயற்சி முற்று பெற்று விட்டதாக அதிகாரிகள் அறிவிக்கவில்லை. போர் முடிந்து அமைதி திரும்பியிருப்பதால் வெளிநாடுகளில் வதியும் இலங்கைத் தமிழர்கள் தாயகத்துக்கு திரும்பிவர வேண்டும். அரசு விடுத்த அழைப்பு இப்போதுதான் சிறிது சிறிதாக பயனளிக்கத் தொடங் கியுள்ளது. கள நிலைமைகளை சரியாக அனுமானித்த பிறகே அவர்கள் வரு வார்கள். அவர்கள் எல்லாம் இந்த நாட்டையே மறந்துவிட்டார்கள் என்று யாரும் நினைத்து விடலாகாது. மேலும் பக்கத்து நாடான இந்தியாவில் ஆயிரக் கணக்கான இலங்கைத்தமிழர்கள் நாட்டுக்குத் திரும்பி வருவதற்கு காத்திருக் கிறார்கள். போர்ச் சூழல் ஒய்ந்தாலும் இம் மக்கள் மகிழ்ச்சியுடன் திரும்பி வந்து தமது உறவுகளுடன் இணைந்து கொள்ளக்கூடிய சூழல் இரண்டு வருடங்கள் கழிந்தும் இன்னும், உருவாக வில்லை, உருவாக்கப்படவில்லை. போரில் இழந்துவிட்ட உறவுகளைத் தேடுவதிலும் காணாமற்போனவர்களைத் கண்டுபிடிப்பதிலும் அனேகர் இன்னமும் ஈடுபட்டு வருகிறார்கள்.

வாக்காளர் எண்ணிக்கை குறைந்து விட்டது என்ற காரணத்தை அவசரக் குடுக்கைத்தனமாக தேர்தல் திணைக்களம் ஆலோசனைக்கு எடுத்துவிட்டது என்பதே மிகப்பரவலான கருத்து. அவர் இன்னொரு கருத்தையும் முன் வைத்துள்ளார். தேர்தல் ஆணையாளரின் இந்த முடிவு மேற்கு நாடுகளிலும் இந்தியாவிலும் தமிழருக்கெதிரான இன்னுமோர் நடவடிக்கை என்றவாறு பிரசாரப் படுத்தப்படுவதற்கான ஆபத்து பற்றியதாகும் அது.

யாழ். தேர்தல் மாவட்ட மக்களின் நாடாளுமன்றப் பிரதிநிதித்துவத்தை குறைத்து அதனை குருணாகல், இரத்தினபுரி,பதுளை, மாத்தறை ஆகிய மாவட்டங்களுக்கு வழங்கியிருப்பது சந்தேகத்தை மேலும் பெருப்பித் துள்ளது. இது என்ன ஒரு தூய கணிதச் சமன்பாடா? இதற்குப் பின்னாலே ஒரு சூத்திரதாரித்தனம் ஒளிந்திருக்கிறது என்ற சந்தேகம் எழுகிறது.

ஏற்கனவே ஐ.நா. நிபுணர் குழுவின் அறிக்கையிலும் சனல் 4 காணொளி காட்சிகளிலும் போரின் இறுதி கட்டத்தில் மனித உரிமை மீறல்களிலும், போர் குற்றங்களிலும் இலங்கைப் படையினர் ஈடுபட்டதாக உலகம் முழுவதும் செய்திகள் பரவி, அதனால் ஏற்பட்ட தாக்கத்திலிருந்து விடுபடுவதற்கு ப்கீரதப் பிரயத்தனத்தில் ஈடுபட்டுள்ள ராஜபக்ஷ அரசுக்கு, இது இன்னுமொரு தலைக்குனிவை ஏற்படுத்திவிட்டது என்பது நீதியின் பக்கம் நிற்பவர்களின் கருத்து.

தேர்தல் ஆணையாளர் தனது கடமையைச் சட்டப்படி செய்திருக்கி றாரா இல்லையா என்பதை பற்றி வெளிநாட்டவர்கள் இன்றைய சூழ் நிலையில் ஆராய்ந்து கொண்டிருப்பார்கள் என்று எதிர்பார்க்க இயலாது.

சிங்களப் பேரின அரசின் செயற்பாடாகவே இந்தியாவிலும் மேற்கு நாடுகளிலும் இந்த விடயத்தை பார்க்கும் நிலை தோன்றியுள்ளது.

நாட்டிலுள்ள கட்சிகள் பலவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பைப் போலவே இந்த முடிவை ஆட்சேபித்துள்ளன.அதே சமயம் தமிழ் தேசியக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரின் தீர்மானத்தை எதிர்த்து நீதி மன்றத்தில் முறையிடுவது பற்றி ஆராய்ந்து வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சுதந்திர மற்றும் நீதியான தேர்தலுக்கான மக்கள் அமைப்பு போன்ற சுதந்திர தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் பலவும் இந்தச் செயலை மிக வன்மையாகக் கண்டித்துள்ளன.

தேர்தல் ஆணையாளர் என்னதான் சட்டப்படி தாம் செயல்பட்டிருப்பதாக நியாயம் கற்பிக்க முயன்றாலும், களநிலைகளை உணர்ந்து தனது முடிவை மீள்பரிசீலனை செய்யவேண்டும். அரசாங்கத்தின் வெளியே புலப்படாத தூண்டுதல்களின் பேரிலேயே அவர் இந்த முடிவை எடுத்திருப்பார் என்ற யதார்த்தமான சந்தேகத்தை அவரின் வாய்ச் சொற்களால் நீக்கிவிட முடியாது.

அவரின் முடிவு உண்டாகக்கூடிய பாதிப்புகள், ஜனநாயகத்தின் அச்சாணிகளில் ஒன்றான நாடாளுமன்ற உறுப்பினர் பிரதிநிதித்துவத்தை கிள்ளுக் கீரை நிலைக்குத் தள்ளிவிட்டுள்ளது!

# இந்து ஆலயங்களின் பிணக்குகளை தீர்த்து வைக்க 'நடுத்தீர்ப்பு நிலையம்'

## அகில இலங்கை இந்து மன்றம் அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக. 17

இந்து ஆலயங்கள் மற்றும் இந்து சமய நிறுவனங்களில் ஏற்படும் பிணக்குகளைத் தீர்த்து வைப்பதற்கு நடுத்தீர்ப்பு நிலையம் ஒன்றை அமைத்துள்ளதாக அகில இலங்கை இந்து மாமன்றம் அறிவித்துள்ளது.

இந்து ஆலயங்கள் மற்றும் சமய நிறுவனங்கள் எதிர்கொள்ளும் பிணக்குகளை இந்து சமய அறிவுமிக்க நடுவர்கள் மூலம் விரைவாகவும், இலகுவாகவும் தீர்த்துவைக்கும் நோக்கில் அகில இலங்கை இந்து மாமன்றத்தினால் இந்த நடுத்தீர்ப்பு நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதனால் இந்து சமய நிறுவனங்கள், ஆலயங்கள் தாம் எதிர்கொள்ளும் பிணக்குகளைத் தீர்ப்பதற்கு நீதிமன்றங்களுக்குச் செல்ல வேண்டிய தேவையில்லை எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விவரங்களையோ, நடுத்தீர்ப்பு நிலையத்தின் விதிமுறைகளையோ அகில இலங்கை இந்து மாமன்றத்துடன் நேரிலோ, கடிதம் மூலமாகவோ, தொலைபேசி மூலமாகவோ தெரிந்து கொள்ளமுடியும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆலயங்கள், இந்து நிறுவனங்கள் ஆகியவற்றில் இடம்பெறும் பிணக்குகளை நீதிமன்றங்களுக்குச் செல்லாமல் சமரசமான முறையில் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் விரிவாகக் கலந்துரையாடித் தீர்ப்பதற்காகவே இது அமைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-313)

# நெடுந்தீவு பிரதான குளத்தை ஆழப்படுத்தும் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.17

நெடுந்தீவின் பிரதான குளத்தை மேலும் இரண்டடிக்கு ஆழப்படுத்தப்படும் வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

ஏற்கனவே இந்தக் குளம் ஆழப்படுத்தப்பட்டிருந்தது. நன்னீர் திட்டத்துக்கு அமைவாக இது மேலும் ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இதேவேளை நெடுந்தீவுக்குச் சென்ற பாரம்பரிய கைத்தொழில் சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, வடக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரவீந்திரா விஜேகுணரட்ண, மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் என். இளங்கோவன் மற்றும் திணைக்கள அதிகாரிகள், யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் மக்களைச் சந்தித்தனர்.

ஜனாதிபதி, நெடுந்தீவு மக்களின் அனைத்து குறைபாடுகளையும் தீர்த்துவைக்க நடவடிக்கை எடுக்குமாறு அறிவித்துள்ளதாகவும், விரைவில் மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அங்கு தெரிவிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் நெடுந்தீவு பிரதேச சபைக்கு ஒரு உழவு இயந்திரம், இரண்டு பௌசர் வாகனங்கள் என்பன வழங்கப்பட்டன. நெடுந்தீவு விவசாய சம்மேளனத்துக்குஉழவு இயந்திரம் வழங்கப்படவுள்ளதாக இதில் தெரிவிக்கப்பட்டது.

(த-7)

# யாழ்ப்பாணம் நாக விகாரைக்கு நவீன வசதி கொண்ட கட்டடம்

## ரூ. 145 மில்லியன் செலவில் அமைக்கப்படும்

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ்ப்பாணம் ஸ்ரீ நாக விகாரையில் 145 மில்லியன் ரூபா செலவில் சகல வசதிகளும் கொண்ட நவீன கட்டடத் தொகுதி ஒன்று விரைவில் அமைக்கப்படவுள்ளது.

தமிழ் பௌத்த சங்க காரியாலயம், இந்து பௌத்த கலாசாரமண்டபம், தியான மண்டபம், தங்குமிட விடுதி ஆகியவை இந்தத் தொகுதியில் உள்ளடக்கப்படவுள்ளன.

ஸ்ரீ நாக விகாரை விகாராதிப்பதியின் வழிகாட்டலில் நிதி பெறப்பட்டு இந்த நவீன கட்டடத் தொகுதி நிறுவப்படவுள்ளது என யாழ். மாவட்ட தமிழ் பௌத்த சங்கத் தலைவர் எஸ். ரவீந்திரன் தெரிவித்தார். இந்தக் கட்டடத் தொகுதி அமைப்பதை விரைவுபடுத்துவது குறித்த கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் 26ஆம் திகதி ஸ்ரீ நாகவிகாரையில் இடம்பெறவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-14)

# கொழும்பு மாநகர சபையின் அரச தரப்பு முதன்மை வேட்பாளராக மொறகொட

கொழும்பு, ஒக.17

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கொழும்பு மாநகர சபையின் முதல்வர் பதவிக்கான வேட்பாளராக முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமான மிலிந்த மொறகொடவை நிறுத்துவது தொடர்பாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கும் மிலிந்த மொற கொடவுக்கும் இடையில் விசேட சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

ஜனாதிபதியின் சீன விஜயத்தின் பின்னர் ஜனாதிபதி மாளிகையில் மேற்படி சந்திப்பு இடம் பெற்றதாக அரச வட்டாரங்கள் தெரிவித்தன. மொறகொடவை கொழும்பு மாநகர முதன்மை வேட்பாளராக நிறுத்துவதற்கு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மேற்கொண்டுள்ள தீர்மானம் பற்றி இந்தச் சந்திப்பில் வைத்து ஜனாதிபதி பல காரணங்களைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

கொழும்பு வாழ் முஸ்லிம்கள் மற்றும் பெரும் எண்ணிக்கையான தமிழ்மக்களின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும், சிறுபான்மை இனக் கட்சிகளின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும், நகர்ப் புற அபிவிருத்திக்கு வெளிநாட்டு முதலீடுகள் மற்றும் சர்வதேசத்தின் ஒத்துழைப்பைப் பெறுவதற்கும் மொறகொட கொண்டுள்ள ஆற்றல் காரணமாக முதன்மை வேட்பாளர் பதவிக்குத் தகுதியானவர் மிலிந்த மொறகொடவே எனவும் இங்கு தெரிவிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. (த-22)

# 'ஜனசெவன' திட்டத்தின் கீழ் வடக்கில் 1,000 வீடுகள்

கொழும்பு, ஒக.17

'ஜனசெவன' வேலைத்திட்டத்தின்கீழ் வடமாகாணத்தில் மீள்குடியேறவுள்ள குடும்பங்களுக்கு ஆயிரம் வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

இவ்வேலைத்திட்டத்தின் கீழ் வடக்கின் அனைத்து மாவட்டங்களுக்கும் 200 வீடுகள் என்ற ரீதியில் வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மற்றும் வவுனியா ஆகிய மாவட்டங்களிலுள்ள குடும்பங்களுக்கே இந்த வீடுகள் பகிர்ந்தளிக்கப்படவுள்ளன.

[illegible] வீடமைப்பு, பொதுவசதிகள் அமைச்சினூடாக இவ்வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளதாக அமைச்சர் விமல் வீரவன்ஸ தெரிவித்துள்ளார். (ஒ-சி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்துக்கான போராட்டம்

01



02






03



04







05








06

01, 02, 03, 04, 05 - தென்னிலங்கை ஊடகவியலாளர்கள் கருத்துச் சுதந்திரப் போராட்டத்தில் ஈடு பட்டுள்ள பல்வேறு கோணங்கள்.

06, 07 - போராட்டத்தின் போது பொலிஸாருடன் இடம்பெற்ற முரண் பாட்டில் வாதாடும் நாடாளுமன்ற உறுப் பினர் சுரேஷ் பிரேமச்சந்திரன்.



07




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கருத்துச் சுதந்திரத்துக்கான போராட்டம்


















01- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி விஜயகலா மகேஸ்வரன்.

02- யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஈ.சரவணபவன், எஸ்.சிறிதரன், சுரேஷ் பிரேமச்சந்திரன் மற்றும் உதயன் பிரதம ஆசிரியர் ம.வ.கானமயில்நாதன்.

03- மூத்த ஊடகவியலாளர் என்.வித்தியாதரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் மு.கஜேந்திரன் .

04- தென்னிலங்கை சுதந்திர ஊடக அமைப்பினரின் போராட்டமும் பொலிஸாருடனான கருத்து முரண்பாடும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உதயன்
17 ஒகஸ்ட் 2011 புதன்கிழமை



யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை நடத்திய சைவ மகாநாட்டில் இடம்பெற்ற இசையரங்கில் திருமதி விஷ்ணுப்பிரியா பாடுகிறார். கச்சேரியில் மிருதங்கம் பிரம்மஸ்ரீ க.சுவாமிநாதன் சர்மா, வயலின் ஏ.ஜெயராமன் ஆகியோர் பக்க வாத்தியம் இசைக்கின்றனர்.

# லண்டனில் நிர்க்கதியான மாணவர்கள் குறித்து தேவையற்ற பீதி வேண்டாம்:

## லண்டன் தூதரகம் தெரிவிப்பு

லண்டனில் கல்விக் கற்கச் சென்று அங்கு நிர்க்கதியாகியுள்ள இலங்கை மாணவர்கள் குறித்து தேவையற்ற பீதியடையடைய வேண்டாம் என்று லண்டனில் உள்ள இலங்கை தூதரகம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு நிர்க்கதியான மாணவர்கள் தொடர்பில் தூதரகம் ஊடாக ஆராய்ந்து வருவதாகவும் அவர்களுடைய பிரச்சினை தொடர்பில் தலையிட முன்வந்துள்ளதாகவும் இலங்கை தூதரகத்தின் குடிவரவு மற்றும் தூதர் நடவடிக்கை தொடர்பான அமைச்சின் ஆலோசகர் சமிந்த குலரட்ண தெரிவித்துள்ளார்.

லண்டன் உயர்கல்வி நிறுவனம் மூடப்பட்டுள்ளதால் நிர்க்கதியானவர்களில் 38 இலங்கை மாணவர்களின் பெயர் தூதரகத்தில் தற்போது கிடைத்துள்ளது எனவும் சுமார் 80 இலங்கை மாணவர்கள் இவ்வாறு நிர்க்கதியா கியுள்ளதாக அறியக்கிடைப்பதாகவும் அவர் கூறியுள்ளார்.

இவர்களை லண்டனுக்கு அழைத்துச்சென்ற இரு நிறுவனங்களும் மாணவர் ஒருவரிடம் இருந்து சுமார் 15 லட்சம் ரூபா என்ற ரீதியில் 12 கோடி ரூபா வரையிலான தொகையை மோசடி செய்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது. கொழும்பு, கொள்ளுப்பிட்டி மற்றும் நீர்கொழும் பிலுள்ள இரு வர்த்தக நிறுவனங்கள் மூலமாகவே இவர்கள் லண்டனுக்கு அனுப்பப்பட்டுள்ளனர். இந்த மாணவர்களின் பிரதிநிதிகள் சிலர் லண்டனிலுள்ள இலங்கைத் தூதரகத்தில் இது குறித்து முறைப்பாடு செய்துள்ளதாகத் தூதரக அமைச்சின் ஆலோசகர் சமிந்த குலரத்ன தெரிவித்துள்ளார்.

இந்த முறைப்பாட்டை அடுத்து அது பற்றிய விசாரணை யொன்று மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கும் சமிந்த குலரத்ன, லண்டன் அரசின் உயர்மட்ட அதிகாரிகள் மற்றும் இலங்கையின் வெளியுறவு அமைச்சுக்கும் நிலைப்பாடு தெளிவுபடுத்தப்பட்டதாகவும் தெரிவித்துள்ளார்.


## தவறிவிட்டது

58, லோட்டஸ் வீதி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த திருமதி தேவகி கந்தவனச் செல்வன் என்பவரது தே.அ.அட்டை (728343389V) 10.08.2011 அன்று யாழ்ப்பாணத்துக்கும் ஆறுகால்மடத்துக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் மேற்காணும் முகவரியில் ஒப்படைத்துதவவும். T.P. 0776087497



## தென்மராட்சி பனை தென்னை வள அ.கூ.சங்கங்களின் கொத்தணி, வரணி

## பதவி வெற்றிட விண்ணப்பம் கோரல்

பதவி: வடிசாலை முகாமையாளர் (நிரந்தரம்)
குறியீட்டு இலக்கம்: 115/10
சம்பள அளவுத் திட்டம்: 10700 - 13200
120x10 - 130x10 (சுற்றுநிருப இல. 66/2006 இன் படி)

மேலே குறிப்பிட்டுள்ள பதவிக்கான தகைமையுள்ள விண்ணப்பதாரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

சுற்று நிருபம்: 108/81 (115/8)

தகைமை:

அ) கூட்டுறவுச் சங்க ஊழியர் 11 ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றி பதவியொன்றில் மூன்று வருடங்களுக்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுச் சங்க ஊழியர் 12 ஆம் சம்பளத்திட்டத்தில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய 6 வருடத்துக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றில் பட்டதாரிப் பரீட்சையில் சித்தி அல்லது அதற்கு சமமான தகைமைகள்.

இ) கூட்டுறவுச் சங்க ஊழியர் (உயர் தரம்) சான்றிதழ்/க.பொ.த. உயர்தரம் 3 பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் தொடர்புபட்ட வியாபார அலுவல்கள் பற்றிய 3 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

வயதெல்லை: 18 - 45 இற்கு இடைப்பட்டவர்கள்

ஏனைய விபரங்கள்:

அ) கொத்தணியினால் வழங்கப்படும் விண்ணப்பங்களை மாத்திரம் பூர்த்தி செய்து அனுப்புதல் வேண்டும்.

ஆ) மேலே காணப்படும் பதவிக்கு விண்ணப்பங்களை சமர்ப்பிக்க விரும்புவோர் விண்ணப்ப படிவங்களை கட்டணம் செலுத்தி பெற்று உரிய வகையில் பூர்த்தி செய்து அவசியமான இணைப்புக்களுடன் 30.08.2011 ஆம் திகதிக்கு முன்னர் 'தலைவர் தென்மராட்சி பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி, பருத்தித்துறை வீதி, வரணி' என்ற முகவரிக்கு கிடைக்கத்தக்கதாக நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ அனுப்பி வைத்தல் வேண்டும். குறித்த திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படமாட்டாது.

இ) தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ள பணியாளர்களுக்கு வயதெல்லை ஏற்புடையதாகாது.

ஈ) தற்போது கூட்டுறவுச் சேவையிலுள்ளவர்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கும்போது தங்கள் விண்ணப்பங்களை சம்பந்தப்பட்ட சங்கத்தின் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

உ) விண்ணப்ப முடிவு திகதி (30.8.2011)

ஊ) சங்க எல்லைப்பரப்பில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

தலைவர்.


## 80 வயதைக் கடந்தோருக்கு ஓய்வூதியத் திட்டம்

கொழும்பு, ஓக 17

இலங்கையில் 80 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

இந்த நடவடிக்கைளுக்கு அமைச்சரவையின் அனுமதி கிடைத்துள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

இந்த திட்டத்திற்காக பயனாளிகளிடமிருந்து பணம் அறவிடப்படமாட்டாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## கருத்தரங்கு

நல்லூர் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையில் சுதுமலை வடக்கு இளைஞர்கழகம் நடத்தும் இலவச புலமைப் பரிசில் கருத்தரங்கு நாளை வியாழக்கிழமை காலை 8.30 மணி தொடக்கம் பிற்பகல் 2 மணி வரைசுதுமலைசிந்மய பாரதி வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கருத்தரங்கில் முன்னணி ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்ட பரீட்சை எதிர்பார்ப்பு வினாக்கள் தொடர்பான கையேடு ஊடான விளக்கக் கற்பித்தல்கள் இலவசமாக விநியோகிக்கப்படவுள்ளன. எனவே அன்றைய தினமே பதிவுகளை மேற்கொண்டு மேற்படி கையேடுகளைப் பெற்றுக்கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.


## (YEC) ENGLISH CLASSES

Students => Grade 01 - O/L &
Youths => Spoken English

Spoken English அடிப்படையிலிருந்து மிக இலகுவாக எழுத, வாசிக்க கதைக்கும் அளவுக்கு கற்பிக்கப்படும்.
... 01 - O/L ...
பரீட்சைகள் நடத்தி மாணவர்களின் நிலை அறிந்து மிகத் தெளிவாக கற்பிக்கப்படும்.
யமுனா வீதி, நல்லூர், யாழ்ப்பாணம். தொ.இல. 0773027375


# இலங்கையின் வீடமைப்புக் கலையின் பழமையான சான்றுகள் கண்டுபிடிப்பு

கொழும்பு, ஓக 17

இலங்கையின் வீடமைப்புக் கலை தொடர்பிலான மிகவும் பழமை வாய்ந்த சான்றுகள் ஹல்து முல்ல பகுதியில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாராய்ச்சிகளின் போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த சில வாரங்களாகத் தொல் பொருள் ஆராய்ச்சியாளர் கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளின் போது இந்தச் சான்றுகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகக் களனிப் பல்கலைக் கழகத்தின் தொல்பொருள் பட்ட பின் படிப்பு கற்கை நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

கண்டுபிடிக்கப்பட்டுள்ள பழமை வாய்ந்த விடுகளின் சிதைவுகள் சுமார் 3 ஆயிரத்து 750 வருடங்கள் பழமை வாய்ந் ததாக இருக்கலாம் எனத் தொல்பொருள் நிபுணர்கள் அனுமானித்துள் ளனர்.

கடந்த வருடம் ஹல் துமுல்ல பகுதியில் கண்டுபிடிக்கப்பட்ட புராதன மயானத்தை அண்மித்த பகுதியில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது பழமை வாய்ந்த வீடுகளின் சிதைவுகள் கண்டுபிடிக்கப்பட்டதாகப் பேராசிரியர் ராஜ் சோமதேவ தெரிவித்துள்ளார்.

குறித்த பகுதியில் இருந்த குடியேற்றங்கள் தொடர்பிலான தகவல்களைக் கண்டறியும் வகையில் தொடர்ந்தும் அகழ்வாராய்ச்சி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# அருகிவரும் தாவரங்களை பாதுகாக்க நடவடிக்கை

கொழும்பு, ஓக 17

இலங்கையிலுள்ள தாவரங்களில் 5 வீதமானவை அருகி வருவதாகத் தேசிய உயிரியல் பல்வகைமை செயலகம் சுட்டிக்காட்டியுள்ளது.

இதில் இலங்கைக்கே உரித்தான சில தாவரங்களும் அடங்குவதாக அதன் பணிப்பாளர் காமினி கமகே தெரிவித்துள்ளார்.

அருகிவரும் தாவரங்களைப் பாதுகாப்பதற்கான துரித திட்டமொன்றைச் செயற்படுத்த வேண்டியதன் அவசியத்தையும் தேசிய உயிரியல் பல்வகைமை செயலகம் வலியுறுத்தியுள்ளது.

இதற்கமைய பொது மக்களின் ஒத்துழைப்புடன் தாவரங்களைப் பாதுகாப்பதற்கான விசேட திட்டமொன்றைச் செயற்படுத்துவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது என்றார். (ற)




## தெல்லிப்பழை மேற்கு, வித்தகபுரம். பொற்கலந்தம்பை ஸ்ரீ ஞான வைரவர் ஆலய

### மண்டலாபிடேகப் பூர்த்தியும் அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிடேகமும் (1008 சங்கு)

ஞான வைரவப் பெருமான் அடியார்களே!

எதிர்வரும் ஆவணித் திங்கள் 2 ஆம் நாள் 19.08.2011 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு மண்டலாபிடேகப் பூர்த்தியும், அஷ்டோத்திர சகஸ்ர சங்காபிடேகமும் ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து மகேஸ்வர பூசையும் மாலை 5 மணிக்கு திரு ஊஞ்சலும், தண்டிகை உற்சவமும் நடைபெறும். அடியார்கள் மேற்படி கிரியைகளில் கலந்துகொண்டு வைரவப் பெருமானின் திருவருளைப் பெற்றுய்யுமாறு வேண்டுகின்றோம்.

பொற்கலந்தம்பை,
தெல்லிப்பழை மேற்கு.

ஆலய பரிபாலன சபை.



## நன்றி கூறுகின்றேன்



நடைபெற்று முடிந்த வலி. கிழக்கு பிரதேச சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வீட்டுச் சின்னத்தில் போட்டியிட்ட என்னை தங்கள் பொன்னான வாக்குகளை அளித்து வெற்றி பெறச் செய்த இப் பிரதேச வாக்காளப் பெருமக்களுக்கும், எனது வெற்றிக்கு உறுதுணையாக நின்று உழைத்த அன்பு நெஞ்சங்களுக்கும், சர்வசதேத்துக்கு தமிழர் தம் ஒற்றுமையையும் பலத்தையும் வெளிப்படுத்திய யாழ்.தேர்தல் மாவட்ட வாக்காள அன்பு உள்ளங்களுக்கும் இரு கைகூப்பி, சிரம் தாழ்த்தி எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கணபதிப்பிள்ளை துரைசிங்கம்
(ஓய்வுபெற்ற ஆசிரியர்)

(6950)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியனம் கேட்டீர்களா?

## சரி செய்வதற்கு இன்னும் எத்தனையோ உண்டு

வலிகாமம் வடக்கில் மக்கள் மீளக்குடியமர்ந்த பகுதிகளில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றி ஊடகங்களில் செய்திகள் வெளிவருகின்றன. வலிகாமம் வடக்கு செம்மண் பூமி. இங்கு விவசாயம் செய்பவர்கள் அதிகம். மரக்கறிப் பயிர்கள் சிறப்பாக விளையும் பல பிரதேசங்கள் இங்குள்ளன.கடற்காற்றின் ஆதிக்கம் உள்ளதால் இந்தப் பிரதேசத்தில் பீடைகளின் தாக்கம் குறைவாகவுள்ளது.எனவே வளலாய், பலாலி, மயிலிட்டி, காங்கேசன்துறை,கீரிமலை போன்ற இடங்களில் மார்கழி, தை மாதங்களில் ஏனைய பிரதேசங்களில் விளைச்சல் குறைவான தக்காளி முத லான மரக்கறிகள் நன்றாக விளைந்து சந்தைக்கு வரும். அது மட்டுமன்றி வெற்றிலைச் செய்கைக்குப் பெயர் பெற்ற கொல்லங்கலட்டி, மாவிட்டபுரம், பன்னாலை,கருகம்பனை ஆகிய கிராமங்களும் இங்குதான் உள்ளன.பழமரங்களும் இங்கு நிறைந்திருந்தன.குறிப்பாகச் சொல்வதானால் வலிகாமத்தின் சந்தைகளை நிறைத்து, கொழும்பு வரை பரவியவை வலிகாமம் வடக்கின் விளைபயிர் உற்பத்திகளே.

இந்தப் பிரதேசத்தை வடக்கே கடல் எல்லைப்படுத்துகின்றது.எனவே சிறந்த மீன் வளம் நிறைந்த பகுதியும் இங்குள்ளது.இந்தியாவையும் இலங்கையையும் இணைக்கும் குறுகிய கடல்வழியான பாக்கு நீரிணைக்கு அணித்தான,ஆழங்குறைந்த,மீன்கள் இனம்பெருகக் கூடிய பல்லுருவ அமைப்பையுடைய அடையற்பாறைகள் நிறைந்த கடற்பகுதி என்பதால் மீன்வளம் கூடிய பகுதியாகவும் இது உள்ளது. இங்குதான் மயிலிட்டியில் மீன்பிடித் துறை காணப்படுகிறது.அதையடுத்த காங்கேசன்துறை யில் வர்த்தகத் துறைமுகம் காணப்படுகிறது. யாழ்ப்பாணம் மட்டுமல்ல வடபுலத்து இளைஞர்களுக்கு அதிகளவில் வேலைவாய்ப்பினை காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலை வழங்கியது. மாவிட்டபுரம் வாளித்தொழிற்சாலை, கண்ணாடித் தொழிற்சாலை,வயாவிளான் தோலகட்டி நெல்லிரசத் தொழிற்சாலை, அளவெட்டி பேனாத் தொழிற்சாலை, மல்லாகம் சோடா உற்பத்தித் தொழிற்சாலை, கீரிமலை பனங்கட்டித் தொழிற்சாலை என எண்ணற்ற உற்பத்தி நிறுவனங்களும் இங்கிருந்தன. எனவே, தன்னிறைவு பெற்ற சிறந்த கிராமங்கள் கொண்ட வளமான பூமியாக வலிகாமம் வடக்குத் திகழ்ந்தது.

1987இல் இடம்பெற்ற 'ஒபரேசன் லிபரேசன்' இராணுவ நடவடிக்கையுடன் இந்த நிலைகள் மாற்றமுற்றன. திடீரென மூடை முடிச்சுக்களுடன் வலிகாமம் வடக்கின் பலாலியிலிருந்து ஆரம்பித்த இடப்பெயர்வு படிப்படியாக பல கிராமங்களை இடம்பெயர்த்தியது.அதைத் தொடர்ந்து ஒபரேசன் பூமாலை என்ற பெயரில் இந்தியப் படை விமானங்கள் உணவுப் பொட்டலங்களைப் போட்டன. அத்துடன் இராணுவ நகர்வு நிறுத்தப்பட்டது.பின்னர் 1987 ஜூலையில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் எழுதப்பட்டதும் வலி.வடக்கு மக்கள் மீண்டும் சொந்த இடங்களுக்குத் திரும்பினர். அழிந்த தமது வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பினர். இடையில் இந்திய - புலிகள் யுத்தத்தின் விளைவுகளை மக்கள் அனுபவித்தனர். மூன்றாண்டுகளின் பின்னர் இந்திய இராணுவம் வெளியேறியது.1990 ஜூன் 11ஆந் திகதி மீண்டும் இரண்டாவது ஈழப்போர் ஆரம்பமானது. இருவருடங்களுக்குள் வலி.வடக்கின் கணிசமான பகுதிகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் வந்து விட மக்கள் நிர்க்கதியான நிலைக்குத் தள்ளப்பட்டனர். பல இடங்களிலும் அலைந்து, ஒண்டி வாழ்ந்து, தம்மைத் தேற்றி, சொந்த மண்ணான இந்த மண் இனிக்கிடைக்காது என எண்ணியிருந்தனர். பலரும் வெளிநாடுகளில் தஞ்சமடைந்தனர். வெளிநாட்டுப் பணத்தைக் கொண்டு தாம் வாழ்ந்த பிரதேசங்களில் காணிகளை வாங்கித் தமக்கான வீடுகளை அமைத்தனர்.

20 வருடங்களின்பின் சில பிரதேசங்கள் விடுவிக்கப்பட்டுள்ளன. இன்று வன்னியில் விடுவிக்கப்பட்ட பிரதேசங்களில் மக்கள் விழுந்தடித்துக் கொண்டு மீளக்குடியமர்ந்தனர். ஆனால் வலி.வடக்கில் அவ்வாறு நிகழவில்லை. ஏனெனில் தங்கி வாழ்ந்த இடங்களில் பலருக்கும் சொந்தக் காணியோ,பாதுகாப்பான தங்குமிடமோ இருந்தது. ஏனைய பலரும் கொழும்பிலும், இந்தியாவிலும், புலம்பெயர் நாடுகளிலும் வாழ்கின்றனர். குறைந்தளவானோரே நலன்புரி நிலையங்களில் வாழ்கின்றனர். எனவேதான் வலி.வடக்கு மீள்குடியமர்வு விரைவாக நடக்கவில்லை.

பல இடங்களிலும் மக்கள் சொந்த இடங்களில் மீளக் குடியமர்வது போலக் காட்டி நிவாரணங்களைப் பெற்றுவிட்டு அந்தந்த இடங்களில் நிரந்தரமாகத் தங்குவதில்லை என்பது கிராம அலுவலர்கள், தொண்டு நிறுவனங்களின் குற்றச்சாட்டாகும். ஆனால் பிரதேசத்தின் அடிப்படை வசதிகள் ஏற்படுத்தப்படாத நிலையில் நாம் எப்படி குழந்தை குஞ்சுகளுடன் குடியமர முடியும் என்று மீளக்குடியேறாதுள்ள மக்கள் கேட்கின்றனர். பல இடங்களிலும் பௌசர்கள் மூலம் வரும் தண்ணீரே குடிதண்ணீர்த் தேவையைப் பூர்த்தி செய்கின்றது. அது வராவிட்டால் அல்லது பிந்தினால் அனுபவிக்கும் கஷ்டங்கள் ஒரு புறம். வீடுகள் எல்லாம் அழிந்து பெருவிருட்சங்கள் வீட்டு நிலங்களைப் பிளந்து வளர்ந்துள்ள நிலையில் புதிதாகவே பல வீடுகளை அமைக்க வேண்டியுள்ளது. தரப்படும் 16 தகரங்களுடன் வெயிலில் காய்ந்து மழையில் நனைந்து எவ்வாறு வாழ்வது? என்பது அம்மக்களுடைய கேள்வி.

மலசலகூடங்கள் இல்லை.குழாய்க் கிணறுகள் தூர்ந்து போய்விட்டன. அழிந்து போன விவசாய நிலங்களை மரங்கள் வெட்டி, கட்டைகள் கிளறி, பண்படுத்தி தயார்ப்படுத்துவதென்றால் ஏழைகளால் அது முடியக்கூடியதல்ல. பனைவளம் நிறைந்த வலி.வடக்கில் மருந்துக்கும் பனை, தென்னைகளை இன்று காணமுடியாதுள்ளது.எனவே, சீவல் தொழி லாளிகளின் தலையி லும் மண்தான். இங்குள்ள கூவில் பிரதேசம் கள்ளுக்கும், கருப்பநீருக்கும், பனங்கட்டிக்கும் பெயர் பெற்றது. அப்பெயர் இனி மறைந்துவிடும் போலுள் ளது. கடற்றொழிலாளர் நிலையும் மேம்படவில்லை. வரையறைக்குட்பட்ட பிரதேசத்தில்தான் மீன் பிடிக்கலாம். தேர்தலின் பின் இந்த எல்லை மேலும் குறுகி விட்டதென்கின்றனர் பிரதேச மீனவர்கள். ஒவ்வொரு காற்றுக்கும் ஒவ்வொரு இடமாக மீன்படும். இங்கோ கீரிமலைக்குக் கிழக்கே தலை வைத்தும் படுக்க முடியாது. கடலில் குறித்த எல்லை தாண்டினால் மின் கம்பிகளாலும், தடிகளாலும் அடிவாங்க நேரிடும். சிலவேளை பிடித்த மீன்களையும் இழக்க நேரிடும் என்கின்றனர் அவர்கள். கஞ்சிக்கு உழைக்கும் நிலையிலேயே அவர்களின் வாழ்க்கை கழிகிறது.

ஆள்கள் இல்லாத வீடுகளில் தாராளமாகத் திருட்டு நடக்கிறது. காணிக்காரர்கள், உரிமைக்காரர்கள் இல்லை என்பதைத் தெரிந்து கொண்டு பலரும் கச்சிதமாகத் திருடுகின்றனர். தடுப்பார் எவரும் இல்லை. ஆலயங்களின் பெறுமதி மிக்க அரும்பொருள்கள் பலவும் அகற்றப்படுகின்றன. பலரும் பார்த்து விட்டுப் பேசாதிருக்கின்றனர். கேட்டவர்களுக்கும் இதன் பின்னால் உள்ள தரப்புக்களின் ஆசீர்வாதத்தை எடுத்துக் கூறித் தப்பி விடுகின்றனராம். ஆக, வலி.வடக்கு மீள எழும்ப வேண்டுமானால் அனைத்து வசதிகளும் ஏற்படுத்தப்பட்டு, 20 வருட இழப்புக்கேற்ற சரியான, நீதியான உதவிகள் வழங்கப்பட வேண்டும். அவர்களது அடிப்படை வாழ்வாதாரங்களைக் கட்டியெழுப்பவும்,பிரதேசத்தின் தொழில்நிலை மேம்படவும் வாய்ப்பளிக்கப்பட வேண்டும். எஞ்சிய அனைத்துப் பிரதேசங்களிலும் மக்கள் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். அப்போதுதான் வலி.வடக்கு மீள் குடியமர்வு என்பதும் பொருத்தப்பாடானதாக இருக்கும்.

விழிச்சான் குஞ்சு.

# நாட்டின் முக்கிய பிரச்சினைகளுக்கு அரசு விரைந்து தீர்வுகாண வேண்டும்

## மல்வத்த பீடாதிபதி பீரிஸிடம் எடுத்துரைப்பு

கண்டி, ஒக 17

இப்போதைய அரசின் சில நடவடிக்கைகள் தமக்கு மகிழ்ச்சியளிப்பவையாக இல்லையென்று மல்வத்த பீடத்தின் மகாநாயக்கர் திப்பொட்டுவாவே சிறி சித்தார்த்த சுமங்கலதேரர் தெரிவித்துள்ளார்.

வெளியுறவு அமைச்சர் ஜி.எல்.பீரிஸ் சங்கைக்குரிய தேரரை அண்மையில் சந்தித்துக் கலந்துரையாடியபோதே அவர் இவ்வாறு கவலை தெரிவித்ததாகத் தெரிகின்றது.

நாட்டை எதிர்கொண்டுள்ள வடக்கில் வாழும் மக்களின் பிரச்சினைகள் உட்பட எரியும் பிரச்சினைகள் பலவற்றுக்கும் விரைவான தீர்வுகள் காணப்பட வேண்டும்.

வடக்கு வாழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தரமான தீர்வு காணப்படவேண்டும். மீண்டும் ஒரு மோதல் பிரச்சினை எழாமல் இருப்பதற்கு இது அவசியமாகும் என்று கூறினார் மகாநாயக்க தேரர்.

சமயஸ்தாபனங்களின் சொத்துக்கள் தொடர்பான சட்டம் திருத்தப்படும்போது மகாசங்கத்துக்கான சாஸனம் ஒன்றைச் சேர்த்துக் கொள்வது பற்றி ஆலோசிக்கும்படி தாம் கேட்டுக் கொண்டதாக ஜனாதிபதியிடம் தெரிவிக்கும்படி மகா நாயக்க தேரர் அமைச்சரைக் கேட்டுக் கொண்டார்.

பௌத்த குருமார்கள் அரசியலில் ஈடுபடுவதைத் தடுப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று மகாநாயக்கதேரர் அமைச்சர் பீரிஸிடம் தெரிவித்துள்ளார்.

மகாசங்க சாஸனத்தைப் பாதுகாக்காவிட்டால் மக்கள் எம்மைக் குறை கூறுவார்கள். இவைகள் பற்றி ஜனாதிபதிக்கு எடுத்துக் கூற வேண்டும். அரசின் சில செயற்பாடுகளில் நான் மகிழ்ச்சியடையவில்லை என்று மகாநாயக்க தேரர் அமைச்சர் பீரிஸிடம் தெரிவித்துள்ளார். (ப)

## என்றும் நினைவில்...



தேசிய சுதந்திர முன்னணியின் ஏற்பாட்டில் கியூபாவின் முன்னாள் ஜனாதிபதி பிடல் கஸ்ட்ரோவின் 85ஆவது பிறந்த தினம் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கொழும்பு திரைப்பட கூட்டுத்தாபனத்தில் கொண்டாடப்பட்டது. இந்த நிகழ்வில் அமைச்சர்களான வாசுதேவ நாணயக்கார,விமல் வீரவன்ச, இலங்கைக்கான கியூபா தூதர் நிர்ஸியா காஸ்ட்ரோ,இலங்கைக்கான பலஸ்தீன் தூதர் கலாநிதி அன்வர் அல்கா ஆகியோர் கலந்து கொண்டனர்.

# எரிபொருள் விற்பனையின்போது பற்றுச்சீட்டு வழங்குவது கட்டாயம்

கொழும்பு,ஒக,17

எரிபொருள் விற்பனையின் போது நுகர்வோருக்கு எரிபொருள் நிரப்பும் நிலையங்கள் பற்றுச்சீட்டுக்களை விநியோகிக்க வேண்டியது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

இதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு அமைச்சர் சுசில் பிரேம்ஜயந்த இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு அறிவித்துள்ளார் எனப் பெற்றோலிய வளத்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தீர்மானம் தொடர்பாக நாட்டிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையங்களையும் தெளிவுபடுத்த இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சந்தைப்படுத்தல் பிரிவு நடவடிக்கை எடுத்துள்ளது. (ச)

# சமையல் எரிவாயுவின் விலையை 570 ரூபாவால் அதிகரிக்க கோரிக்கை

கொழும்பு, ஒக. 17

சமையல் எரிவாயுவின் விலையை அதிகரிப்பதற்கு அனுமதியளிக்குமாறு நுகர்வோர் விவகார அதிகார சபையிடம் 'லாவ் காஸ்' நிறுவனம் கோரிக்கை விடுத்துள்ளது.

ஒரு சிலிண்டர் காஸ் விலையை 570 ரூபாவினால் அதிகரிப்பதற்கு அனுமதியளிக்குமாறே 'லாவ் காஸ்' நிறுவனம் கோரியுள்ளது என இந்த அதிகார சபையின் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

இந்தக்கோரிக்கை தொடர்பாக நுகர்வோர் விவகார அதிகார சபை இன்னும் தீர்மானம் எதையும் மேற்கொள்ளவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது. (ச)

# அரச - தனியார் பஸ்கள் ஒன்றிணைந்த நேரசூசி

கொழும்பு, ஒக.17

செப்டெம்பர் மாதம்முதல் அனைத்து மாவட்டங்களிலும் ஒத்துழைப்புடன் கூடிய சீரான நேர அட்டவணையின் கீழ் பஸ்சேவையை முன்னெடுப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்வதற்கான வேலைத்திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என போக்குவரத்து சேவை திட்டமிடல் பணிப்பாளர் எச்.டபிள்யூ. விபுல சேன தெரிவித்துள்ளார்.

ஒத்துழைப்புடன் 'கூடிய நேர அட்டவணையின் கீழ் சீரான பஸ் சேவைகளை முன்னெடுக்க முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்களுக்கென தனியான பஸ் சேவை யாழ்.மாவட்டத்திலும் ஏற்படுத்தக் கோரிக்கை

## மகளிர் அபிவிருத்தி நிலையம்

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ்.மாவட்டத்திலும் பெண்களுக்கென பிரத்தியேக போக்குவரத்துச் சேவையை ஏற்படுத்துமாறு யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் மகளிர் விவகார அமைச்சின் முயற்சியால் கொழும்பில் மகளிருக்கென தனியான போக்குவரத்து சேவையை ஆரம்பித்து வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இதே வேளை யாழ்.மாவட்டத்திலும் வேலைக்குச் செல்லும் பெண்கள், பாடசாலை மாணவர்கள், தனியார் மற்றும் அரச பேருந்துகளில் பல்வேறு இடர்பாடுகளைச் சந்தித்து வருகின்றனர்.

இது தொடர்பான பல்வேறு முறைப்பாடுகள் மகளிர் அபிவிருத்தி நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே இவ்வாறான இடர்பாடுகளைத் தீர்ப்பதற்கும் பெண்களின் உடல், உளத் தாக்க நெருக்கடிகளைப் போக்குவதற்கும் மகளிருக்கென தனியான பஸ் சேவையை ஈடுபடுத்துமாறு யாழ்.மாவட்ட மகளிர் அபிவிருத்தி நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது. (ம-313)

# மீள்குடியமர அனுமதிக்கப்படாத மாதகலில் திருடப்படும் மரங்கள்

## நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை

சண்டிலிப்பாய், ஒக.17

கடற்படையினரின் கட்டுப்பாட்டிலுள்ள மக்கள் மீள்குடியமர இதுவரை அனுமதிக்கப்படாத மாதகல் மேற்கு பிரதேசத்தில் உள்ள காணிகளில் பயன்தரு மரங்கள் திருட்டுத் தனமாக வெட்டப்பட்டு வாகனங்களில் ஏற்றிச் செல்லப்படுகின்றன.

இத் துணிகரமான செயல் குறித்துக் கவலையடைந்துள்ள காணியின் உரிமையாளர்கள், மரம் வெட்டப்படுவதை தடுத்து நிறுத்த சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இப்பகுதி மக்கள் 20 வருடங்களுக்கு மேலாக உறவினர் வீடு, வாடகை வீடு, அகதி முகாம்களிலும் வசித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம-115)

# நள்ளிரவு வேளையில் தாதியர் கல்லூரி மதில் ஏறிப்பாய்ந்த இளைஞர்

யாழ்ப்பாணம், ஒக.17

மதுபோதை தலைக்கேறிய நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் உள்ள தாதியர் கல்லூரி மதில் ஏறி உள்ளே பாய்ந்தார் இளைஞர். விடுதியில் சிகிச்சை பெறும் உறவினர் ஒருவரைப் பார்க்க வேண்டும் என்று பிடிவாதம் பிடித்தார். தொடர்ந்து அடாவடியில் இறங்கிய அந்த இளைஞரை மடக்கிப் பிடித்து இராணுவத்தின் உதவியுடன் வெளியேற்றினர் பாதுகாப்பு ஊழியர்கள்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு 11.30 மணியளவில் இடம்பெற்றது.

போதையில் தள்ளாடிய நிலையில் சேட் எதுவுமின்றி சாரத்துடன் மட்டுமே அந்த இளைஞர் காணப்பட்டார். (ஒ-4)



கீரிமலை நகுலேஸ்வர மகாவித்தியாலயத்தில் பதில் அதிபராகக் கடமையாற்றிய த.மோகன்ராஜ் இடமாற்றம் பெற்றமையை அடுத்து பாடசாலைச் சமூகத்தால் அவருக்குச் சேவை நயப்பு விழா நடத்தப்பட்டது. இந்த நிகழ்வில் விழா நாயகர் முன்னாள் அதிபர் க.சிவபாதரத்தினத்தால் கௌரவிக்கப்படுகின்றார். (ம-38)

# பீற்றூட் விலை குறைவடைந்ததால் விவசாயிகள் பாதிப்பு

அளவெட்டி, ஒக.17

யாழ்ப்பாணத்தில் பீற்றூட் 10 ரூபாவாக விலை குறைவடைந்துள்ளதால் விவசாயிகள் பாதிப்படைந்துள்ளதாகத் தெரிவிக்கின்றனர்.

அளவெட்டி, மல்லாகம், கந்தரோடை, பன்னாலைப் பகுதியில் அதிகப்படியான பீற்றூட் பயிரிடப்பட்டு விளைச்சல் நல்ல முறையில் உள்ளபோதும் இந்த முறை யாழ்.மாவட்டம் முழுவதும் பீற்றூட் அகதிமாகப் பயிரிடப்பட்டுள்ளதால் அதன் விலை வீழ்ச்சி அடைந்துள்ளதாக விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

தென் பகுதி விவசாயிகள் பீற்றூட் கிழங்கில் அதிகம் நாட்டம் காட்டாமையும் இதற்குக் காரணமாம் என்றும் மேலும் தெரிவிக்கின்றனர். (எ-36)

# கல்வி வளர்ச்சி நிதியத்துக்கு 10 லட்சம் ரூபா நிதி உதவி

## சாவகச்சேரி வர்த்தகர் வழங்கினார்

தென்மராட்சி, ஒக. 17

சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றத்தின் கல்வி வளர்ச்சி நிதியத்துக்கு மேலும் பத்து லட்சம் ரூபா நிதி உதவி கிடைத்துள்ளது.

சாவகச்சேரி நகர்ப்பகுதி வர்த்தக நிலையங்களின் உரிமையாளரான சரா தாமோதரம் என்பவர் தனது குடும்பத்தின் சார்பாக வறிய மாணவர்களுக்கு மாதாந்தம் வழங்கவென இந்தத் தொகையை வழங்கியுள்ளார்.

கடந்த சனிக்கிழமை இந்தத் தொகையை வணிகர் மன்ற நிர்வாகத்தினரிடம் சரா தாமோதரம் கையளித்தார்.

மன்றத்தினால் ஏற்கனவே 32 மாணவவர்களுக்கு மன்ற உறுப்பினர்கள் மூலம் மாதாந்தம் கல்வி வளர்ச்சி நிதி வழங்கப்பட்டு வருவதால் சரா தாமோதரம் வழங்கிய நிதி உதவியுடன் உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை 50 ஐ தாண்டு மென மன்றத் தலைவர் வ. நீ. பிரகாஸ் தெரிவித்தார்.

மன்றத்தினால் மேலும் பதுக்கு மேற்பட்ட கல்வி அபிவிரு நிதியங்களின் மூலமும் வித நிதியம் மூலமும் ஊன றோர் நிதியம் உதவிகள் புரி வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த மாதம் இலங்கை வங்கி சாவகச்சேரி கிளையின் முன்னாள் முகாமையாளர் க.சந்திரகுமாரும், யாழ். பல்கலைக்கழக உபவேந்தர் செல்வி வசந்தி அரச ரத்தினமும் மன்றத்தின் கல்வி வளர்ச்சி நிதியத்துக்கு நிதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த-207)

# வீதி அகலிப்பு பணிகளுக்காக சனி, ஞாயிறு மின் தடை

யாழ்ப்பாணம், ஒக.17

யாழ்.மாவட்டத்தின் பல இடங்களிலும் வீதி அகலிப்பு மற்றும் பராமரிப்பு வேலைகள் இடம்பெறுவதால் எதிர்வரும் 20 ஆம் திகதி சனிக்கிழமை குறிக்கப்பட்ட பிரதேசங்களில் காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை மின்சாரம் தடைப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதில் உரும்பிராய், கோண்டாவில், மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், யாழ் மாநகரசபைப் பகுதி ,ஸ்ரான்லி வீதி ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும்.

மறுநாள் ஞாயிற்றுக் கிழமை சுன்னாகம், குப்பிளான், மயிலங்காடு, ஏழாலை, காங்கேசன்துறை, உயர்பாதுகாப்பு வலயப்பகுதி, கந்தரோடை, மாகியப்பிட்டி, பண்டத்தரிப்பு, இளவாலை, சங்கானை, மாதகல், வட்டுக்கோட்டை, சுழிபுரம், மூளாய், காரைநகர் பிரதேசம், தீவகப்பிரதேசம், அராலி, இணுவில், உடுவில், மருதனார் மடம், தாவடி, கொக்குவில், நாச்சிமார் கோயிலடி, ஆனைக்கோட்டை, நவாலி, மானிப்பாய், சங்குவேலி, கோண்டாவில், கொட்டடி, கோம்பயன் மணல் பிரதேசம், யாழ்.பட்டனப்பகுதி, புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் ஆகிய இடங்களில் மின்சாரம் தடைப்படும். (ம-313)

# 'குமுதினி' வரும் வரை வடதாரகை சேவை

யாழ்ப்பாணம், ஒக.17

பழுதடைந்த அரச படகான குமுதினிக்குப் பதிலாக வடதாரகை படகு குமுதினியின் பயண நேரம் சேவையை மேற்கொள்ளவுள்ளது.

நெடுந்தீவுப் படகுச் சேவை குறித்து பாரம்பரிய கைத் தொழில் சிறு தொழில் அபிவிருத்தி அமைச்சரும் , மாகாண ஆளுநரும் கடற்படையினரின் கவனத்துக்குக் கொண்டுவந்ததை அடுத்து வடக்குக் கடற்படை கட்டளைத் தளபதிரியர் அட்மிரல் ரவீந்திர விஜேய குணரட்னா 'வடதாரகை' படகை குமுதினிப் படகின் சேவை நேரத்திலும் சேவையில் ஈடுபடுத்துமாறு கடற்படையினருக்கு அறிவித்துள்ளார். (த-7)

# வலிகாமம் கல்வி வலயத்துக்கு அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

யாழ்ப்பாணம், ஒக.17

வலிகாமம் கல்விவலயத்துக்குட்பட்ட யாழ். தாவடி அ.த.க பாடசாலைக்கு (வகை -11) அதிபர் பதவிக்கு வெற்றிடம் உள்ளதால் தகுதியானவர்களிடம் இருந்து விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

இலங்கை அதிபர் சேவை வகுப்பு 2-I, 2 - II அல்லது இலங்கை ஆசிரியர் சேவை தரம் ஒன்று 2-I, 2 - II இல் தகுதியுடையவர்களிடம் இருந்து இந்த விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

விண்ணப்பிப்பவர்கள் வலிகாமம் கல்வி வலயத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கவேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-10)

# நோயாளரைப் பார்க்க வந்தவர் பாதுகாப்பு ஊழியருடன் மோதல்

## பொலிஸார் தலையிட்டுச் சமரசம்

யாழ்ப்பாணம், ஒக. 17

யாழ்.போதனா வைத்தியசாலையில் பாதுகாப்பு ஊழியர் ஒருவர் நோயாளர் ஒருவரைப் பார்வையிடச் சென்ற இளைஞர் ஒருவரும் நேற்று முன்தினம் கடுமையாக மோதிக்கொண்டனர்.

பொலிஸ் நிலையம் வரை சென்ற இந்த மோதல் சம்பவம் பின்னர் பொலிஸாரினால் சமரசமாகத் தீர்த்து வைக்கப்பட்டது.

வைத்தியசாலையில் தங்கி சிசிச்சை பெறும் நோயாளியைப் பார்வையிடச் சென்ற இளைஞர் மற்றும் இரண்டு பெண்கள் நோயளர்களைப் பார்வையிடும் நேரம் நிறைவடைந்த பின்னரும் நோயாளர் விடுதியில் நோயாளியுடன் சுகம் விசாரித்துக் கொண்டு நின்றுள்ளனர்.

பிரஸ்தாப பாதுகாப்பு ஊழியர் அவர்களை விடுதியிலிருந்து வெளியேறுமாறு ஏற்கனவே அறிவித்திருந்ததாகவும், அவர்கள் வெளியேறாததால் இரண்டாவது தடவையாகவும் சென்று வெளியேறுமாறு கூறியதோடு இருவரும் வாய்த்தர்க்கத்தில் ஈடுபட்டு பின்னர் அது கைகலப்பாக மாறியது.

பின்னர் அங்கு நின்றவர்களால் அவர்கள் தடுக்கப்பட்டதோடு யாழ்.பொலிஸ் நிலையத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. பொலிஸார் அவர்களை விசாரணை செய்து எச்சரித்து விடுவித்தனர். (த-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னாரில் மாயமாகிய மர்ம மனிதன் செய்தி பரவியதும் மக்கள் அச்சத்தில்

மன்னார், ஓக.17

மன்னாரில் நடமாடிய மர்ம மனிதனொருவன் மாயமாக ஓடித்தப்பியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் மூர்வீதி காட்டுப் பள்ளிவாசல் வீதிக்கு முன்பாக உணவகம் ஒன்றுள்ளது. இந்த உணவகத்துக்கு முன்னால் நேற்று முன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் சந்தேகத்துக்கிடமான முறையில் மனிதனொருவன் உலாவித் திரிவதைப் பலர் கண்டுள்ளனர்.

மேலும் அந்த மனிதன் அங்கு நின்ற சிலரிடம் தலைமன்னாருக்கு எவ்வாறு செல்வது என்று அர்த்தமில்லாமல் வினவியுள்ளான். இதனால் சந்தேகம் வலுக்கவே கடைக்காரர் ஒருவர் அவனது சேர்ட் பையினுள் கையை விட்டு அவனது அடையாள அட்டையைத் தேடினார்.



ஆனால் அவரது கைக்குக் கிடைத்தோ விவரம் எதுவும் குறிக்கப்படாது படமொன்று ஒட்டப்பட்ட ஓர் அட்டை மட்டுமே. இதற்குள் அந்த மனிதன் மாயமாக மறைந்து விட்டான்.

தகவலறிந்து ஏராளமான பொது மக்கள் அந்த இடத்தில் கூடிவிட்டனர். மேலும் பொலிஸாருக்கும் தகவல் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த சில நிமிடங்களுக்குள் பொலிஸாரும், இராணுவத்தினரும் அந்த இடத்துக்கு வந்ததுடன் உடனடியாகத் தேடுதல் வேட்டையில் ஈடுபட்டனர்.

இந்த சம்பவம் தொடர்பாக மன்னாரில் செய்தி பரவியதும் மக்கள் அச்சத்துடன் காணப்படுவதை அவதானிக்க முடிவதாகவும் தெரியவருகின்றது.

(க-601)

## மடுத் திருப்பதியில் குருதிக்கொடை

மடுத்திருப்பதிப் பெருவிழாவின் போது மடுப் பரிபாலகரின் ஏற்பாட்டில் குருதிக்கொடை நிகழ்வு ஒன்று கடந்த சனிக்கிழமை ஆலயப் பகுதியில் அமைந்துள்ள விசேட வைத்திய நிலையத்தில் நடைபெற்றுள்ளது.

மன்னார் வைத்தியசாலை இரத்த வங்கிப் பிரிவினர் இரத்தம் சேகரிக்கும் நடவடிக்கையில் ஈடுபட்டனர். இக்குருதிக் கொடை நிகழ்வில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட சிங்கள, தமிழ் மக்கள் பங்களிப்புச் செய்தனர்.

சமாதானத்தின் அன்னையாகிய மடுமாதாவின் பெயரால் பேதங்கள் மறந்து ஒருமனதுடன் குருதியைத் தானம் செய்த அனைவருக்கும் அன்னையின் ஆசியும் சமாதானமும் கிடைக்கும் என திருத்தலப் பரிபாலகர் அருட்திரு எமிலியாஸ்பிள்ளை தெரிவித்தார்.

(க-135)

## நேர காலம் இல்லாமல் திடீர், திடீரென

# முன்னறிவித்தல் ஏதுமின்றி மின்தடை கிளிநொச்சி மக்கள் பெரும் பாதிப்பில்

கிளிநொச்சி,ஓக.17

கிளிநொச்சியில் எவ்வித முன்னறிவித்தலுமின்றித் திடீர் திடீரென மின்சாரம் தடைப்படுவதால் பலரும் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தில் சில பகுதிகளுக்கே மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது. பல பகுதிகள் மின்சாரமின்றியே காணப்படுகின்றன. ஆனால் மின்சாரம் வழங்கப்படும் இடங்களில் எந்தவித முன்னறிவித்தல்களுமின்றி மின்சாரம் தடைப்படுவதால் பலரும் சிரமங்களுக்கு ஆளாகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் மின்சாரம் தடைப்படுவதாக இருந்தால் பத்திரிகைகள் மூலம் முன்னறிவித்தல் வழங்கிவிட்டே தடை செய்கின்றனர்.

இதனால் மக்கள் மின்சாரம் தடைபடும் நேரத்தில் மாற்றொழுங்கை மேற்கொள்ள முடிகின்றது.

ஆனால் கிளிநொச்சியில் இந்த நடைமுறை பின்பற்றப்படுவதில்லை. இதனால் மின்சாரத்தின் உதவியுடன் சாதனங்களை இயக்கி நடைபெறவிருந்த பல கருத்தரங்குகள், வகுப்புகள் என்பனவற்றைக் கைவிட வேண்டிய பல சந்தர்ப்பங்கள் ஏற்பட்டுள்ளன.

இதைப்போன்றே தொழிற்சாலைகள், பட்டறைகள், வர்த்தக நிலையங்கள் என்பனவும் பாதிக்கப்பட்டு வருகின்றன.

எனவே இந்த மாவட்டத்தில் மின்சாரத்தைத் தடைசெய்யும் முன்னர் உரிய அறிவித்தல்களையாவது வழங்குமாறு பாதிக்கப்பட்ட மக்கள் மின்சார சபையினரைக் கேட்டுக்கொள்கின்றனர்.

(க-426)

## கூட்டுப் பிரார்த்தனை...




மடுத் திருப்பதியில் மன்னார் ஆயர் இராயப்பு யோசப் முன்னிலைப்படுத்த கர்தினால் மல்கம் ரஞ்சித், மட்டக்களப்பு - திருமலை துணை ஆயர் பொன்னையா யோசப், அநுராதபுரம் ஆயர் நொபேட் அன்ராடி ஆகியோர் கூட்டுத் திருப்பலி வழங்குகின்றனர்.

# ஈழத் தமிழரின் இன்றைய வரலாறுகள் தெளிவாக உரிய முறையில் பதிவு செய்யப்பட வேண்டும்

## அருட்திரு தமிழ்நேசன் அடிகளார் கூறுகிறார்

ஈழத்தமிழரின் பண்டைக் கால புராதன வரலாறுகள் தெளிவற்றவையாகவும், சான்றாதாரங்கள் குறைவானதாகவும் இருப்பதற்குக் காரணம் தமிழர்களிடம் தமது வரலாற்றைப் பதிவு செய்கின்ற வழக்கம் குறைவானதாக இருந்தமையே ஆகும். ஈழத்தமிழரின் இன்றைய வரலாறுகள் உரிய முறையில் பதிவு செய்யப்பட்டு அடுத்த தலைமுறைக்குக் கையளிக்கப்பட வேண்டும்.

இது இன்றைய காலத்தின் கட்டாயதேவையாகும் என மன்னார் மறைமாவட்ட சமூகத் தொடர்பு அருட்பணி மையத்தின் இயக்குநரும், மன்னார் பத்திரிகையின் ஆசிரியரும் மன்னார் தமிழ்ச் சங்கத்தின் தலைவருமான அருட்திரு தமிழ் நேசன் அடிகளார் குறிப்பிட்டார்.

மன்னார் கல்வி வலயத் தமிழ்ப் பாட உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் எழுதிய 'வரலாற்றில் தடம்பதித்த வங்கக் கலைஞர்கள்' என்ற நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றும்போதே அடிகளார் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 11 ஆம் திகதி வங்காலையில் இடம்பெற்ற இந்த நூல் வெளியீட்டு விழாவில் சிறப்புரையாற்றிய தமிழ்நேசன் அடிகளார் தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது:

'நேற்றைய பதிவுகள் இன்றைய வரலாறு. அதேபோல் இன்றைய பதிவுகள் நாளைய வரலாறு'. இதன் அடிப்படையில் உலகத்தில் உள்ள மக்கள் குழுமங்கள் ஒவ்வொன்றும் தத்தமது தனித்துவ அடையாளங்களை, பாரம்பரியங்களை, வரலாறுகளை இனங்காண்பதிலும் பதிவு செய்வதிலும் இன்று அதீத முனைப்புக்காட்டி வருகின்றனர்.

ஈழத்தமிழரின் பண்டைக் கால புராதன வரலாறுகள் தெளிவற்றவையாகவும், சான்றாதாரங்கள் குறைவானதாகவும் இருப்பதற்குக் காரணம் தமிழர்களிடம் தமது வரலாற்றைப் பதிவு செய்கின்ற வழக்கம் குறைவானதாக இருந்தமையே ஆகும்.

இத்தகையதொரு பின்னணியில் தான் திருமதி பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்களின் 'வரலாற்றில் தடம் பதித்த வங்கக் கலைஞர்கள்' என்ற தலைப்பிலான இந்த நூலாக்க முயற்சியின் முக்கியத்துவத்தை நாம் நோக்கவேண்டும். வங்காலை மண் கல்விக்கு கலைக்கும் பெயர்போன மண்ணாகும்.

இந்த மண்ணில் இருந்து பல ஆற்றல் வாய்ந்த கலைஞர்கள் தோன்றி தமிழுக்கும் திருமறைக்கும் அரிய பணிகளைப் புரிந்துள்ளனர்.

இவர்களின் வரலாறுகள் பதிவுசெய்யப்பட்டு அடுத்த தலைமுறையினருக்குக் கையளிக்கப்படவேண்டும். கால ஓட்டத்தில் இந்தக் கலைஞர்களின் நினைவுகள் காணாமற் போய்விடாதிருக்க ஆசிரியர் பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் மேற்கொண்டுள்ள இந்த முயற்சி முக்கியமானதாகும். இது அனைவராலும் பாராட்டி ஊக்குவிக்கப்பட வேண்டியதாகும்.

இந்த நூலை வங்காலையின் முதுபெரும் கலைஞர் அமரர் சவிரியான் லெம்பேட் அவர்களுக்கு அர்ப்பணம் செய்வது முற்றிலும் பொருத்தமானதே. சிறந்த ஆளுமைப் பண்புகளைக் கொண்ட பல்துறைக் கலைஞராக அவர் விளங்கினார்.

சிறந்த புலமைத்துவம் வாய்ந்த பாடலாசிரியராக அவர் திகழ்ந்தார். அமரர் அருட்தந்தை மேரி பஸ்ரியானின் நினைவாக அவர் யாத்த பாடலைக் கேட்கும் போதெல்லாம் எனது உள்ளம் உருகும் அனுபவத்தை நான் பெறுவேன். அந்தப் பாடலின் இசையும் வார்த்தைகளும் மனதை வருடிச்சென்று சோகத்தின் அலைகளை இதயத்தில் வீசச் செய்யும்.

சிறந்த வயலின் இசைக் கலைஞனாகவும் நான் அவரைப் பார்த்திருக்கிறேன். மன்னார் மாவட்டத்தில் வயலின் இசைக் கருவியை மீட்டும் ஆற்றல் வாய்ந்தவர்கள் ஒருசிலராக இருந்த அக்காலத்தில் இவருடைய இந்தத் திறமை விதந்துரைக்கப்பட வேண்டியதாகும்.

நான் 1997ஆம் ஆண்டு குருப்பட்டம் பெற்றபின்னர் முதல் பணித்தளமாக வங்காலைப் பங்குக்கு உதவிப் பங்குத் தந்தையாக அனுப்பப்பட்டேன்.


அந்தக் காலப்பகுதியில் அமரர் சவிரியான் லெம்பேட் அவர்களுடன் உரையாடவும் உறவாடவும் எனக்கு வாய்ப்புக் கிடைத்தது. அதைப்பெரும் பேறாகக் கருதி மகிழ்கின்றேன்.

ஆசிரியர் பெப்பி விக்ரர் லெம்பேட் அவர்கள் இதுபோன்ற நூலாக்க முயற்சிகளில் தொடர்ந்து ஈடுபட்டுத் தமிழுக்கும் திருமறைக்கும் நற்பணிபுரிய வேண்டும்மென்று வாழ்த்துகின்றேன், இறையாசி கூறுகின்றேன்- என்றார்.

(க-601)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவாற்றலை அதிகரிக்கும் முட்டை



நமது உடலுக்குத் தேவையான அனைத்து வகையான ஊட்டச்சத்துக்களும் முட்டையில் உள்ளன. முட்டையில் தேவையான அளவு கொழுப்பு மற்றும் புரதச்சத்து நிறைந்துள்ளது. முட்டையின் வெள்ளைக்கருவில் 17 கலோரியும், மஞ்சள் கருவில் 59 கலோரியும் உள்ளது. நாம் சமைக்கும் முட்டையைப் பொறுத்து கலோரிகளின் அளவு கூடும் அல்லது குறையும். முட்டையில் தைராய்ட் ஹோர்மோன் சுரப்பதற்குத் தேவையான அயடின் உள்ளது. தினமும் குழந்தைகளுக்கு ஒரு முட்டை கொடுப்பதன் மூலம் அவர்களின் கற்கும் திறனை அதிகரிக்கலாம். காலை உணவுடன் முட்டை வழங்குவதால் கவனிக்கும் தன்மை அதிகரிப்பதாகவும், வாசிப்புத் திறன் கூடும் என்றும் ஆராய்ச்சியில் தெரியவந்துள்ளது. குழந்தைகளின் எடையை சீராக வைத்திருக்கும். எடை குறைவான குழந்தைகளுக்கு தினமும் ஒரு முட்டை கொடுப்பதன் மூலம் சத்துக்கள் கூடுவதோடு உடல் எடை அதிகரிக்கும். வளரும் குழந்தைகளுக்கு மூளை வளர்ச்சி மிகவும் அவசியம். தினம் ஒரு முட்டை சாப்பிடுவதன் மூலம் குழந்தைகளின் மூளை வளர்ச்சி அதிகரிக்கும். முட்டையின் மஞ்சள் கருவில் உள்ள ஆண்டி ஆக்சிடென்டல் கண்பார்வையைத் தெளிவாக்கும். சாதாரண அவித்த முட்டையில்தான் இவ்வளவு நன்மைகள். ஒரு நாளைக்கு 300 மில்லி கிராம் அளவுதான் கொலஸ்ட்ரோல் நம் உணவில் சேரலாம். ஒரு முட்டையில் 213 மில்லிகிராம் கொலஸ்ட்ரோல் இருக்கிறது. இதுவே இதயத்துக்கு நலம் பயக்கும். நீரழிவு நோயாளிகள் தினமும் முட்டை சாப்பிடக்கூடாது. இது அவர்களுக்கு கெடுதல் உண்டாக்கும். மருத்துவர்களின் ஆலோசனையின்படி வாரம் ஒரிரு முட்டை சாப்பிடலாம்.

# சிறிய வகை பூச்சிகளின் படிமங்கள் கண்டுபிடிப்பு


பெரு நாட்டில் அரிதான சிறிய பூச்சிகளின் ஏராளமான படிமங்கள் கண்டறியப்பட்டுள்ளது.பெருவின் வடக்குப் பகுதியில் உள்ள சான்டியாகோ நதிக்கரையை அண்மித்த வனப்பகுதிகளில் இருந்து இவை கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. சிக்ளயோ பகுதியில் உள்ள மெயர் ஹோனிங்கர் பாலியோன்டாலஜி அருங்காட்சியகம் சார்பில் பூச்சியின ஆராய்ச்சியாளர் கலுஸ் ஹோனிங்கர் தலைமையில் இது தொடர்பான ஆய்வு நடந்தது. அடர்ந்த காட்டுப்பகுதியில் மஞ்சள் நிற பிசினில் பூச்சிகள் சிக்கி படிமங்களாக மாறியிருந்தன. இந்தப் படிமம் மிகவும் அரிதானது என்கின்றனர் ஆராய்ச்சியாளர்கள். மியோசின் காலத்திய தட்ப வெட்ப நிலை குறித்து அறிந்துகொள்ள இது மிகவும் பயனுள்ளதாக இருக்கும் என்றும் ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர்.

இது குறித்து தலைமை ஆராய்ச்சியாளர் ஹோனிங்கர் கூறியதாவது:-

பூச்சியின ஆய்வுகளில் இதுவரை பல்வேறு வகையான 100 இற்கும் அதிகமான படிமங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளது. பிசினில் சிக்கும் இத்தகைய பூசசிகளின் படிமங்கள், மரங்களில் ஒட்டிய நிலையிலேயே இருக்கும். மரங்கள் அழியும் தருவாயிலும் இவை மரத்தில் ஒட்டிய நிலையிலேயே படிமங்களாக மாறும். பருவநிலை மாற்றங்களால் தற்போது இத்தகைய பூச்சியினங்கள் முற்றிலும் அழிந்து விட்டன. வண்டுகள், காற்றில் பறக்கும் நுண்ணிய பூச்சிகள், சிலந்திகள், பட்டாம் பூச்சிகள் உள்ளிட்ட வனங்களில் காணப்படும் ஏராளமான பூச்சிகள் இத்தகைய படிம நிலையில் கிடைக்கப் பெற்றுள் ளன. இவற்றைக் கொண்டு பல்வேறு ஆய்வுகள் மேற்கொள்ளப்படும்.

பெயர் தெரியாத, இதுவரை கண்டிராத ஏராளமான பூச்சிப் படிமங்களும் இதில் உள்ளன. அவை குறித்த விரிவான ஆய்வு நடந்து வருகிறது. இவற்றில் நாயின் தலைபோன்றும், கால்கள் அதைவிட 4 மடங்கு நீளமானதாகவும் உள்ள வித்தியாசமான பூச்சிப் படிமங்கள் மிகவும் வியப்பானதாக உள்ளது.

# புதிய மோட்டார் சைக்கிள் அறிமுகம்



குளிர் ஊட்டப்பட்ட வசதிகளுடன் கூடிய மோட்டார் சைக்கிள் ஐரோப்பிய நாடுகளில் பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது. இதன் விலை ரூ.34 லட்சம்.

சுவிஸ்சர்லாந்தைச் சேர்ந்த பெரவ்ஸ் என்ற நிறுவனம் கேபிலுடன் கூடிய மோட்டார் சைக்கிளை அறிமுகப்படுத்தியுள்ளது. இருப்பதற்கு சற்று அகலமான ஆசனம், இதனை நிறுத்தி இறங்கும் போது சமநிலை தவறாமல் இருக்க சின்னப் பிள்ளைகளின் சைக்கிள் போல இரு புறமும் நிலை தவறாமல் இருக்க 2 மினி சக்கரங்கள். இடது, வலது எந்த பக்கமும் இறங்கலாம். ஏறி அமர்ந்து கதவை மூடிக்கொண்டால் முன், பின் சக்கரங்கள் மட்டுமே வெளியே தெரியும்.

எடை சற்று அதிகம் என்பதால் அதற்கேற்ப இன்ஜின் பொருத்தியிருக்கின்றனர். மினி கார் அளவுக்கு தரமாக உருவாக்கப்பட்டிருப்பதால் விலை அதிகம்.இதற்கு மோனோடிரேசர் என்று பெயர் வைத்திருக்கின்றனர்.

சுவிற்சர்லாந்து மட்டுமின்றி பிரான்ஸ், ஜேர்மனி உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகள் பலவற்றிலும் மோனோடிரேசரை அதிகம் காண முடிகிறது.

மோட்டார் சைக்கிள் முன்னணியில் உள்ள பல நிறுவனங்களும் குளிரூட்டப்பட்ட வசதியுடனான மோட்டார் சைக்கிள் தயாரிப்பு பக்கம் பார்வையைத் திருப்பியிருக்கின்றன. அவர்களும் களமிறங்கினால் விலை குறையலாம்.

# ரோமானிய காலத்து வாள் கண்டுபிடிப்பு

இஸ்ரேலின் ஜெருசலேம் நகரில் இரண்டாயிரம் ஆண்டுகால வடிகால் அமைப்பையும், ரோமானியர் காலத்து வாள் ஒன்றையும் அந்நாட்டு தொல்லியல் ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர்.

பைபிளில் குறிப்பிடப்பட்ட ஜெருசலேம் நகரான தற்போதைய டேவிட் குடியிருப்புப் பகுதியில் அண்மையில் தொல்லியல் ஆய்வாளர்கள் நடத்திய ஆய்வில் இரண்டாயிரம் ஆண்டுகால வடிகால் கண்டறியப்பட்டது.

இதுகுறித்து இஸ்ரேல் தொல்லியல் துறை வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது:-

இந்த வடிகால் பைபிளில் கூறப்பட்ட சிலோம் என்ற குளத்துக்கு மழைநீர் கொண்டு செல்வதற்காக வடிவமைக்கப்பட்டது.

ஜெருசலேத்தின் முதல் கோயில் சாலமோன் அரசனால் கட்டப்பட்டது. அக்கோவில் பாபிலோனியர்களால் கி.மு.586ஆம் ஆண்டில் அழிக்கப்பட்டது. இயேசுவின் காலத்தில் வாழ்ந்த ஏரோது மன்னன் அதே இடத்தில் இன்னொரு கோயிலைக் கட்டினான்.

இந்தக்கோயில் கி.பி 70ஆம் ஆண்டில் ரோமானியப் படையெடுப்பில் அழிக்கப்பட்டது. இந்த நாளை ஆண்டு தோறும் யூதர்கள் நோன்பு இருந்து கடைபிடித்து வருகின்றனர்.

இந்த இரண்டாவது கோயில் அழிக்கப்பட்ட போது ஜெருசலேத்து மக்கள் இந்த வடிகாலில் பதுங்கி உயிர்பிழைத்தனர்.

இந்தநிலையில் தொன்மையான ஒரு வாள் தொல்லியல் ஆய்வாளர்கள் நடத்திய வடிகால் ஆய்வில் கண்டறியப்பட்டது.

இந்த வாள் ஜெருசலேத்தில் கட்டப்பட்ட இரண்டாம் கோயில் அழிக்கப்பட்ட காலகட்டத்தைச் சேர்ந்தது ஆகும்.


# வினோதமான காலணிகள்



நம்முடைய கால்களை பாதுகாக்க காலணிகளைப் பயன்படுத்துகிறோம்.
இந்தக் காலணிகள் மிகவும் வித்தியாசமான முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளன.

# அலெக்ஸாண்டர் ஓவியங்கள்

இலட்ஸ்ரேட்டர் ஓவியங்கள் என்றால் ஆங்கிலேயரான அலெக்ஸாண்டர் வெல்ஸ் தான் இப்போது பலருக்கு ஞாபகத்துக்கு வரும் பண்பாட்டு ஓவியங்களாக இருக்கட்டும்,நவீன ஓவியங்களாக இருக்கட்டும். இவர்உருவாக்கும்இலட்ஸ்ரேட்டர் படைப்புக்களும், அவற்றிற்காக பயன்படுத்தும் வண்ணக்கலவையும் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரக்கூடியன. அவருடைய ஓவியங்களில் சில அவற்றிற்காக பயன்படுத்தும் வண்ணக்கலவையும் பார்ப்பவர்களுக்கு வியப்பைத் தரக்கூடியதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு இணங்க சேத்துக்குடா காவலரண் பொலிஸார் இடமாற்றம்

## மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்

மட்டக்களப்பு,ஒக.17

மட்டக்களப்பு, சேத்துக்குடா பொலிஸ் காவலரணிலுள்ள அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யுமாறும் அந்தக் காவலரணிலுள்ள பொலிஸ் உத்தியோகத்தர்களின் புகைப்படங்களை காவலரணுக்கு முன்பாகக் காட்சிக்கு வைக்குமாறும் பொதுமக்கள் விடுத்த கோரிக்கைக்கு பொலிஸார் உத்தரவாதமளித்துள்ளனர்.

மட்டக்களப்பு, புதுநகரில் நேற்றுமுன்தினம் நடமாடியதாகத் தெரிவிக்கப்படும் மர்ம மனிதர்களை பொதுமக்கள் துரத்திச் சென்றபோது அந்த மர்ம மனிதர்கள் சேத்துக்குடா பொலிஸ் காவலரணுக்குள் ஓடி ஒளிந்து கொண்டதைக் கண்டித்து அப்பகுதி மக்கள் புதூர் விமான நிலையத்துக்கு அண்மையில் நேற்று செவ்வாய்க்கிழமை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இது தொடர்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான பொன் செல்வராசா, பா.அரிய நேத்திரன், சீ.யோகேஸ்வரன் ஆகியோர் பொலிஸாரிடம் விடுத்த கோரிக்கைக்கமைய, ஆர்ப்பாட்டம் நடைபெற்ற இடத்துக்கு மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட தலைமையிலான பொலிஸார் கலந்துகொண்டனர்.

சேத்துக்குடா பகுதியில் மர்ம மனிதர்களின் நடமாட்டம் காணப்படுகின்றது. அந்த மர்ம மனிதர்கள் சேத்துக்குடா காவலரணுக்குள் ஓடி ஒளிந்துகொள்வதாகவும் பொலிஸாரிடம் தெரிவித்துள்ள பொதுமக்கள், இவ்வாறு எமது பகுதிக்குள் புதிதாக நடமாடுபவர்களை அடையாளம் காணும் நோக்கில் சேத்துக்குடா பொலிஸ் காவலரணுக்கு முன்பாக பொலிஸ் உத்தியோகத்தர்களின் புகைப்படங்களைக் காட்சிக்கு வைக்கவேண்டும். சேத்துக்குடா பொலிஸ் காவலரணிலுள்ள அனைத்துப் பொலிஸ் உத்தியோகத்தர்களையும் இடமாற்றம் செய்யுமாறும் கோரினர்.

பொதுமக்களின் கோரிக்கைக்கு உத்தரவாதமளித்த மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரவிந்திர கரவிட்ட, சேத்துக்குடா காவலரணில் தமிழ்மொழி மூலமான பொறுப்பதிகாரியுடன் புதிய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கடமையில் ஈடுபடுவார்களெனவும் தெரிவித்தார்.

பொதுமக்களின் கோரிக்கையை மட்டக்களப்பு சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஏற்றுக்கொண்டதையடுத்து ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது.

(ச)

# யானைகளின் அட்டகாசத்தால் மக்கள் பீதியில்

வெல்லாவெளிப் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட வேற்றுச்சேனை பிரதேசத்தில் யானைகளின் அட்டகாசம் நீடித்து வருகிறது. இதனால் மக்கள் பீதியுடன் வசித்து வருகின்றனர்.

குடியிருப்புகளை நோக்கி யானைகள் படையெடுக்கின்றன. இதனால் குடியிருப்பாளர்கள் அந்த இடத்திலிருந்து வெளியேற முயல்கின்றனர். கடந்த வாரம் கிராமத்துக்குள் புகுந்த யானையால் பல வீடுகள் சேதமாக்கப்பட்டுள்ளன. எனவே சம்பந்தப்பட்ட அதி காரிகள் யானைகளின் பிரவே சத்தைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளைத் துரிதமாக மேற்கொள்ள வேண்டும்

பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகள் கிடைக்க ஆவன செய்ய வேண்டுமென்று மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (ச)

# வரி நிலுவையாக 300 லட்சம் ரூபா மேல்மாகாண உள்ளூராட்சி மன்றங்களில்

## உள்ளூராட்சி ஆணையாளர் கூறுகிறார்

கொழும்பு, ஒக.17


மேல் மாகாணத்தின் உள்ளூராட்சி மன்றங்களில் 300 லட்சம் ரூபாவுக்கும் மேற்பட்ட வரி நிலுவையாக உள்ளதென்று மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் சந்திராணி சமரக்கோன் தெரிவித்துள்ளார்.

48 உள்ளூராட்சி மன்றங்களுக்கு இந்த வரி செலுத்தப்பட வேண்டியுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

நிலுவையிலுள்ள வருமான வரி தொடர்பிலான அறிக்கை ஒன்றை எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னதாக சமர்ப்பிக்குமாறு அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த அறிக்கை கிடைத்தவுடன் நிலுவையாக உள்ள வருமான வரியைத் துரித கதியில் அறவிடுவதற்கான திட்டமொன்றை செயற்படுத்துவதற்கு மேல் மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் அலுவலகம் உத்தேசித்துள்ளது.

(ற)



மேல் கொத்மலை திட்டத்தின் நிர்மாணப் பணிகளின் 90 வீதம் பூர்த்தி செய்யப்பட்டமையைத் தொடர்ந்து தலவாக்கலையில் அமைக்கப்பட்டுள்ள நீரணையின் முதலாவது நீர் விடுப்பு கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

# கல்முனையில் விழிப்புணர்வுக் குழு

மர்ம மனிதனின் நடமாட்டம் காரணமாக கல்முனைப் பிரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள அச்ச நிலைமையைப் போக்கும் வகையில் கிராம மட்டத்தில் விழிப்புணர்வு செயற்பாட்டுக் குழுக்கள் அமைக்கப்படவுள்ளது.

பாதுகாப்புப் பிரிவினரின் அனுசரணையுடன் பிரதேச செயலகத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட கூட்டம் கல்முனை பிரதேச செயலகத்தில் நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்திலேயே விழிப்புக்குழு அமைப்பது தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது.

(ச)

# 50 வருடங்களின் பின் இயந்திரப் படகுச் சேவை

மட்டக்களப்பு,ஒக.17

50 வருடங்களின் பின் கிண்ணையடியில் இயந்திரப் படகு சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.



இந்த இயந்திரப் படகுச் சேவை கனடாவில் வசிக்கும் இலங்கையரான கே.பிரசாத்தின் தனிப்பட்ட நிதியிலிருந்து ஆரம்பிக்கப்பட்டுள் ளது. இந்தச் சேவையால் பல்லாயிரக் கணக்கான மக்கள் நன்மையடைந்துள்ளனர்.

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக தோணிகளின் மூலமே கிண்ணையடிக்கும் முருக்கன் தீவுக்குமிடையே மக்கள் பல்வேறு கஷ்டங்களுடன் பயணம் செய்து வந்துள்ளனர்.

50 ஆண்டுகளாக மட்டக்களப்பு, வாழைச்சேனை பிரதேச செயலகப் பிரிவிலுள்ள கிண்ணையடி - முருக்கன்தீவு நீர் வழிப் பாதையில் நிலவிய போக்குவரத்துப் பிரச்சினைக்கு நிரந்தர தீர்வு காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

# நாவலப்பிட்டியில் மர்ம ஆசாமி; மக்களால் மடக்கிப்பிடிப்பு

## பார்ப்பதற்கு இரண்டாயிரம் பேர் திரண்டனர்

நுவரெலியா, ஒக.17

நாவலப்பிட்டி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட ஓவிட்ட, ஜெயசுந்தரபுர பிரதேசங்களில் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடிய நபரொருவரை பிரதேச மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் பிரதேச மக்களால் பிடிக்கப்பட்ட சந்தேக நபர் பொலிஸார் வரும்வரை தொலைபேசிக் கம்பமொன்றில் கட்டி வைக்கப்பட்டிருந்தார் எனக் கூறப்படுகின்றது.

சந்தேகநபர் அதிகாலை வேளை குறிப்பிட்ட பிரதேசத்துக்கு வருகை தந்ததற்கான காரணத்தைக் கூறவில்லை என்றும் கூறப்பட்டது.

சந்தேகநபர் பிடிக்கப்பட்ட தகவல் பிரதேசத்தில் தீயாகப் பரவியதையடுத்து சுமார் இரண்டாயி ரத்துக்கும் மேற்பட்ட மக்கள் அந்த சந்தேகநபரைப் பார்ப் பதற்காக குழுமியிருந்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த இடத்துக்கு வருகை தந்த நாவலப்பிட்டி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி உதய விக்கிரம தலைமையிலான பொலிஸார் சந்தேக நபரை பொதுமக்களிடமிருந்து மீட்டு பொலிஸ் வாகனத்தில் ஏற்றி விசாரணைக்காக அழைத்துச் சென்றனர்.

சந்தேகநபர் கம்பளை பிரதேசத்தைச் சேர்ந்தவர் என்றும் பல்வேறு குற்றச்செயல்களுக்காக சிறைசென்று வந்தவர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

(ச)

# பெருந்தோட்டக் கம்பனிகளும், நிர்வாகங்களும் இயந்திரங்களை முறையாகப் பராமரிக்க வேண்டும்

நுவரெலியா, ஒக.17

தேயிலைத் தொழிற்சாலைகளில் உள்ள இயந்திரங்கள் உரியமுறையில் பராமரிக்கப்படுகின்றனவா? அவற்றில் ஏதாவது கோளாறுகள் ஏற்பட்டால் அதனை எவ்வாறு கண்டுபிடிப்பது என்பது தொடர்பில் தோட்ட நிர்வாகங்களும், கம்பனிகளும் அதிக கவனம் எடுக்க வேண்டும் என மலையக மக்கள் முன்னணியின் உப தலைவர் சி.ஜெயபாரதி தெரிவித்துள்ளார்.

தெமோதரை தோட்டத்தில் கொதிகலன் வெடித்து மூன்று தொழிலாளர்கள் பரிதாபமாக உயிரிழந்தமை தொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

அப்பாவித் தொழிலாளர்கள் கடமை நேரத்தில் தமது அவயவங்களை இழப்பது, மரணமாவது பரவலாக நடைபெற்று வந்தாலும் கூட இதற்கான நட்ட ஈட்டைப் பெறுவதில் அவர்கள் பல சிரமங்களை அனுபவிக்கின்றனர்.

தொழிலாளர்கள் நிர்வாகம் கூறும் வேலையைத்தான் செய்வார்களே தவிர அவர்கள் தொழில் நுட்ப அறிவுகொண்டவர்கள் அல்லர்.

தோட்டத் தொழில்துறையுடன் சம்பந்தப்பட்ட தேயிலை அரைக்கும் இயந்திரங்கள், கவ்வாத்து வெட்டும் இயந்திரங்கள் மற்றும் கொதிகலன்கள் ஆகியன ஒழுங்காகப் பராமரிக்கப்படுகின்றனவா? இதில் குறைபாடுகள் இருந்தால் அவற்றைத் தொழிலாளர்கள் எவ்வாறு கண்டுபிடித்துத் திருத்துவது- தோட்ட நிர்வாகங்களும் கம்பனிகளும் அதிக கவனம் எடுக்க வேண்டும்.

தெமோதர தோட்டத்தில் மூவரின் உயிர்களைப் பலிகொண்ட கொதிகலன்கள் வேறு பல தோட்டங்களிலும் இயங்குகின்றன.

அங்கும் இவ்வாறான விபத்துகள் நடைபெறாமல் இருப்பதை கம்பனிகளின் பொறியியலாளர்கள் அடிக்கடி உறுதி செய்து கொள்ளவேண்டும்.

தொழிலாளர்கள் கவனயீனமோ அல்லது விளக்கமின்மையோ இவ்வாறான விபத்துகளுக்குக் காரணமாக இருப்பதால் அவர்களை இந்த விடயத்தில் தெளிவாக்க வேண்டிய பொறுப்பும் நிர்வாகத்துக்கே உள்ளது.

நடந்த விபத்தில் உயிரிழந்த தொழிலாளர்களுக்கு ஆகக் கூடுதலான நட்டஈட்டை வழங்குவதற்கும், உயிரிழந்தவர்களின் பிள்ளைகள் கல்வி கற்றுக் கொண்டிருந்தால், அவர்களின் கல்விக்கும், உரிய தொழில் வழங்குவதற்கும் கம்பனி முன்வர வேண்டும்.

வெறுமனே கட்டணம் மாத்திரம் இந்த உயிரிழப்புகளுக்கு ஈடாக அமையாது - எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தருவது வித்தியா

# இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:**
வருவாய் கூடி வளம் பெறும் நாள். இரண்டு நாள்களுக்கு முன் இழுபறியாக இருந்த காரியம் ஒன்று இன்று முடிவுக்கு வரும். தந்தை தொடர்பான விடயங்களில் பட்டும் படாமல் நடந்து கொள்ள வேண்டும். உறவினர்களால் உருவான பிரச்சினை ஒன்று சுமூகமாக முடியும். சில வேலைகளை தாமதமாகத் தொடங்கினாலும், சரியான நேரத்துக்கு முடிப்பீர்கள்.

**இடபம்:**
எடுத்த காரியங்களில் தங்கு தடையற்ற வெற்றி காணும் நாள். கணவன், மனைவி இடையே அன்யோன்யம் அதிகரிக்கும். தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவு ஒன்றை எடுப்பீர்கள். உத்தியோகத்தர்கள் மேலதிகாரிகளின் நெருக்கடிகளுக்கு ஆள்படலாம். உறவினர் ஒருவர் கேட்ட உதவியை மறுக்காமல் செசய்வீர்கள். சுபச் செய்தி கேட்கலாம்.

**மிதுனம்:**
பழைய சம்பவம் ஒன்றால் புதிய பிரச்சினைகள் உருவாகலாம். அரசியல்வாதிகள் குதர்க்கமான பேச்சுக்களைத் தவிர்க்க வேண்டும். புதிய பொருள்கள் வாங்கப் போட்ட திட்டம் கைகூடி வரும். வியாபாரிகள் வாடிக்கை யாளர்களிடம் கடும் வார்த்தைகளைத் தவிர்க்க வேண்டும். உங்களுக்கு வேண்டிய ஒருவருக்காக மற்றவர்களிடம் உதவி கேட்பீர்கள்.

**கடகம்:**
சிந்தித்துச் செயற்படுவதன் மூலம் சிக்கல்களில் மாட்டாமல் தப்பிக்கலாம். அயலாரின் அன்புத் தொல்லைகளுக்கு ஆள்படலாம். பணவரவுகள் கடும் இழுபறிக்குப் பின்னர் வந்து சேரும். சக ஊழியர்கள் ஏட்டிக்குப் போட்டியாக நடந்து எரிச்சல் உண்டாக்கலாம். வாகனங்கள் வழியில் திடீர் செலவுகள் ஏற்படலாம். மன அமைதி பாதிக்கும்.

**சிங்கம்:**
சஞ்சலங்கள் நீங்கி சந்தோஷம் அதிகரிக்கும் நாள். பிள்ளைகளின் செயற்பாடு பெருமை தரும் வகையில் அமையும். பொதுவாழ்வில் உள்ளோருக்கு புகழ், செல்வாக்கு கூடும். கடன் மிகுதிகளைக் கேட்டு வாங்குவீர்கள். நண்பர்கள் மூலம் சில காரியங்களைச் சாதித்துக் கொள்வீர்கள். வேலையாள்கள் அனுசரணையாக நடந்து கொள்வர்.

**கன்னி:**
உறவினர்களின் பாச மழையில் நனைவீர்கள். மலை போல் வந்த பிரச்சினை ஒன்று பனிபோல் விலகும். பிள்ளைகளால் வீட்டில் மகிழ்ச்சி, சந்தோஷம் அதிகரிக்கும். மதிப்பு, கௌரவம் பார்த்து சில காரியங்களைச் செய்வீர்கள். ஒருவரிடம் கடனாகக் கொடுத்த பணம் திரும்பி வரலாம். பல நாள்களாக உங்களுடன் பேசாத ஒருவர் பேசலாம்.

**துலாம்:**
கவலைகள், குழப்பங்கள் அதிகரிக்கலாம். கடன் மிகுதி ஒன்றைத் திருப்பிச் செலுத்துவதில் அக்கறை காட்டுவீர்கள். நாடி வந்த நண்பர்களுக்கு இல்லை என்று சொல்லாமல் உதவி செய்வீர்கள். மற்றவர்களை நம்பி முக்கிய வேலைகளை ஒப்படைக்க வேண்டாம். மன நிம்மதி பெற இறை வழிபாடுகளை மேற்கொள்வீர்கள். சோம்பல் ஆள்கொள்ளும்.

**விருச்சிகம்:**
தொழில் ரீதியான சிரமங்கள் அதிகரிக்கலாம். பாசமிக்க நண்பர்கள் பகையாகாமல் இருக்க யோசித்துச் செயற்பட வேண்டும். ஆடம்பரப் பொருள்கள் வாங்கலாம். உங்களுக்கு விரோதமாகச் செயற்படும் ஒருவரை அறிந்து கொள்வீர்கள். உங்களின் ரகசியம் ஒன்றை மற்றவர்கள் அறிந்து கொண்டு விமர்சிக்கலாம். வெளிவட்டாரத் தொடர்பு விரிவடையும்.

**தனுசு:**
நினைத்தது நினைத்தபடி நடக்கும் நாள். சந்தோஷமான அனுபவங்களை எதிர்கொள்ளலாம். ஏட்டிக்குப் போட்டியாகச் செயற்பட்டவர்கள் மனம் மாறுவர். தொழில் முன்னேற்றம் கருதி பயணம் ஒன்றை மேற்கொள்வீர்கள். அரசு தொடர்பான காரியங்கள் இழுபறிக்குப் பின்னர் முடிவுக்கு வரும். பழைய நண்பர்கள் மூலம் புதிய நண்பர் அறிமுகம் கிட்டும்.

**மகரம்:**
தெய்வங்களை வழிபட்டு நிம்மதி பெற வேண்டிய நாள். குடும்ப உறுப்பினர்கள் சிலருக்கு புத்திமதி சொல்வீர்கள். பிறரை நம்பி யாருக்கும் வாக்குறுதி கொடுக்க வேண்டாம். கடும் அலைச்சலில் இருந்து ஒய்வு பெறலாம். சில பொருள்களை மறதியாக எங்காவது வைத்து விட்டுத் தேடலாம். திட்டமிட்ட வெளியூர் பயணங்கள் செல்லலாம்.

**கும்பம்:**
தேக ஆரோக்கியம் தெம்பு உற்சாகம் தரும். நண்பர்கள் பாராட்டும் வகையிலான காரியம் ஒன்றைச் செய்வீர்கள். நாளை வரும் என நினைத்த பணவரவு ஒன்று இன்றே வரலாம். நீண்ட நாள்களாகச் சந்திக்க நினைத்த உறவினர் ஒருவரை திடீரென சந்திக்கலாம். எந்த வேலையையும் பொறுப்பாகச் செய்து மற்றவர்களின் பாராட்டைப் பெறுவீர்கள்.

**மீனம்:**
தொழில் ரீதியாக சிலர் உங்களின் உதவி நாடி வரலாம். வீண் பழிகளைத் தவிர்க்க பணியில் மிகுந்த அக்கறையுடன் செயற்பட வேண்டும். மருத்துவ சிகிச்சை பெற மேற்கொண்ட முயற்சிகளில் முன்னேற்றம் உண்டு. வீட்டுக்குத் தேவையான பொருள்களை வாங்கிக் கொடுப்பீர்கள். அரசியல்வாதிகளுக்கு செல்வாக்கு கூடும். வாக்குவாதத்தைத் தவிர்க்கவும்.




# ஊடக சுதந் தலையிடாத

## டெய்லி மிரர் பத்திரிகையில் தயா எழுதப்பட்ட ஊடக சுதந்திரம் கட்டுரையின் தமிழாக்கம்.

பத்திரிகைச் சுதந்திரம் மிக்க நாடுகள் பட்டியலில், கடந்த ஆண்டு இலங்கைக்கு 158 ஆவது இடம் என்ற மிகக் கீழ் நிலையே கிடைத்துள்ளது. எல்லைகளற்ற செய்தியாளர் நிறுவனத்தால் வெளியிடப்பட்ட இந்தத் தரநிர்ணய அறிக்கை மிகவும் சரியானது என்பதை, உதயன் செய்தி ஆசிரியர் ஞானசுந்தரம் குகநாதன் மீது அண்மையில் நடத்தப்பட்ட தாக்குதல் நிரூபித்துள்ளது.

ராஜபக்ஷ ஆட்சியாளரால் தொடர்ச்சியாக ஊடகங்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் துன்புறுத்தல்களும் நாட்டின் பத்திரிக்கைச் சுதந்திரத்தின் படுமோசமான நிலையை உறுதி செய்கின்றன.

உதயன் இலங்கையின் வடக்கில் வெளியாகும் பெரும் செல்வாக்கு மிக்க பத்திரிகை. அண்மையில் நடந்து முடிந்த உள்ளூராட்சித் தேர்தலில் ராஜபக்ஷ ஆட்சி அரங்கேற்றிய திருகுதாளங்களை தொடர்ந்து வெளிக் கொண்டு வந்தது. தேர்தல் பிரசாரங்களின் போது அரச இயந்திரம் இராணுவத்தைக்கூட தனது வெற்றிக்காக பிழையான முறையில் பயன் படுத்தியது. இதனை உதயன் பயமில்லாது தனது வாசகர்களுக்கு வெளிப்படுத்தியது.

தமது அதிகார துஷ்பிரயோகங்களை வெளிப்படுத்தியவர்களை அதிகாரம் கொண்டவர்களால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அதன் விளைவு பயங்கரமானதாக மாறிவிட்டது.

பொய்யான தேர்தல் பிரசாரங்களை ராஜபக்ஷ குடும்பத்தினர் செய்தாலும், பிழையாக வழிகாட்டப்படாது, உறுதியாக முடிவெடுத்த வடபகுதி மக்கள் எமது நன்றிக்கு உரித்தானவர்கள். மக்களின் இந்தத் தீர்ப்பால் பாதிக்கப்பட்ட ராஜபக்ஷ அரசு இந்தப் பிரதேசத்தில் பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளது.

இவற்றைப் பார்க்கும்போது மூன்று தசாப்தமாக நடந்த நீண்ட காலஆயுதமோதலுக்குக் காரணமாக இருந்த சரித்திர நிகழ்வுகள் மீண்டும் நடக்கின்றன என்றே தோன்றுகிறது. பழைய சரித்திரங்களில் இருந்து எமது தலைவர்கள் பாடம் படிப்பதில்லை என்பதும் தெரிகிறது. இதனால் இன்னுமொரு அசம்பாவிதத்துக்கு இவை காரணமாக அமைந்து விடுகின்றன.

ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இருந்தபோது எதிர்த்தரப்பில் முக்கிய பிரமுகராக இருந்த ராஜபக்ஷவுக்கு பத்திரிகைச் சுதந்திரமும் மனித உரிமைகளும்தான் அரசியல் குறிக்கோளாக இருந்தது. 2005 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில் அவருக்கு இவை மிகவும் அனுகூலமாக இருந்தன.

பின்பு தனக்கு ஆதரவளித்த பத்திரிகைகளுக்கு எதிராகவே அவர் துப்பாக்கியை நீட்டினார். மனித உரிமைகளுக்கானதும் ஊடக சுதந்திரத்துக்கு எதிரானதுமான தனது கொள்கைகளை விட்டு முரண்பாடான, முழுமையான வித்தியாசமான மனிதராக அவர் இப்போது வந்துள்ளார்.

8 பத்திரிகையாளரைக் கடத்தியதும், 35 ஊடகவியளாளர்களைத் தாக்கியதும், 10 பேரைக் கொலை செய்ததும், 17 பேரைக் கைது செய்ததும், 7 பத்திரிகையாளர்களது வீடுகளைத் தாக்கியதும், 77 துன்புறுத்தல் சம்பவங்கள் நடந்ததும் தனது இரண்டு பதவிக்காலங்களிலுமே என்று ஜனாதிபதி கூறி சாதனைகளாக பெருமைப்படலாம். அவற்றைத் தனது சாதனைகளாகவும் வர்ணிக்கலாம். எனவே ராஜபக்ஷ குடும்பத்தின் திறமையான தலைமைத்துவத்தால், இலங்கைக்கு உலக பத்திரிகை சுதந்திரத்தில் 158 ஆம் இடம் கிடைத்துள்ளது. இது ஒன்றும் புதினமானது அல்ல.

யுத்தம் முடிந்ததனால் ஜனநாயகத்தை வலுப்படுத்தவும், நல்லாட்சியை ஏற்படுத்தவும் நல்ல வாய்ப்பு இந்த அரசுக்குக் கிடைத்துள்ளது. ஊடக சுதந்திரத்தை வலுப்படுத்தினால் ஜனநாயகத்தை வலுப்படுத்த முடியும். பொருளாதார வளர்ச்சியும் சமூக அமைதியும் ஏற்படும். இவ்வாறு சுதந்திரத்தை உறுதிப்படுத்த தேவையான பாதையை இந்த அரசு பின் பற்றுமா.

இந்த விடயத்தில் எனது எண்ணங்கள் இவை:

ஊடகங்களில் எந்த அரசும் தலையிடக்கூடாது. அவை தாமாகவே தம்மை முகாமைப்படுத்தி, கட்டுப்படுத்தி, ஒழுங்குபடுத்திக்கொள்ளட்டும். அதற்குத் தேவையான சட்டங்களையும், அமைப்புக்களையும் இயல்பான சூழ்நிலையையும் அரசு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும்.

ஊடக அமைப்புக்களின் வேண்டுகோளுக்கு இணங்கப் பத்திரிகை முறையீட்டுச் சபை நிறுவப்பட்டதை இதற்கு உதாரணமாகக் கொள்ளலாம்.

புதினப் பத்திரிகை உரிமையாளர்கள், உழைக்கும் பத்திரிகையாளர்கள் இணைந்து தம்மையே ஒழுங்குபடுத்தக் கூடிய நிறுவனமாகப் பத்திரிகை ஆசிரியர் சபை முன்னர் இருந்தது.

அரசால் நடத்தப்படும் பத்திரிகைச் சபை காலம் கடந்தது என நினைத்தோம். ஆனால் இப்போது ராஜபக்ஷ மீண்டும் பத்திரிகைச் சபையை உருவாக்கி மீண்டும் ஊடகங்களைத் தன் வசப்படுத்த முயல்கிறார். இந்த இரண்டு முறைகளும் இலங்கையிலும்,

சிம்பாவேயிலும் மட்டும் காணப்படுகின்றது. ராஜபக்ஷாக்களையும், முகாபேக்களையும் ஒத்துப்பார்த்தால். (கற்பனையில்).....

தகவல் தெரிந்து கொள்ளுதல் தொடர்பான தகவல் சுதந்திரச் சட்டம் இன்னுமொரு நல்ல உதாரணம். முன்பிருந்த ஐ.தே.க. அரசு இந்த எண்ணத்தை கொள்கையாக அமைச்சரவையில் ஏற்றுக்கொண்டது. ஊடகவியலாளர்களது நியாயக் குழுக்களான ஆசிரியர் குழாம், சுதந்திர ஊடக அமைப்பு, உழைக்கும் பத்திரிகையாளர்கள் ஆகியோர் இதற்கு ஆதரவு தெரிவித்தனர்.

சந்திரிகாவின் எதிர்ப்பால் இந்தத் திட்டம் தடுக்

கப்ப
தலை
பிரே
நாட
சுதந்
தோற்
என்ப

ஆ
பாடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ...திரத்தில் ...தீர்கள்

...யாசிறி ஜயசேகராவால் ... கற்பனையா? என்ற

...கப்பட்டது. சில மாதங்களின் முன் ஐ.தே.க. பிரதித் தலைவர் கரு ஜெயசூரியாவின் மூலம் தனியாள் பிரேரணையாக தகவல் அறியும் உரிமைச் சட்டம் நாடாளுமன்றில் சமர்பிக்கப்பட்டது. பத்திரிகை சுதந்திரத்துக்கான அந்த முன்மொழிவு எவ்வாறு தோற்கடிக்கப்பட்டது, அதற்கு என்ன நடந்தது என்பதை சர்வதேச சமூகம் அறியும்.

- ஷாருமி -

ஆகவே இரண்டு கொள்கைகளுக்குமுள்ள வேறுபாடு மிகவும் தெளிவானது. இவ்வாறான அரசுகளை

**8 பத்திரிகையாளரைக் கடத்தியதும், 35 ஊடக வியலாளர்களைத் தாக்கியதும், 10 பேரைக் கொலை செய்ததும், 17 பேரைக் கைது செய்ததும், 7 பத்திரிகையாளர்களது வீடுகளைத் தாக்கியதும், 77 துன்புறுத்தல் சம்பவங்கள் நடந்ததும் தனது இரண்டு பதவிக்காலங்களிலுமே என்று ஜனாதிபதி கூறி சாதனைகளாக பெருமைப்படலாம். அவற்றைத் தனது சாதனைகளாகவும் வர்ணிக்கலாம். எனவே ராஜபக்ஷ குடும்பத்தின் திறமையான தலைமைத்துவத்தால், இலங்கைக்கு உலக பத்திரிகை சுதந்திரத்தில் 158 ஆம் இடம் கிடைத்துள்ளது. இது ஒன்றும் புதினமானது அல்ல.**

எதிர்த்துப் போராட ஊடகங்கள் ஒன்றிணைய வேண்டும். பல நாடுகளில் பல்வேறு முனைகளில் ஜனநாயகம் மிரட்டப்படுகின்றது. சிம்பாவே, தென் ஆபிரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகளைப் பார்த்து இலங்கை மக்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.





# சும்மா இருப்பது சுலபமா?



முன்னொரு காலத்தில் ஆலயங்கள் சில அரசின் பாரமரிப்பிலேயே இருந்தன. அவ்வாறே ஓர் ஊரில் உள்ள கோயில் ஒன்றை அரசு பராமரித்து வந்தது. அதிகாரிகள் அவ்வப்போது வந்து கணக்கு வழக்குகளை சரி பார்ப்பது வழக்கம். ஒரு சமயம் ஓர் அரசஅதிகாரி அங்கே சென்றார். கோயில் நிர்வாக அதிகாரி கணக்குப் புத்தகங்களையும் ஏனைய பதிவேடுகளையும் எடுத்து அவர் முன்னால் வைத்தார்.

வந்த அதிகாரி, கோயில் செலவுக்கணக்குகளைப் பார்த்துக் கொண்டு வந்தார். சும்மா இருக்கும் சாமியாருக்கு ''ஒரு பட்டைச் சோறு...'' என்று தினசரிப் பட்டியலில் எழுதப்பட்டிருந்தது.

அதைப்பார்த்த அவர், ''சும்மா இருக்கிறவருக்கு எதுக்காகச் சோறு போடணும்? அதை உடனே நிறுத்துங்கள்!'' என்று ஆணையிட்டார்.

உடனே ஆலய ஊழியர்கள் அதிகாரியை நெருங்கி மெல்லச் சொன்னார்கள். ''ஐயா சும்மா இருப்பது என்பது அவ்வளவு சுலபமான காரியமல்ல.... அதனால் தான் அவருக்குச் சோறு வழங்குகிறோம்!'' என்றனர். இந்த விளக்கம் அந்த அதிகாரிக்குத் திருப்தி அளிக்கவில்லை. எனவே அதுபற்றி ஒன்றும் சொல்லாமல் வீட்டுக்கு வந்துவிட்டார். வந்தபின்னர் ஒரு சாய்வு நாற்காலியில் உட்கார்ந்து யோசிக்க ஆரம்பித்தார்.

''சும்மா இருப்பது என்ன அவ்வளவு கடினமான காரியமா? கொஞ்ச நேரம் நாமும்தான் சும்மா இருந்து பார்ப்போம்!'' என்று முயன்று பார்த்தார். மனம் அலைய ஆரம்பித்தது, அடங்க மறுத்தது.

சரி, சிறிது நேரம் கண்களை மூடித்தியானம் பண்ணிப் பார்க்கலாம். முயன்றார். '' வயிறு பசிக்கிறது போலிருக்கிறதே!'' என்று நினைத்தது மனம்.

ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டி கவனத்தை அதில் செலுத்தினார். காகம் ஒன்று எங்கோ கத்துகிற சத்தம் அவர் காதில் விழுந்தது. கண்களையும் காதுகளையும் கட்டுப்படுத்த முயன்றார்.

மனம் எதிர்காலத்தைப் பற்றி யோசிக்க ஆரம்பித்தது. மகளுக்கு மாப்பிள்ளை தேட வேண்டும். மகனுக்கு வேலை தேட வேண்டும். மறுபடி எதையும் நினைக்காமல் தியானம் செய்ய முயன்றார்.

திடீரென ஒரு மணம் வந்து மூக்கைத் தொடுகிறது. கண் விழித்துப் பார்க்கிறார். மனைவி கொண்டு வந்து வைத்து விட்டுப் போன சூடான தேநீர் எதிரே மேசைமீது இருக்கிறது. அதை எடுத்துக் குடிக்க ஆரம்பித்து விட்டார். அவர் ஒன்றைப் புரிந்து கொள்ளவில்லை.

மனம்-தியானம் இரண்டும் ஒன்றுகொன்று தொடர்புடையவை என்று நினைக்கிறார். அது அப்படி அல்ல; மனம் முடிந்துபோகிற இடத்தில்தான் தியானம் ஆரம்பமாகிறது.

எனவே, தியானம் இருக்கிற இடத்தில் மனம் இல்லை. மனம் செயற்படுகிற வரையில் தியானமும் ஆரம்பமாவதில்லை.

அதிகாரி திணறிப்போனார். அவருக்கு ஊழியர்கள் கட்டுப்படுகிறார்கள். உள்ளே இருக்கிற மனம் கட்டுப்பட மறுக்கிறது. வேடிக்கையான கதையொன்று அவர் நினைவுக்கு வந்தது.

ஓர் இளைஞனைப் பார்த்து ஒரு பெரியவர் சொன்னார் '' ''அப்பாவுக்கு எல்லா வகையிலும் உதவியாக இருப்பது மகனின் கடமை!''

இளைஞன் உடனே சொன்னான் ''ஐயா, நான் தினமும் என் அப்பாவுக்கு உதவியாகத்தான் இருந்து வருகிறேன்!''

''மிகவும் மகிழ்ச்சி! உன் அப்பா என்ன செய்து கொண்டிருக்கிறார்?''

''சும்மாதான் இருக்கிறார்!''

அதிகாரி நினைவு கலைந்து சிரிக்கிறார். உள்ளே இருந்து மனைவி கேட்கிறார் '' என்ன சிரிப்பு?'' ''சும்மாதான் சிரிச்சேன்!'' அதிகாரி அலைபாய்கிற மனதை அடக்க முயன்று, அது முடியாமல் சோர்ந்து போனார். ''சும்மா இருப்பது எவ்வளவு பெரிய விடயம்! என்பது அப்போது தான் அவருக்குப் புரிந்தது.

உடனே மறுபடியும் புறப்பட்டு அந்தக் கோயிலுக்குப் போனார். பதிவேட்டைக் கொண்டு வரச்சொன்னார். அதில் இப்படி எழுதினார். சும்மா இருக்கும் சாமியாருக்கு இனி இரண்டு பட்டைச்சோறு!

கோ. சுவாமிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உதயன் வெளியீடான
**கல்விச்சுடர்**
தரம் 05 மாணவர்களை இறுதிப்பரீட்சைக்கு தயார்படுத்துவதற்கான விசேட தொடர் வெளியீடு

U. L. M. சாஜித், கமு/அரபா - வித்தியாலயம், நிந்தவூர்.




பரீட்சை இலக்கம்: 15

## தரம் 05 புலமைப் பரிசில் படிமுறைப் பரீட்சை - 2011


பெயர்/சுட்டெண்:........................ **வினாத்தாள்-1** நேரம்: 45 நிமிடங்கள்

**✱ பின்வரும் விவரணம் மூலம் கூறப்படும் உணர்வைக் காட்டும் படத்தின் கீழ்க் கோடிடுக.**


01. கவலைப் படாதீர்கள், நடந்தது நடந்து விட்டது. எல்லாம் நன்மைக்கேதான் என்று மனதைத் திடப்படுத்திக்கொள்ளுங்கள். தோல்விதான் வெற்றிக்கு முதற்படி. நாங்கள் எல்லோரும் உங்கள் அருகில் இருக்கும் போது நீங்கள் ஏன் கவ லைப்பட வேண்டும்? தைரியமாக இருங்கள்.
1) 2) 3) 4)



02. எனது கவிதைக்கு முதல் பரிசு கிடைக்கும் என்று நான் கனவிலும் நினைத் திருக்கவில்லை. எனக்கு என்ன பேசுவதென்றே தெரியவில்லை. முதலில் அம்மா விடம் சொல்ல வேண்டும்.
1) 2) 3) 4)




03. அம்மா ....... நான் ......நா.... ன்.. பேனாவைத் தொலைத்து விட்டேன் ..... அம்மா ....இனிமேல் தொலைக் கவே..... மாட்டேன்.....
1) 2) 3) 4)




**✱ அடுத்துவரவேண்டிய உருவின் கீழ்க் கோடிடுக.**

04. 1) 2) 3)



05. 1) 2) 3)



**✱ பிழையான கூற்றின் கீழ் கோடிடுக.**

06. 1) வல்லாரை, பசளி, கரட் என்பன நோயிலிருந்து எம்மைப் பாதுகாக்கும்.
2) சோறு, கருப்பட்டி, ஈரப்பலா மூலம் எமது உடலுக்கு சக்தி கிடை க்கின்றது.
3) கறி அடுப்பில் நன்கு கொதிக்கும்போதே தேசிப்புளி இடவேண்டும்.

07. 1) இலங்கை இந்தியாவுக்கு வடக்கே, இந்தியாவுக்கு அருகே அமைந்துள்ளது.
2) இலங்கைக்கு அண்மையில் உள்ள தீவுக்கூட்டம் மாலைதீவாகும்.
3) அரச இலச்சினையில் உள்ள தர்மச்சக்கரம் தார்மீகத்தைஎடுத்துக் காட்டுகிறது.

**✱ தரப்படும் தொடர்பை அவதானித்து அதற்கேற்ற தொடர்புள்ள விடையின் கீழ்க் கோடிடுக.**

08. யானை- களிறு,
1) மான் - பிணை. 2) குதிரை - குண்டு.
3) புலி - போத்து 4) குரங்கு - கடுவன்.


09. மயில் - அகவும்,
1) புறா - சொல்லும். 2) கிளி - இரையும்.
3) ஆடு - உறுமும். 4) கரடி - உறுமும்.

**✱ கீழே சில அறிவுறுத்தல், வாசகம் காணப்படுகின்றன. அவை உணர்த்தும் சரியான கருத்தைத் தரும் விடையின் இலக்கத்தை அடைப்புக்குள் எழுதுக.**


10. குடிநீர்
1) குடிப்பதற்கு உகந்த நீர் என்பதாகும்.
2) தண்ணீர் குடியுங்கள் என்பதாகும்.
3) இந்த நீர் உடை கழுவ உகந்ததல்ல என்பதாகும்.




11. கடி நாய் கவனம்
1) நாய்கள் கவனமாக இருக்க வேண்டும் என்பதாகும்.
2) இந்த வீட்டில் நாய்கள் இருக்கின்றன என்பதாகும்.
3) உள்ளே வருவது அபாயகரமானது என்பதாகும்.

**✱ தரப்படும் எழுத்துக்களையும் அவற்றுக்கான குறியீடுகளையும் அடிப் படையாகக் கொண்டு விடையளிக்குக.**




12. அவதானம் என்ற சொல்லைச் சரியாகக் குறிக்கும் குறியீட்டினை தெரிந்து கோடிடுக.
1) 2) 3)



13. பின்வருவனவற்றில் சரியான தொடர்பை காட்டுவது,
1) அவசரம் =

2) சம்பவம் =

3) வசனம்


**✱ 14 ஆம், 15 ஆம் வினாக்களில் உள்ள சொல்வரிசையில் ஏனைய சொற்களுடன் பொருந்தாத விடையைத் தெரிந்து கோடிடுக.**

14. 01) இரும்பு, வெள்ளி, தங்கம், செம்பு.
02) மஞ்சள், பச்சை, கபிலம், ஊதா.
03) கதிரை, கட்டில், வானொலி, கதவு.

15. 01) பலா, வேம்பு, மரம், தேக்கு.
02) தமிழ், கணிதம், விஞ்ஞானம், ஆங்கிலம்.
03) கத்தரி, தக்காளி, பாகல், வெண்டி.

16. இந்தக்குறியீடு தேசப்படத்தில் எதனைக்குறிக்கின்றது?
01) வெளிச்சவீடு.
02) விமானநிலையம்.
03) வானிலை ஆராச்சி நிலையம்.



**✱ பின்வரும் பாடலை நன்கு வாசித்து சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

நல்லறிவான்ற தலைமுறை தோன்றிட
நம் மனைவருக்கும் நம்மரசு தந்திடும் ஏடிதை
இளையோர் நம் சோதரர்களுக்காய் உணர்வுடன் பேணி
பாது காத்திடுவோம் நன்றாய்.


17. நம்மனைவர் என்பது,
1) ஆசிரியர்களை. 2) பெற்றோர்களை. 3) மாணவரை.

18. இங்கு ஏடு எனக் குறிப்பிடப்படுவது,
1) காலடிகளை. 2) நாவலை. 3) பாடநூலை.

**✱ உருக்களுக்கு பொருத்தமான கருத்துக்களை உடைய விடையின் கீழ்க் கோடிடுக.**

19.

1) மகிழ்ச்சி - செல்வம் - முன்னோக்கி.
2) நண்பிகள் - மகிழ்ச்சி - ரசித்தல்.
3) உல்லாசம் - கைகோத்து - நேரம்.


20.

1) நறுமணம் - தென்றல் - பறக்கிறது.
2) அழகு - நிறம் - காலை.
3) மகரந்தம் - மகிழ்ச்சி - அழகு.

**✱ பின்வரும் வினாக்களில் கூட்டில் குறுக்காகவும் மேலிருந்து கீழாகவும் மூன்று எழுத்துக்களைக் கொண்ட சொற்கள் உருவாகும் வகையில் வெற்றிடத்துக்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவுசெய்க.**

21.

| | | |
|---|---|---|
| ம | | பு |
| வி | | து |
| க | | மை |


1) ப், ழு, ம 2) ண், தி, ந் 3) ர, ரு, ரு

22.


**✱ தகவல்களை அடிப்படையாகக்கொண்டு மிகச்சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

23. 24 → [ ] → 8 பொறியின் உள்ளே சென்ற எண் 24 வெளியேவந்த எண் 8 எனின், பொறி செய்த வேலை,
1) [× 3] 2) [- 3] 3) [÷ 3] 4) [+ 3]

24. → [× 5] → 505 எனின், பொறியின் உள்ளே சென்ற எண் யாது?
1) 101. 2) 11. 3) 110. 4) 1010




25. ஒரு மாம்பழத்தின் விலை எவ்வளவு?
1) ரூ. 20. 2) ரூ. 30. 3) ரூ. 40 4) ரூ. 50.

26. ஒரு அன்னாசிப்பழத்தின் விலை எவ்வளவு?
1) ரூ. 30 2) ரூ. 40 3) ரூ. 50 4) ரூ. 20.

27. மூன்று மாம்பழம் இரண்டு அப்பிள் பழத்தின் விலை எவ்வளவு?
1) ரூ. 110 2) ரூ. 100 3) ரூ.140 4) ரூ. 120

(17 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவசர கடிதங்களைப் பதிவுத் தபாலில் அனுப்பினால் உரியவேளை கிடைக்கும்

யாழ்ப்பாணம் , ஒக17

யாழ். குடாநாட்டில் அவசர தபால்களை பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கும் பட்சத்தில் அவை உரிய நேரங்களில் உரியவர்ககளைச் சென்றடையும் என்று தபால் திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

தற்போது குடாநாட்டில் தபால்கள் உரிய வேளையில் வந்து சேராதது குறித்துப் பொது மக்கள் பல அசௌகரியங்களை எதிர்கொள்கின்றனர்.

இது குறித்து யாழ். தபால் திணைக்களத்துடன் தொடர்புகொண்டு கேட்டபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் தெரிவித்ததாவது:

பதிவுத் தபாலில் அனுப்பப்படும் தபால்கள் மற்றும் பொதிகள் யாவற்றுக்கும் தபால் திணைக்களங்களே பொறுப்பேற்கும்.

## தபால் திணைக்கள அதிகாரி தகவல்

தபாலின் வெளி உறையில் அனுப்புபவருடைய பெயர், வீட்டு இலக்கம், முகவரி என்பவற்றையும், சேரவேண்டிய நபருடைய விவரங்களையும் தெளிவான எழுத்தில் எழுதவேண்டும்.

சேர வேண்டிய முகவரியில் அந்த நபர் இல்லாத பட்சத்தில் உரிய தபால்கள் திணைக்களத்தில் தேங்கிக் கிடக்கும்.

தபால் வழங்கும் உத்தியோகத்தர்கள் பொறுப்புடன் நடந்து கொள்ளாமையும் ஒரு விதத்தில் காரணமாக அமைகிறது.

எனவே அதிமுக்கியமான பெறுமதியான தபால்களைப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்- என்று அவர் மேலும் தெரிவித்தார். (ம-311)

# புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு

கொழும்பு, ஒக 17

புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் சந்தன ராஜகுரு நியமிக்கப்பட்டுள்ளார். இவர் சிங்கபடையணியின் சிரேஷ்ட உறுப்பினராவர்.

இறுதிக் கட்டப் போரின் போது கைது செய்யப்பட்ட மற்றும் சரணடைந்த புலி உறுப்பினர்களுக்கு மறுவாழ்வு அளிக்கும் நடவடிக்கைகளை புனர்வாழ்வு ஆணையகம் மேற்கொண்டு வருகின்றது.

கடந்த 2009 ஆம் ஆண்டு முதல் இதுவரை காலமும் புனர்வாழ்வு ஆணையாளர் நாயகமாக மேஜர் ஜெனரல் சுதந்த ரணசிங்க கடமையாற்றி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

உயர் கல்வியைத் தொடர்வதற்காக சுதந்த ரணசிங்க வெளிநாட்டுக்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# மாலைதீவு ஜனாதிபதி இலங்கை வருகை

மூன்று நாள்கள் விஜயத்தை மேற்கொண்டு, மாலைத்தீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட் நேற்று முற்பகல் இலங்கையை வந்தடைந்துள்ளார்.

இலங்கை வந்துள்ள மாலைதீவு ஜனாதிபதி, இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் பல இராஜதந்திர அதிகாரிகளைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ற)

## பரீட்சை இல. 14 இன் வினாத்தாள் I இற்கான விடைகள்

01-2 02-2 03-2 04-2 05-2 06-2 207-2
08-2 09-2 10-3 11-1 12-3 13-3 14-2
15-3 16-1 17-3 18-2 19-12020-1 21-3
22-3 23-2 24-1 25-2 26-1 27-2 28-3
29-2 30-3 31-2 32-3 33-2 34-2 35-3
36-3 37-2 38-8 39-கறையான் 40-பூச்சியே

(புள்ளிகள் 40×2.5=100)


## பரீட்சை இல. 14 இன் வினாத்தாள் II இற்கான விடைகள்

1. எங்கள் வீட்டுத் தோட்டம் 2. காய்கறிகள், கிழங்குகள் 3. சகலரும் 4. அழகு 5. உருண்டு திரண்டு 6. கெட்ட 7. பயிர்கள் 8. எங்கள் 9. ஊட்டம்+உள்ள 10. மாப்பொருள் 11. Animal 12. City 13. Radio
14. புத்தகம் 15. மீன் 16. திராட்சை17. சொத்துக்களைப் பாதுகாப்பது நாம் அனைவரினதும் தேசிய கட மையாகும். 18. ஒவ்வொருவரும் தத்தமது கடமைகளை சரியாகச் செய் தால் நாடு விரைவாக அபிவிருத்தி அடையும் 19. வானம் 20. மெல்ல மெல்ல
21. 2 22. 2 23. 3 24. 1 25. 4 26. 1 27. 6 28. 2 29. கிவி 30. இலங்கை 31. அத்தாங்கு 32. பேருந்துத் தரிப்பிடம் 33. தோடம்பழம் 34. நிறைகலசம் 35. 3 36. நரம்புக்கருவி 37. வட்டவளை 38. வியாழன் 39. பழப்புளி 40.1 41. S.W.R.D. பண்டாரநாயக்கா
42. கிளிச்சாடிச்செடி 43. பம்பரக்கந்தை 44. மின்சாரம் தாக்கும் அபாயம் 45. சிலந்தி
46. இலங்கைத் தரச்சான்றிதழ் 47. குண்டுமல்லி 48. ஓடிக்கொலோன் 49. ரூபா 40.00.
50. ரூபா 20.00 51. ரூபா 1000.00 52. ரூபா 300.00 53.ரூபா 250.00 54. 2kg
55. 50m 56.2000 57. 343 58. 1393 59. 62 60. மு.ப. 10.30


* பொருத்தமான வாக்கியத்திற்கு புள்ளி வழங்குக.

(16 ஆம் பக்கத் தொடர்ச்சி)

* ஒரு வகுப்பறையில் உள்ள மாணவர்களின் எண்ணிக்கை பற்றிய தகவல்கள் குறியீடுகள் மூலம் காட்டப்பட்டுள்ளன.




தகவல்கள் குறியீடுகள் மூலம்



28. இதற்கேற்ப பாடசாலைகளில் அதிகம் உள்ளவர்,
1) சிறுவர்கள். 2) வளர்ந்த ஆண்கள். 3) வளர்ந்த பெண்கள்.

29. பாடசாலையில் உள்ள மாணவர்களை கூடிய எண்ணிக்கையில் இருந்து குறைந்த எண்ணிக்கை வரை ஒழுங்குபடுத்தும்போது கிடைக்கும் சரியான விடை,
1) சிறுவர்கள், வளர்ந்த ஆண்கள், வளர்ந்த பெண்கள்.
2) சிறுவர்கள், வளர்ந்த பெண்கள், வளர்ந்த ஆண்கள்.
3) வளர்ந்த ஆண்கள், சிறுவர்கள், வளர்ந்த பெண்கள்.
4) வளர்ந்த பெண்கள், வளர்ந்த ஆண்கள், சிறுவர்கள்.

* சரியான விடையை புள்ளிக்கோட்டில் எழுதுக.


30. சமிலை விட பாரிசா உயரமானவள் ஜென்னா பாரிசாவை விட உயரம் குறைந்தவர். சமில் ஜென்னாவை விட உயரம் குறைந்தவன். இவர்களில் உயரம் குறைந்தவர் யார்?


..................................................

31. தீபனுக்கு வடிவழகி என்ற ஒரே ஒரு சகோதரி உண்டு. இவள் பாலா என்பவரை மணந்து சிந்தாதேவி என்ற பெண்ணை பெற்றெடுத்தாள். தீபன் தம்பதியினருக்கு கயல்விழி என்ற பிள்ளை உண்டு. சிந்தாதேவி கயல்விழியை என்ன முறை சொல்லி அழைப்பார்?

..................................................

* முதலில் தரப்படும் சதுரமுகியைச் செய்வதற்கு தயாரிக்கப்பட்ட இரு பரிமாண உருவில் ஒட்டும் பசை பூசப்பட்ட பகுதியில் பிழையாகக் காணப்படும் உருவின் கீழ்க் கோடிடுக.

32.



33.



* சரியான விடையை எழுதுக.

லீனா, லானா, லூனா ஆகிய ஒவ்வொருவரிடமும் பேனைகள் உண்டு. லானா, லூனா, லேனா ஆகிய ஒவ்வொருவரிடமும் பென்சில்கள் உண்டு. சானா, லீனா, லேனா ஆகியவர்களிடம் புத்தகம் உண்டு.

34. யாரிடம் பேனையும் புத்தகமும் உண்டு?

..................................................

35. யாரிடம் புத்தகம் மட்டும் உண்டு?

..................................................

36. மாலை 5 மணியளவில் அஸாயா நகரிலிருந்து வீடு வரும்போது அவளது நிழல் அவளைப் பின் தொடர்ந்து வந்தது. எனின், அவள் எத்திசையை நோக்கி நடக்கிறாள்?

..................................................

37. எனது அண்ணனின் மகளின் மகன் எனது தாயாரை என்ன முறை சொல்லி அழைப்பான்?

..................................................

38. ஜாகிதா தனது தம்பியுடன் கடற்கரைக்கு சென்றாள். அங்கே அவளது சித்தியின் மகள் பஸ்லியாவும் அவளது கணவரும் வந்திருந்தனர் எனின், ஜாகிதாவின் தம்பிக்கு பஸ்லியாவின்கணவர் என்ன உறவுமுறை ?

..................................................

39. நான் கண்டி நோக்கிச் செல்கிறேன். எனக்கு எதிரே நான்கு பேர் வருகின்றனர். எனின், கண்டிக்கு செல்வோர் எத்தனை பேர்?

..................................................

40. ஈசான மூலைக்கு எதிர்த்திசை எது?

..................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# சேவை நலன் பாராட்டு

## உயர்திரு.
## க.ஆனந்தராஜா அவர்கள்
### முகாமையாளர் இலங்கை வங்கி, முல்லைத்தீவு (2011 - ஆவணி)

மங்கிய வாழ்வை மலர்ந்திட வைத்தவர்
கதிர் போல் எழுந்து ஒளிதந்த
உயர்திரு. கதிர்காமத்தம்பி ஆனந்தராஜா
அவர்கள் - எம்
எதிர்காலம் செழிக்க உழைத்த
புதிரான சேவையை நினைத்து - முல்லை
வர்த்தகர் நாம் நன்றியோடு - ஐயாவின்
அர்த்தமுள்ள சேவைகளைப் பாராட்டி
வாழ்த்துகின்றோம்

இலங்கை வங்கியைத் துலங்க வைத்தவர்
புரண்டு போனதைப் புனரமைத்தவர்
சலங்கை ஒலியாக முல்லையில் ஒலித்தவர்
வரண்ட நிலங்களை வளமாக்கி வைத்தவர்

தங்க நகைகளை பங்கமின்றிக் காத்தவர் - எம்
பத்திரங்களைப் பத்திரமாகத் தந்தவர் - அன்று
மங்கிய வாழ்வை பொங்கிடச் செய்தவர் - இலங்கை
வங்கியைக் கொண்டு மக்களை வளர்த்தவர்

நித்தமும் உதவிகள் சுமுகமாய் வழங்கியே
வர்த்தக சமூகத்தை வளர்த்திட உதவினார்
எத்தனை சேவைகள் இனிதாகச் செய்துமே
யுத்த அழிவை மாற்றிட உதவினார்.

ஏழை மக்களின் வாழ்வை மாற்றினார்
ஏற்றத் தாழ்வின்றி சேவையாற்றினார்
நாளை வாழ்ந்திட சேமிப்பைக் காட்டினார்
ஏற்ற பணியில் திறமையைக் காட்டினார்

முதல் இழந்தோர்க்கு முதல் உதவி செய்தவர்
தொழில் தொலைந்தோர்க்கு தோள் கொடுத்தவர்
முதல் முதலாகத் துணிவுடன் உழைத்தவர்
எழில் வங்கியை வளமாகத் தந்தவர்
செல்வமெல்லாம் சீருடன் வாழ்ந்திட
அல்லும் பகலும் நாம் இறைவனை வேண்டுகின்றோம்.



*சேவையை பாராட்டி வாழ்த்தும்*

**வர்த்தக சமூகம்**
**முல்லைத்தீவு**
**புதுக்குடியிருப்பு**
**முள்ளியவளை.**

6940

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவகப் பகுதியின் தரிசு நில அபிவிருத்தி

நிலம் என்பது மிகவும் பெறுமதி வாய்ந்ததும், வரையறுக்கப்பட்டதுமான மூலவளமாகும். மக்களின் வளர்ந்து செல்லும் தேவைகளுக்கு ஏற்ப கட்டடங்களும் ஏனைய வசதி வாய்ப்புகளும் செழிப்பான விவசாய நிலங்களை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கின்றன. நகரமயமாக்கலின் விளைவாக மனிதனை போசித்து வந்த நிலங்களில் குடியிருப்புகளும் ஏனைய சேவை நிலையங்களும் வளர்ந்து கொண்டிருக்கின்றன. இதனால் பெரிய நெருக்கடியை நாம் இப்போது எதிர்நோக்கா விட்டாலும் அதற்கான காலம் வெகு தூரத்தில் இல்லை என்ற துறைசார் நிபுணர்களின் கருத்துக்கள் ஆங்காங்கே ஒலிக்கத்தான் செய்கின்றன. இருந்த போதும் இதைப் பெரிதாக யாரும் காதில் வாங்கிக் கொண்டதாகத் தெரியவில்லை.

வளமான நிலங்களுக்கான கேள்வி அதிகரித்துச் செல்லும் அதேநேரத்தில் பல ஏக்கர் கணக்கான நிலங்கள் தரிசு நிலங்களாகக் கைவிடப்பட்டுள்ளதைக் காணக்கூடியதாகவுள்ளது. இத்தகைய இரண்டு நிலைமைகளும் கருத்தில் கொள்ளப்பட்டு திட்டமிடப்பட்ட நிலப்பயன்பாட்டுக் கொள்கை ஒன்றுக்கான தேவை மிகவும் அத்தியாவசியமானதும் அவசரமானதுமாகும். இல்லாவிட்டால் எகிறிவரும் நிலத்துக்கான தேவையை எதிர் கொள்ள முடியாமல் போகலாம். இது இந்தப் பிரதேசங்களின் வளர்ச்சியில் பிரச்சினைகளையும், பின்னடைவுகளையும் கொண்டு வரும் ஆபத்துள்ளது.

பெருந்தொகையான நிலங்கள் தரிசு நிலங்களாகக் கைவிடப்பட்டுள்ளன. இது ஓர் அறிவு சார்ந்த விஞ்ஞான பூர்வமான நிலப்பயன்பாட்டுக் கொள்கைக்குமாறுபட்டதாகும். அவ்வாறான அறிவு பூர்வமான நிலப்பயன்பாட்டுக் கொள்கையின் தேவையும் அதனூடாக விசேட வலயங்கள் உருவாக்கப்பட்டு ஒரு துண்டு நிலமும் அதற்குரிய சரியான பாவனைக்கு உட்படுத்தப்படுகின்றது என்பதை உறுதிப்படுத்த வேண்டிய தேவையுமே அபிவிருத்தி முயற்சிகளின் முன் நிபந்தனையாகவுள்ளது. உள்ளூராட்சி மன்றங்களோடு துறைசார் திணைக்களங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு விசேட அனுமதிப்பத்திர முறைகளை அறிமுகப்படுத்துவதன் மூலம் இதை நடை முறைப்படுத்தலாம்.

இந்தக் கொள்கையின் ஓர் அங்கமாகக் கைவிடப்பட்ட தரிசு நிலங்களை அபிவிருத்திக்கு உட்படுத்தி அவற்றை உரிய தேவைகளுக்குப் பயன்படுத்தும் போது வளமான விவசாய நிலங்களை விவசாயத்துக்காகவே தொடர்ந்தும் பாதுகாக்கக் கூடியதாகவிருக்கும். யாழ்.மாவட்டத்தில் 16,000 ஹெக்ரெயர் தரிசு நிலம் காணப்படுவதாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. இதில் தீவகப் பிரதேசத்தில் அண்ணளவாக மொத்தம் 5110 ஹெக்ரெயர் தரிசு நிலம் உள்ளது. பிரதேச நிர்வாகப் பிரிவு ரீதியாகப் பின்வருமாறு காணப்படுகின்றது.

நெடுந்தீவு -2360 ஹெக்ரெயர்
வேலணை- 2150 ஹெக்ரெயர்
ஊர்காவற்றுறை -500 ஹெக்ரெயர்

இவற்றை அபிவிருத்தி செய்து நிலத் தேவைகளுக்குப் பயன்படுத்துவது அவசியமாகும். இதன் அபிவிருத்தி தொடர்பாக வழங்கப்படும் ஆலோசனைகள் பொதுவாக தருசு நில அபிவிருத்திக்கு பொருத்தமானதாக அமையும்.

யாழ்.மாவட்டத்தில் தொடர் மாடிக் குடியிருப்புக்கள், ஏனைய பொது வசதிகள்,விளையாட்டு மைதானங்கள், பொழுது போக்கு மையங்கள், போக்குவரத்து மையங்கள் என்பவற்றுக்கான தேவைகள் அதிகரித்துக் கொண்டிருக்கின்றன. இவை வளமான விவசாயச் செய்கை நிலங்களை ஆக்கிரமிக்காது திட்டமிடப்படுவது அவசியமாகும். முன்பு இவற்றுக்கான அமைவிடக் காரணியாக நன்னீர் மட்டுமே கவனத்தில் கொள்ளப் பட்டது. உதாரணமாக யாழ். மாவட்டத்தில் தேசிய கல்வியியற்கல்லூரி அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போது மண்கும்பான் பகுதியில் அமரர் யோகேந்திரா துரைசுவாமியின் பரந்தளவான நிலம் அடையாளப் படுத்தப்பட்டது. தீவக் குடிதண்ணீர் பிரச்சினையை காரணம் காட்டி இந்தத்திட்டம் கைவிடப்பட்டு, வளமான விவசாயப் பகுதி நோக்கி நகர்த்தப்பட்டது. அன்றைய சூழலில் அது நியாயமானதாக இருந்திருக்கலாம். எதிர்காலம் பற்றிய தூரநோக்கும், சிந்தனையும் இல்லாமல் அவ்வப்போது இருக்கும் சூழ்நிலைக்கேற்ப திட்டங்களை தீட்டுவதும், நடைமுறைப்படுத்துவதும் அறிவுசார் சமூகத்துக்கும் நிலைபேறான அபிவிருத்திக்கும் பொருத்தமான தாக அமையாது. குடி தண்ணீர் மற்றும் பொது வசதிகளைத் தேவையான இடத்துக்கு இலகுவாக எடுத்துச் செல்லக் கூடியதாகவிருக்கும். ஆனால் நிலவளம் அரிதாகிப் போனால் கடலை நிலமாக மீட்டும் நில மீட்சித் திட்டங்களுக்குத்தான் (Land Reclamation System) செல்லவேண்டும். இவ்வாறான நிலைமைகளைக் கருத்திற் கொண்டு யாழ். நகரின் மத்தியில் இருந்து 20-25 நிமிடங்களில் அடையக் கூடிய அல்லைப்பிட்டி, மண்கும்பான், அராலி சந்திப் பகுதி, சரவணை பகுதி என பெருந்தொகையான நிலங்கள் பிரதான வீதியின் இருமருங்கும் காணப்படுகின்றன. அரச உதவியுடனான வீடமைப்புத் திட்டங்களை ஆரம்பித்து இந்தக் காணிகளைப் பயன்பாட்டுக்குக் கொண்டுவரலாம். யுத்த காலத்திற்கு முன்பு அல்லைப்பிட்டி பகுதியில் அலுமினியம் தொழிற்சாலை ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வந்நது.

இவ்வாறான தொழிற்சாலைகளுக்கான முயற்சிகள் தற்போதும் மேற்கொள்ளப்படலாம் அத்துடன் கடல் உணவுபதனிடும் தொழிற்சாலைகள், ஐஸ் உற்பத்தி நிலையங்கள், கடல்முக பொழுது போக்கு மையங்கள் என்பவற்றை இப்பகுதிகள் நோக்கி நகர்த்தும் போது மக்களை தம்பால் ஈர்க்கும் தன்மை இப்பிரதேசங்களுக்கு ஏற்பட்டு அபிவிருத்தி தவிர்க்க முடியாததாகிவிடும். அனுமதி அளிக்கும் உள்ளூராட்சி மன்றங்கள் துறைசார் திணைக்களங்கள் இவற்றைக் கருத்திற் கொண்டு தமது நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

* மேலும் தரிசு நிலங்கள் தொடர்பில் வகைப்படுத்தலுக்கு உட்படுத்தி தென்னைச் செய்கைக்கு பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டு தென்னைச் செய்கையின் கீழ் கொண்டுவருதல்.
* பனை அபிவிருத்திக்குப் பொருத்தமான காணிகள் இனங்காணப்பட்டு பனை நடுகைக்கு உட்படுத்தப்பட வேண்டும்.
* சிறுகாடுகளை உருவாக்கக் கூடிய பிரதேசங்களில் பூவரசு, வேம்பு, புளி மற்றும் பொருத்தமான மரங்களை வளர்க்கக்கூடிய காணிகளை இனங்காணுதலும் சில காடுகளை உருவாக்கலும் இதன் மூலம் குறிப்பிட்டளவு நிலம் பயன்படுத்தக்கூடிய சந்தர்ப்பம் உண்டு.
* மேய்ச்சல் தரைகளாகப் பயன்படுத்தக்கூடிய காணிகளை வகைப்படுத்தி உவர் தன்மைக்கு ஈடுகொடுக்கக் கூடிய புல்வகைகளை அறிமுகப்படுத்தலும் வளர்த்தெடுத்தலும் .
* கடற்கரைப் பிரதேசங்களில் வளரும் கற்றாளை உட்பட பல தாவரங்கள் மருத்துவ தேவைக்காக பயன்படுத்தப்படுகின்றன. இவை இப்பிரதேசங்களிலே வளரக்கூடியவையாகும். இயற்கையின் மாற்றத்தாலும், நோய்களின் தாக்கத்தாலும் தற்போது இவை அழிவடைவதைக் காணக்கூடியதாக உள்ளது. பேணிப்பாதுகாப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படலாம்.

**ஜே.எக்ஸ்.செல்வநாயகம்**

* தரிசு நிலங்களோடு ஒட்டியதாகக் காணப்படும் சதுப்பு நிலங்களில் ''மங்றோ'' தாவரங்களை வளர்ப்பதன் மூலமும் உள்ளமைந்த பகுதிகளில் தொடராக சவுக்கு மரங்களை வளர்ப்பதன் மூலமும் நிலப் பாதுகாப்புக்கும், அபிவிருத்திக்கும் வாய்ப்பானதாக அமைவதோடு மீன்வள விருத்திக்கும் பறவைகள் சரணாலயமாகவும் பயன்பட வாய்ப்பேற்படும்.
* தரிசு நில அபிவிருத்திக்கும், தீவகத்தின் நன்னீர் மற்றும் விவசாய அபிவிருத்திக்கும் அடிப்படையான தேவை கடல் நீர் உள்நாட்டுக்குள் ஊடுருவுவதைத் தடுக்கும் செயற்பாடாகும். ஏற்கனவே இருந்து அழிந்து போன மண் அணைகள் மற்றும் கட்டுமானங்கள் என்பவற்றை புனரமைக்க வேண்டும் கடந்த சில வருடங்களில் வடக்கு, கிழக்கு நீர்ப்பாசன விவசாய திட்டத்தின் கீழ் ஒரு பகுதி வேலைகள் நிறைவேற்றப்பட்டன. மிகுதி வேலைகளும் முன்னுரிமை அடிப்படையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதுவே தரிசு நில அபிவிருத்திக்கான முன் நிபந்தனையாக அமைகிறது.

தரிசு நில அபிவிருத்தி தொடர்பாக ஆர்வமுடையோர்,திட்டமிடலாளர்கள், துறைசார் நிபுணர்கள் ஊர்காவற்றுறைப் பகுதியில் ஆதார வைத்தியசாலைக்கும், புனித அந்தோனியார் கல்லூரிக்கும் இடையில் உள்ள வளமற்ற நிலம் எவ்வாறு அப்பகுதிக்கான நிர்வாக மற்றும் பொது வசதிகளுக்கான மையமாக மாற்றப்பட வேண்டும் என 2000 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்ட திட்ட வரைபையும், அதன் நடைமுறையையும், அப்பிரதேச அபிவிருத்தியையும் முன்னுதாரணமாகக் கொள்ளலாம்.

தரிசு நில அபிவிருத்தி பற்றிச் சிந்திக்கும் போது மழைநீர் தேங்கக் கூடிய நீர்தேக்கங்களை உருவாக்கக் கூடிய சந்தர்ப்பங்களும் உள்ளன. பெரும்பாலான தரிசு நிலங்களில் மாரிகாலத்தில் குறிப்பிட்ட சில மாதங்களுக்கு மழைநீர் தேங்கி நிற்கின்றது. இப்பகுதிகளில் குறிப்பிட்ட பிரதேசங்களை தெரிவுசெய்து நீர் தேக்கங்களை அமைப்பதன் மூலம் நிலத்தடி நீர் சேமிப்பு நிலமேற்பரப்பு நீர் சேமிப்புக்கும் அத்துடன் அயல் நிலங்களின் வளர்ச்சிக்கும் உதவியாக அமையும். மேலே கூறப்பட்ட கருத்துக்களை கவனத்தில் கொண்டு முறையான திட்டமிடலின் மூலம் தரிசு நில அபிவிருத்தி அணுகப்படும் போது மட்டுப்படுத்தப்பட்ட வளமாகக் காணப்படும் நிலத்தின் உச்சப் பயன்பாடு உறுதிப்படுத்தப்படும். இதற்கு விரிவான நிலப்பயன் பாட்டு உத்தியொன்று வகுக்கப்பட வேண்டியது அவசியமாகும். ★

# நல்லூர் கந்தன்

## மஹோற்சவம்

(பதின்நான்காம் திருவிழா)



### கோனாக அரசாளும் நல்லைக் கந்தன்

*நல்லைவந்துறை நற்றமிழ்க் கந்தா
நாடியுன்னைச்
சரண்புகுந்தோம்
நல்வாழ்வை நமக்கீவாய்!
மயில் மீது திருவீதி உலாவந்து
மருளும் பிணியாவும் போக்கி
மனத்தெழுந்தருள் புரிவாய்
சொல்லா மறையின் பொருள்
சொல்லியே இறைவா
தொண்டர்கள் உள்ளம் நெகிழ
சோதியாய் அருட்காட்சி
தந்திடுவாய்
கல்லாய் நீயிருந்தால்
மட்டும் போதுமா?
கஷ்டங்கள் தீர்த்து வைக்க
கதியெனவே உன்னை அழைக்கின்றோம்
கோனாக நல்லை அரசாளும்
கோமகனே
குறத்தி மனையாள் துணையோடு
குருவாய் எமக்கருள் புரிவாய் குமரா!*

குறிஞ்சிக்கவி செ.ரவிசாந்.



### ஆண்டருள வருவாய் ஆறுமுகத்தோனே!

*நிதிபெறு அன்னை தந்த தவவலிமையோடு
துதிபெற வேலதனைத் தாங்கித் துணிவோடு
சதிபுரி அசுர வம்சத்தை வதைத்து
மதியுவ தேவர்தம் குறைகளை மீட்டவனே
விதியுற நின்ற பல வினைகள் பாற
வதிவிட மற்றோர் வறியநிலை மாற
அதிவிரை தேரில் ஆரோகணித்துத்தெம்மை
ஆண்டருள் வருவாய் ஆறுமுகத்தோனே!*

தணிகாசலம், கற்கோவளம்.

### பேரருள் தந்திடுவான் நல்லைக் கந்தன்

*பார்போற்றும் கலியுகவரதன்
பரமசிவன் நெற்றிக் கண் புதல்வன்
ஊர்போற்ற நல்லையில் வீற்றிருப்பவன்
ஊழிவரை உலகைக் காப்பவன்
வார்த்தைகள் போற்றும் வள்ளி தெய்வானை மணாளன்
வளமான வாழ்வுக்கு வரம்கொடுப்பவன்
பேர்போற்றும் பெருமைகொண்ட நல்லைக் கந்தன்
பேரருள் தந்து என்றும் எம்மைக் காத்திடுவான்*

சொக்கலிங்கம் தர்மகுலசிங்கம், நாயன்மார்கட்டு.

### நல்லூரில் உறையும் நாயகனே

*அசுரர் குலத்தை அடியோடு அழித்திட்ட
சிவனின் திருக்குமாரா
வள்ளி தெய்வானையுடன் மயில் ஏறி வீதியிலே
வலம் வரும் கார்த்திகேயா
இந்நாட்டில் நாம் என்றும் இனிமையுடன் வாழ
வழி அமைத்த கயிலைச் செல்வா
நிம்மதியை எந்தனுக்கு நிலைபெறச் செய்து தந்த
எம் - சரவணபவனே
பட்டதுன்பம் போதும் ஐயா! பாரினிலே
நாம் இனிமேல் என்றும்
நிம்மதியாக வாழ்ந்திட - நிலைபெறச் செய்திடையா
அன்பின் திருவருவே ஞானவேலா*

வாணி, விசுவமடு.

### வண்ணமயில் வாகனனே வாராய்..

*வள்ளி மணாளனே புள்ளி மயில்வாகனா
துள்ளி வருவாய் நம் துயரம் களைவாய்
கள்ளமில்லா பக்தர் நெஞ்சில் - நீயும்
தெள்ளமுதாய் உறைவாய் - பகையும் தீர்ப்பாய்
எண்ணும் பொழுதெல்லாம் என் முன்னே வருவாய்
கண்கள் பெருகுதே உனை காணும் பொழுதினிலே
விண்ணதிர அரோகரா ஒலி முழங்க
நல்லையில் வண்ணமயில் வாகனனே வாராய் வாராய்*

வேலனடியாள், நல்லூர்.

திருவிழாச் சிறப்புற பிரார்த்திப்போர்:
ஸ்ரீ லக்சுமி ஜுவலறி
162, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 222 9440, 0777038772

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊடகங்களும் புலபெயர் தமிழரும் இணைந்து ரணிலுக்கு எதிராகச் சதி

கொழும்பு, ஒக. 17

ரணில் விக்கிரமசிங்கவை கட்சியின் தலைமைத்துவப் பதவியில் இருந்து நீக்குவதற்காக சில ஊடகங்களுடன் புலம்பெயர் தமிழர்களும் இணைந்து சதி செய்கின்றனர் என்று மாகாண சபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றம்சாட்டினர்.

ரணில் விக்கிரமசிங்கவின் தலைமைத்துவத்தின்கீழ்தான் அனைவரையும் ஒன்றிணைத்து கட்சியைப் பலப்படுத்தி அனைத்துத் தேர்தல்களையும் வெற்றி கொள்ள முடியும் என்றும், கரு ஜயசூரியவை தலைவராக நியமிக்க முடியாது என்றும் அவர்கள் கூறினர்.

## மாகாணசபைகளின் எதிர்க்கட்சித் தலைவர்கள் குற்றச்சாட்டு

கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தயா கமகே, வடமேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சமல் பிரசன்ன செனரத் மற்றும் வடமத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கஸ்தூரி அநுராத நாயக்க ஆகியோர் நேற்று எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் ஊடவியலாளர்களைச் சந்தித்து உரையாற்றியபோதே இவ்வாறு கூறினர்.

இதுதொடர்பாக கிழக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தயா கமகே கூறியவை வருமாறு:-

எதிர்வரும் தேர்தலில் நாம் ஒன்றிணைந்து வெற்றி பெற வேண்டும். அதற்கு ஏற்ப கட்சிக்குள் பிரிந்து நிற்பவர்கள் எல்லாம் ஒன்றிணைந்துசெயற்பட வேண்டும்.

தேர்தலில் ஏற்படும் தோல் விக்கு நாம் தலைமைத்துவம் மீது குறை கூற முடியாது. நாம் ஒன்றிணைந்து செயற்படுவதன் மூலம் தான் வெற்றியை அடையமுடியும். ரணிலின் தலைமைத்துவம் ஊடாகத்தான் அனைத்துத் தேர்தல்களிலும் எம்மால் இனி வெற்றிபெற முடியும் - என்றார். வடமத்திய மாகாண எதிர்க்கட்சித் தலைவர் கஸ்தூரி அநுராத நாயக்க கூறியவை வருமாறு:-

ரணில் விக்கிரமசிங்க புலிகளுடன் செய்துகொண்ட யுத்தநிறுத்த ஒப்பந்தம்தான் புலிகளிடையே பிளவு ஏற்பட்டு மஹிந்த ராஜபக்ஷ யுத்தத்தில் வெற்றி பெறக் காரணமாக அமைந்தது.

இதன் காரணமாக வெளிநாடுகளில் உள்ள புலம்பெயர் தமிழர்களும், இங்குள்ள சில ஊடகங்களுடன்ஒன்றிணைந்து ரணில் விக்கிரமசிங்கவை கட்சியின் தலைமைத்துவத்தில் இருந்து நீக்க முயற்சி செய்கின்றனர். ரணிலின் தலைமைத்துவத்தில் எந்தச் சிக்கலும் இல்லை. அவரை மாற்ற வேண்டிய தேவை இல்லை. கரு ஜயசூரிய தலைமைத்துவத்துக்குத் தகுதியானவர் என்று ஓரிருவர்தான் கூறுகின்றனர். பெரும்பாலானோர் ரணிலையே தலைவராக ஏற்றுக்கொண்டுள்ளனர். ஆகவே, ரணில்தான் தலைவராக இருக்க வேண்டும் - என்றார். வடமேல் மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சமல் பிரசன்ன செனரத் கூறியவை வருமாறு:-

கரு ஜயசூரிய அரசுடன் இணைந்து கொண்டபோது அவரை மீண்டும் கட்சிக்குள் இணைப்பதற்குப் பாடுபட்டவர் ரணில் விக்கிரமசிங்கதான். கரு ஜயசூரியவை மீண்டும் கட்சியில் இணைத்து அவர் வகித்துவந்த பிரதித் தலைவர் பதவியை அவருக்கு மீண்டும் வழங்க வேண்டும் என்று ரணில் கூறினார். கரு ஜயசூரியவை தலைவராக்க வேண்டும் என்று இப்போது கூறுகின்ற வர்கள் அப்போது ரணில் விக்கிரம சிங்கவின் இந்த முயற்சிக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். இப்போது அவர்களால் வெறுக்கப்பட்ட கருவே தலைவராக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகின்றனர்-என்றார்.

# ஆண்களை மயக்கி உடைமைகள் அபகரிப்பு: புறக்கோட்டையில் பத்துப் பெண்கள் கைது

கொழும்பு, ஒக.17

இரவு நேரங்களில் கொழும்பு, புறக்கோட்டை பஸ் நிலையத்திற்கு வரும் ஆண்களை ஏமாற்றி ஹோட்டல்களுக்கு அழைத்துச்சென்று அவர்களிடமிருந்து பணம், நகைகள் மற்றும் பெறுமதியான பொருள்களை அபகரித்துக்கொண்டு தலைமறைவாகும் கும்பலைச் சேர்ந்தவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் பொலிஸார் பத்துப் பெண்களைக் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலையடுத்து தேடுதல் நடவடிக்கையில் ஈடுபட்டபோதே இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். இவ்வாறு சந்தேகத்தில் கைது செய்யப்பட்டுள்ள பெண்கள் 20-23 வயதுக்கிடைப்பட்டவர்களெனவும், இவர்கள் தனமல்வில, மாத்தறை, கண்டி, மொரட்டுவ மற்றும் நீர்கொழும்பு பிரதேசங்களைச் சேர்ந்தவர்களெனவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ச)

# பிரதேச சபை உறுப்பினர் மீது தாக்குதல்

கொழும்பு, ஒக.17

இறத்தோட்டை பிரதேசசபை உறுப்பினர் ஒருவர் தாக்குதலுக்கு இலக்காகி படுகாய மடைந்த நிலையில் கண்டி பிர்தான வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார்.

மர்ம மனிதர்களைப் போல் எங்கே போகிறீர்கள் என்று பாடசாலை மாணவர் ஒருவரிடமும் அவரது சகோதரிடமும் வின வியதையடுத்தே இவர் தாக்கப்பட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

தாக்குதலுடன் தொடர்புபட்டவர்கள் எனக் கூறப்படும் மாணவரும், அவரது சகோதரரும் மாத்தளை நீதிவான் முன்னிலையில் ஆஜர்செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (ச)

# தமிழினிக்கு தொடர்ந்து விளக்கமறியல்

கொழும்பு, ஒக.17

தமிழீழ விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழினியை ஒகஸ்ட் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பிரதம நீதிவான் ரஷ்மி சிங்கப்புலி நேற்றுமுன்தினம் உத்தரவிட்டார்.

தமிழினி தொடர்பாக சட்டமா அதிபருக்கு தாம் அனுப்பிய அறிக்கைக்கு சட்டமா அதிபரிடமிருந்து இன்னும் அறிவுறுத்தல் கிடைக்கவில்லை என குற்றுப்புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் தெரிவித்து, சந்தேகநபரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கோரினர்.

அதையடுத்து தமிழி னியை ஒகஸ்ட் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

இறுதி யுத்தத்தின்போது விடுதலைப் புலிகளின் முன்னாள் மகளிர் அணிப் பொறுப்பாளர் தமிழினியும் நலன்புரி நிலையத்தில் இருந்து கைது செய்யப்பட்டார் என்பது தெரிந்ததே. (ச)

ஐந்தாம் ஆண்டு நினைவலைகள்



மலர்வு: 22.04.1981
உதிர்வு: 17.08.2006

அமரர் சுகுணராசா நிமலன்
(யாழ்.இந்து பழைய மாணவன்)

உள்ளத்தை உருக்கும் நினைவுகளோடு
நிலை தளர்ந்த நிலையில் நாம்
ஆண்டைந்து மறைந்தாலும் எம் கண்ணீர்ப் பூக்கள்
உன் ஆத்மாவின் சாந்திதனை வேண்டி நிற்கும்

உன் நினைவுகளுடன்: அம்மா, அப்பா, அண்ணா, அண்ணி, அக்கா, அத்தான், மனைவி, மகன்,மருமக்கள்

கரந்தன், நீர்வேலி.

31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மண்ணுலகில்: 26.12.1948
விண்ணுலகில்: 18.07.2011



திருமதி சிவயோகச்செல்வம் செல்லம்மா
(செல்லம், முன்னாள் பணியாளர், கைதடி MPCS)

கடந்த 18.07.2011 இல் இறைபதம் அடைந்த எமது குடும்பத் தலைவியின் மரணச் செய்தி அறிந்து எமது இல்லம் நாடிவந்து அனுதாபம் தெரிவித்து உதவிக்கரம் நீட்டிய உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களுக்கும் கண்ணீர் அஞ்சலிப் பிரசுரம் வெளியிட்டு மலர்வளையம் வைத்தும் பத்திரிகை, தொலைபேசி , கடித மூலமாக அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளிலும் இறுதி யாத்திரையிலும் கலந்துகொண்டோருக்கும் பல வழிகளிலும் உதவிபுரிந்த அனைவருக்கும் எங்கள் உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (17.08.2011) புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

கைதடி-நாவற்குழி, கைதடி. (6948) குடும்பத்தினர்.

கிருஷ்ணா அடகுச் சேவை

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
பதிவு இல. J/DS/BR/472

மேலே குறிப்பிட்ட எமது ஸ்தாபனத்தில் 2010 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 31 ஆம் திகதி (31.06.2010) இற்கு முன்னர் வைத்த அடகு நகைகள் யாவற்றையும் 2011 ஆம்ஆண்டு செப்ரெம்பர் மாதம் 15 ஆம் திகதி (15.09.2011) இற்கு முன்பு மீட்கவும். மீட்க முடியாவிட்டால் தற்போதைய சந்தைப் பெறுமதிப்படி அடைவுத் தொகையைக் கூட்டிப் பெற்றுக் கொள்ளவும். அல்லது ஒரு பகுதிப் பணத்தைக் கட்டிப் புதுப்பித்துக்கொள்ளவும்.

இரண்டும் செய்யத்தவறின் 15.09.2011 ஆம் திகதி விற்கப்படும் என்பதை எமது வாடிக்கையாளர்களுக்கு அறியத் தருகின்றோம்.

உரிமையாளர்

இல.370, கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே: 021 2225046

மேக்கன்ரைல் பாதுகாப்புச் சேவை/
மேக்ஸ் கிளினிங் சேர்விஸ்

**வெற்றிடங்கள்**
பாதுகாப்புச் சேவை : கனிஷ்ட பாதுகாப்பு உத்தியோகத்தர் (ஆண்கள்)
சுத்திகரிப்புச் சேவை : சுத்திகரிப்புத் தொழிலாளர்கள் (ஆண், பெண்)

**தகைமை**
பாதுகாப்புச்சேவை : க.பொ.த.(சா/த)பரீட்சையில் தமிழ், கணிதம் உட்பட இருதடவைகளுக்கு மேற்படாதவாறு 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். நல்ல தேகாரோக்கியமும் நல்ல கண்பார்வையும் இருத்தல் வேண்டும். உயரம் 5'4"

**வயதெல்லை**
பாதுகாப்புச் சேவை : 22-55வயதிற்கு இடைப்பட்டோர்
சுத்திகரிப்புச் சேவை : 20-45 வயதிற்கு இடைப்பட்டோர்
நேர்முகப் பரீட்சை : 21.08.2011 அன்று மு.ப. 10 மணிக்கு 651/12, நாவலர் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள அலுவலகத்தில் நடைபெறும்.

ஆவணங்கள் : கிராம சேவகரின் நற்சான்றுப் பத்திரம் (6 மாதத்திற்குட்பட்டது)
பிறப்பு அத்தாட்சிப் பத்திரம்
கல்வித்தகைமைச்சான்றிதழ்கள்
தேசிய அடையாள அட்டை
உறவினரல்லாத இருவரின் நற்சான்றுப் பத்திரம்

மேற்கூறப்பட்ட ஆவணங்களின் மூலப் பிரதியுடனும் [illegible] சமுகம் தரவும்.

651/12, நாவலர் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (6953) பணிப்பாளர்.

வீடு விற்பனைக்கு

மாவடிச் சந்தி, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டையில் 5 பரப்புடன் கூடிய வீடு உடனடி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 0771040881, 0779218633



உதவி கோருகிறார்

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட சஞ்சய் என்ற 4 வயதுச் சிறுவனுக்கு இருதய சத்திர சிகிச்சை செய்யுமாறு வைத்தியர்கள் கூறி உள்ளனர். சத்திர சிகிச்சை செய்வதற்கு, இந்தியா செல்வதற்கு பணம் தேவைப்படுகிறது. உடனடியாக இவரது குடும்பத்தினரால் பணம் திரட்ட முடியாதுள்ளதால் பணவசதி உள்ளவர்களிடம் இருந்து உதவியை எதிர்பார்க்கின்றனர்.

*AC No: Ravichandran Sharmila*
*8105034963*
*Commercial bank - Batticaloa*
T.P: 0777466137

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஹஸாரே திடீர் கைது டில்லியில் பெரும் பதற்றம்!

டில்லி, ஒக. 17

டில்லியில் நேற்று காலவரையற்ற உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்குவதாக அன்னா ஹஸாரே அறிவித்திருந்த நிலையில் அதிகாலையிலேயே அவரையும், அவரது குழுவினரையும் டில்லி பொலிஸார் அதிரடியாகக் கைதுசெய்துள்ளனர். இதனால் டில்லியில் பரபரப்பு நிலவுகிறது.

லோக்பால் வரைவு மசோதா விவகாரம் தொடர்பாக நேற்று தனது 2 ஆவது உண்ணாவிரதப் போராட்டத்தைத் தொடங்குவதாக ஹஸாரே அறிவித்திருந்தார். இதற்கு மத்திய அரசும், காங்கிரஸும், மத்திய அமைச்சர்களும் கடும் எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். அவருக்கு ஜந்தர் மந்தர் பகுதியில் இடம் வழங்க பொலிஸாரும் மறுத்தனர்.

கடைசியில் 20 இற்கும் மேற்பட்ட நிபந்தனைகளை விதித்து ஜெயப்பிரகாஷ் நாராயணன் பார்க்கில் உண்ணாவிரதம் இருக்க அனுமதித்தது.

இருப்பினும் இவற்றில் 6 நிபந்தனைகளை ஏற்க முடியாது என்று அன்னா குழுவினர் அறிவித்தனர். அவற்றை ஏற்க மாட்டோம், மீறுவோம் என்று கூறியிருந்தனர்.

இதையடுத்து உண்ணாவிரதத்துக்குக் கொடுக்கப்பட்ட அனுமதியை டில்லி பொலிஸ் திரும்பப் பெற்றது. இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

இந்த நிலையில் நேற்று அதிகாலையில் திடீரென அன்னா ஹஸாரே, அவரது குழுவைச் சேர்ந்த அரவிந்த் கேஜ்ரிவால், கிரண் பேடி, சட்டத்தரணி சாந்தி பூஷன் உள்ளிட்டோரைப் பொலிஸார் திடீரெனக் கைது செய்து அப்புறப்படுத்தி பெயர் குறிப்பிடாத இடத்துக்குக் கொண்டு சென்று விட்டனர். இதனால் பெரும் பரபரப்பு நிலவுகிறது.

### அமைதி காக்க அன்னா ஹஸாரே கோரிக்கை

கைதுசெய்யப்பட்ட அன்னா ஹஸாரே பேசுகையில், மக்கள் போராட்டத்தைத் தொடர வேண்டும். அமைதி காக்க வேண்டும். ஊழலுக்கு எதிரான நமது போராட்டத்தை நிறுத்தக் கூடாது என்று கோரிக்கை விடுத்துள்ளார்.

அன்னா ஹஸாரே தடையை மீறி உண்ணாவிரதம் இருக்கப் போவதாக நேற்றுமுன்தினம் அறிவித்ததால் தான் அவரையும், அவ ரது குழு வினரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், நேற்றுமுன்தினம் டில்லியின் பல பகுதிகளில் 144 பொலிஸ் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டது. இதை மீறி ஜெயப்பிரகாஷ் நாராயணன் பூங்கா பகுதியில் அன்னாவின் ஆதரவாளர்கள் நூற்றுக்கும் மேற்பட்டோர் கூடி ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதையடுத்து அவர்களைப் பொலிஸார் கைது செய்து அருகில் உள்ள சத்ரசால் ஸ்ரேடியத்துக்குக் கொண்டு சென்றனர்.



அன்னா கைதைத் தொடர்ந்து டில்லியில் பதற்றம் நிலவுகிறது. அவரது ஆதரவாளர்கள் டில்லியில் பெருமளவில் குவிந்து வருகின்றனர். ஜெயப்பிரகாஷ் நாராயண் பூங்காவைச் சுற்றிப் பொலிஸார் பெருமளவில் குவிக்கப்பட்டுள்ளனர்.

## புயலைக் கிளப்பியது ஹஸாரே கைது முற்றாக முடங்கியது நாடாளுமன்றம்

அன்னா ஹஸாரே கைது விவகாரம் நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் நேற்று புயலைக் கிளப்பியது. கேள்வி நேரத்தை ஒத்தி வைத்து விட்டு விவாதிக்க வேண்டும் என்று பா.ஜ.க. நோட்டீஸ் கொடுத்தது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் அமளியில் ஈடுபட்டதால் இரு அவைகளும் நண்பகல் 12 மணிவரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளன. நாடாளுமன்றத்தின் இரு அவைகளும் நேற்று முற்பகல் 11 மணிக்குக் கூடியபோது அன்னா ஹஸாரே விவகாரம் வெடித்தது. பா.ஜ.க. மற்றும் இடதுசாரி உறுப்பினர்கள் எழுந்து ஹஸாரே கைது விவகாரத்தைக் கண்டித்தனர். பா.ஜ.க. கேள்வி நேரத்தை ஒத்திவைத்து விவாதிக்கக் கோரியது.

இதற்கு காங்கிரஸ் உறுப்பினர்கள் எதிர்ப்புத் தெரிவித்தனர். மேலும், இந்தக் கைது நடவடிக்கை சரியே என்றும் அவர்கள் கடுமையாக வாதிட்டனர். இதனால் இரு அவைகளிலும் அமளி ஏற்பட்டது. இதையடுத்து இரு அவைகளும் நண்பகல் 12 மணிவரைக்கும் ஒத்தி வைக்கப்பட்டன.

## உலக அளவில் எதிரொலித்த அன்னா ஹசாரேவின் கைது

**ஜனநாயகத்தை மீறிய செயலென கண்டனம்**

இந்தியாவில் ஊழலுக்கு எதிரான அன்னா ஹசாரேவின் நடவடிக்கைகளுக்கு உலக அளவில் ஆதரவு எழுந்துள்ளது. அமெரிக்காவில் நியூயோர்க் உள்ளிட்ட இடங்களில் அமெரிக்காவில் வசிக்கும் இந்தியர்கள் உட்பட அமெரிக்கர்களும் தங்கள் ஆதரவைத் தெரிவித்தனர். சிறு சிறு கூட்டங்களாகக் கூடி, தங்கள் கருத்துகளைத் தெரிவித்த வண்ணம் உள்ளனர். உலகின் இரண்டாவது மிகப்பெரிய ஜனநாயக நாட்டில், உண்ணாவிரதத்துக்கு அனுமதி மறுக்கப்பட்டது, ஜனநாயகத்தை மீறியசெயல் என கண்டனம் தெரிவித்தனர்.

இருப்பினும், அமெரிக்க அரசு அண்மையில் ஹசாரே போராட்டம் குறித்துக் கருத்துத் தெரிவித்ததால் எழுந்த எதிர்ப்பு அலையைத் தொடர்ந்து, இந்தமுறை அரசுத் தரப்பு, இந்தியா இந்தப் பிரச்சினையைக் கையாளும் வல்லமை கொண்டது என்று கருத்துத் தெரிவித்து ஒதுங்கிக் கொண்டது குறிப்பிடத்தக்கது.

# மரண அறிவித்தல்

## ஆறுமுகம் குணரத்தினம்

(மண்கும்பான் குணம் - முன்னாள் உரிமையாளர் சரஸ்வதி விலாஸ்)



அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும், மண்கும்பானை வசிப்பிடமாகவும், யாழ்ப்பாணம் நீராவியடி கடையிற்சுவாமி ஒழுங்கையைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகம் குணரத்தினம் நேற்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம்-இராசம்மா தம்பதியரின் மூத்த மகனும் காலஞ்சென்றவர்களான விநாயகமூர்த்தி-செல்லம்மா தம்பதியரின் மருமகனும், காலஞ்சென்ற பூங்காவனம் மற்றும் செல்வலட்சுமி ஆகியோரின் அன்புக்கணவனும் விநோதினி, சாந்தி, சசி, காலஞ்சென்ற வஜியநந்தினி மற்றும் சிவாஜினி, பாமா (அமெரிக்கா), சுதா (கொலண்ட்), துர்க்கா (கனடா), கண்ணன், கார்த்திகா, செந்தூரன் ஆகியோரின் அன்புத்தந்தையும் சண்முகானந்தன், குகனேசன், கேதீஸ்வரன், வரதன், விஜயகுமார், மதன் (அமெரிக்கா), சுகுமார் (கொலண்ட்), ராஜதேசிங் (கனடா), கலைச்செல்வி, டினேஸ் (கனடா), மிதுலா ஆகியோரின் மாமனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம், கோபாலசிங்கம் மற்றும் மனோஹரி, தவானந்தன் (கொழும்பு), காலஞ்சென்ற பாலச்சந்திரன் மற்றும் திருச்செல்வம் ஆகியோரின் அன்புத் தமையனும், விசுவலிங்கம், செல்வராசா, இராசலிங்கம் (சுவிஸ்), லலிதாராணி, ஜெயராணி, சரோஜினிதேவி, சுகிர்தராணி, பாலேஸ்வரி, பத்மாவதி, காலஞ்சென்ற நடேஸ்வரி மற்றும் இராசலட்சுமி, ரவீந்திரன், மகேஸ்வரி, லோகநாதன், கலாவதி, சுதா, சாந்தி ஆகியோரின் அருமை மைத்துனரும் நிதர்சன், நிசாந்தன்-கௌதமி, கஜீபன், கிரிஜா, திவ்யா, நிருஜன், சங்கீதா-நிரோ, சயந்தி-சயந்தன், வசந், டக்சிகா, நிசாந், ஜனனி, தமிழினி, ஜனுசாந், கஜனிதா, திவிசன், சுவஸ்திகா, சுஜிவன், கஜானனி, சஜிருயன், அபிசன், கபில், கரோஜின், சுபத்திரன், சுபானு, பிரவின், பிரஜின், அஸ்வின், சங்கீத், சஞ்சய், சந்தோஷ், திஷாங்கன் ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் இன்று(17.08.2011) புதன்கிழமை பிற்பகல் 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

217/3, கடையிற்சுவாமி ஒழுங்கை,
நீராவியடி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 11ஆம் மாத நினைவஞ்சலியும் 55ஆவது பிறந்த நாளும்

## அமரர் சந்திரசேகரம் பவானிதேவி

தோற்றம்
18.08.1956

மறைவு
17.09.2010







ஆழ்கடலில் தேடி எடுத்த திரவியமே...
ஏன் அம்மா எம்மை விட்டுப் பிரிந்தீர்
அன்பின் திருவுருவமாய் பாசத்தின்
உறைவிடமாய் வாழ்ந்து
எமக்கெல்லாம் அன்பு வார்த்தை ஊட்டினீர்களே
ஓடிப்போனதம்மா 11 மாதம்
உங்களை மறந்ததேயில்லை ஒரு நிமிடம்
ஆறாது தவிக்குது எங்கள் உள்ளம்
அழுது வெறுமையானது
உங்கள் 55 ஆவது பிறந்த
தினத்தில் எமது இல்லம்
உங்கள் ஆத்மா சாந்தியடைய தினந்தினம் பிரார்த்திக்கின்றோம்.

என்றும் உங்கள் நினைவுகளுடன்:

வளாக வீதி,
திருநெல்வேலி.

குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பஸ்ஸில் சென்று மக்களைச் சந்தித்து ஆதரவு தேடுவதில் ஒபாமா முனைப்பு

வாஷிங்டன், ஒக.17

மக்களை நேரில் சந்தித்துத் தான் எடுத்துள்ள சீரமைப்பு நடவடிக்கைகள் குறித்து விளக்க ஒபாமா முடிவு செய்தார். அதற்காக அவர் புதுவிதமாக பஸ்ஸில் சென்று மக்களைச் சந்தித்து தனது நடவடிக்கைகள் குறித்து விளக்கியுள்ளார். இந்தச் சந்திப்பின் முதல் நாளான நேற்று முன்தினம் மின்னெ சோட்டாவில் மக்களைச் சந்தித்து பேசினார். ஒபாமாவின் இந்த மக்கள் சந்திப்பு தேர்தல் பிரசாரமாகக் கருதப்படுகிறது.

அமெரிக்காவில் அடுத்த ஆண்டு டிசெம்பர் மாதம் அதிபர் தேர்தல் நடைபெறவுள்ளது. அதில் ஆளும் ஜனநாயகக் கட்சி சார்பில் அதிபர் ஒபாமா 2 ஆவது முறையாகத் தேர்தலில் போட்டியிடுகிறார்.

கடந்த மே மாதம் பாகிஸ்தான் அபோதாபாத்தில் பதுங்கியிருந்த அல்குவைதா தலைவர் பின்லேடன் அமெரிக்க ராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து அமெரிக்க மக்களிடம் அதிபர் ஒபாமாவின் செல்வாக்குப் பல மடங்கு உயர்ந்தது. எனவே 2 ஆவது முறையும் வெற்றி பெற்று மீண் டும் அதிபர் ஆவார் என்ற கருத்து நிலவிவந்தது. இந்த நிலையில் தற்போது அமெரிக்காவின் பொருளாதார நிலையில் சரிவு ஏற்பட்டுள்ளது. இதனால் ஒபாமா ஆட்சியின் மீது மக்கள் ஏற்பட்ட அதிருப்தியினை நீக்க அவர் நடவடிக்கை மேற்கொண்டுள்ளார். இதைத் தொடர்ந்து சமீபத்தில் பொதுமக்களிடம் வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அதில் ஒபாமாவின் நடவடிக்கைக்கு ஆதரவாக 39 சதவீதம் பேரும், எதிராக 54 சதவீதம் பேரும் கருத்து தெரிவித்துள்ளனர். இது குடியரசுக் கட்சிக்குப் பின்னடைவை ஏற்படுத்தும் எனக் கருதப்படுகிறது.

# பலஸ்தீனத்தை ஐ.நா.சபையில் இணைக்க அப்பாஸ் முயற்சி

ரமல்லா, ஒக.17

பலஸ்தீனத்தை ஐ.நா. சபையின் உறுப்பு நாடாக சேர்த்துக் கொள்ளக்கோரும் மனுவை அடுத்த மாதம் 20ஆம் திகதி பாலஸ்தீன தலைவர் மக்மூத் அப்பாஸ் ஐ.நா. பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் கையளிக்கவுள்ளார். அன்றைய தினம் தான் ஐ.நா. சபையின் பொதுக் குழு 66 ஆவது முறையாகக் கூடுகிறது.

இந்தக் கோரிக்கையை பான் கி-மூன் ஐ.நா. பாதுகாப்புச் சபைக்குத் தெரிவிப்பார். இந்தத் தகவலை பலஸ்தீனத்தின் வெளியுறவு மந்திரி ரியாத் அல் மாலிகி தெரிவித்தார்.

பலஸ்தீனத்தின் இந்த முடிவை இஸ்ரேல் விமர்சித்துள்ளது. இஸ்ரேலைப் போல அமெரிக்காவும் எதிர்த்துள்ளது. இஸ்ரேலுடனான நேரடிப் பேச்சு கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் முறிந்தது. இதைத் தொடர்ந்து ஐ.நா. சபையில் உறுப்பினர் அந்தஸ்து கோருவதென்று பலஸ்தீனம் முடிவெடுத்துள்ளது.

செப்ரெம்பர் மாதம் இந்தக் கோரிக்கை வைக்கப்படும் போது ஐ.நா. பாதுகாப்புச் சபையின் தலைமைப் பதவிக்கு சுழற்சி முறையில் லெபனான் வரும். அது பலஸ்தீனத்துக்கு உதவியாகவிருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## ஒக்லாந்து நகரில் திடீர் பனிப்பொழிவு

நியூசிலாந்து நாட்டைச் சேர்ந்த ஒக்லாந்து நகரில் திடீர் எனப் பனிப்பொழிவு ஏற்பட்டது. இதனால் அந்தநாட்டு மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இங்கு 1930 ஆம் ஆண்டுக்குப் பின்னர் சுமார் 80 வருடங்கள் கடந்து தற்போது பனிப்பொழிவு ஏற்பட்டுள்ளது. இதனை வானியல் வல்லுநர்கள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

மேலும் நியூசிலாந்து நாட்டின் ஏனைய பகுதிகளில் மழை தொடர்ந்து பெய்து வருவதால் மக்களின் அத்தியாவசியத் தேவை பொருள்களை வாங்கி சேமித்து வைத்துக் கொள்ளுமாறு அரசு வேண்டுகோள் விடுத்துள்ளது.



சீனா வந்திருந்த ரோமேனியா நாட்டு பிரதமர் ஈமில்போக், தலைநகர் பீஜிங்கில் அந்நாட்டு பிரதமர் வென் ஜியாபோவைச் சந்தித்தார்.

# சோமாலியா மக்களின் கடைசி நம்பிக்கை கென்யாவிலுள்ள தாதாப் அகதி முகாமே

கென்யாவில் உள்ள தாதாப் அகதிகள் முகாம் பஞ்சத்தில் தவிக்கும் சோமாலியா மக்களின் கடைசி நம்பிக்கையாக உள்ளது என சுவிஸ் யுனிசெப் இணையத்தளத்தில் அலெக்சாண்ட்ரா கவலையுடன் தெரிவித்துள்ளார்.

கிழக்கு ஆபிரிக்கா வரட்சியின் பிடியில் உருக்குலைந்துள்ளது. உயிரைக் காப்பாற்றுவதற்காக சோமாலியா மக்கள் 50 மைல் தொலைவில் உள்ள கென்யாவின் தாதாப் அகதிகள் முகாமுக்கு வருகிறார்கள்.

தாதாப் சோமாலிய மக்களின் கடைசி நம்பிக்கையாக உள்ளது. இந்த முகாமில் சுவிஸை சேர்ந்த யுனிசெப் ஊழியர் அலெக்சாண்ட்ரா ரோசட்டி 4 நாள்கள் இருந்தார். அப்போது அவர் கண்ட காட்சி கண்ணீர் வரவழைப்பதாக இருந்தது.

தாதாப் முகாமில் உள்ள நிலைமை மிகப் பரிதாபமாக நம்பிக்கை இழந்த நிலையில் உள்ளதாக சுவிஸ் மேம்பாடு மற்றும் ஒத்துழைப்பு ஏஜென்சி துணைத்தலைவர் டோனி பரிஸ்ச் கவலை தெரிவித்திருந்தார். இதே கருத்தை ஆண்ட்ரியாவும் தெரிவித்தார். கென்யா முகாமில் ஒவ்வொரு முகத்திலும் பசியின் கொடுமை இருப்பதைப் பார்த்தேன். இருப்பினும் அவர்களுக்கு ஒரு நல்ல வாழ்க்கை அமையும் என்ற நம்பிக்கை எனக்கு உள்ளது என அவர் மேலும் தெரிவித்தார்.

# பிரிட்டனின் இளைய சமுதாயத்தைத் திருத்த விரைவில் புதிய கொள்கைகள் வகுக்கப்படும்

லண்டன், ஒக.17

சோம்பேறித் தனம், பொறுப்பற்ற தன்மை, சுயநலம் ஆகியவற்றின் பிடியில் சிக்கியுள்ள பிரிட்டன் இளைய சமுதாயத்தை மீட்கவும், ஒழுக்கம் உள்ள சமுதாயமாக உருவாக்கவும் சில வாரங்களில் புதிய கொள்கைகள் வகுக்கப்படும் எனப் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூன் அறிவித்துள்ளார்.

பிரிட்டன் தலைநகர் லண்டனில் சமீபத்தில் உருவான கலவரம் நான்கே நாள்களில் நாடு முழுவதும் பரவியது. இச்சம்பவங்களில் இதுவரை இளைஞர்கள், இளம்பெண்கள் உட்பட 1,700 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். அதேநேரம், ஏழை, பணக்காரர் வித்தியாசமே இந்தக் கலவரங்களுக்குக் காரணம் என வலியுறுத்தும் சமூக நிபுணர்கள், கைது செய்யப்பட்டோருக்கு சிறைத் தண்டனை அளிக்கும் பட்சத்தில் அவர்கள் சமூகத்துக்கு மேலும் கேடு செய் வோராக மாறவே வாய்ப்புகள் அதிகம் எனவும் எச்சரித்துள்ளனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்த கமரூன் கூறியதாவது:இந்தக் கலவரங்கள் எமக்கு ஓர் எச்சரிக்கை மணி. பிரிட்டனின் தற்போதைய இளைய சமுதாயம், சோம் பேறித்தனம், பொறுப்பற்ற தன்மை, சுயநலம் ஆகியவற்றின் பிடியில் சிக்கியுள்ளது. நடந்த முடிந்த கலவரங்கள் பணத்துக்காக நடக்கவில்லை.

கலவரக்காரர்களில் பெரும்பான்மையோர் தகப்பன் இல்லாத சூழலில் வளர்ந்தவர்கள். அல்லது முன்னுதாரணமான ஆண் ஆளுமையைத் தெரிவு செய்து வளராதவர்கள். அதனால் அவர்கள் தங்கள் மீதான கட்டுப்பாட்டை இழந்திருக்கலாம். இந்த மோசமான குணங்களில் இருந்து அவர்களை மீட்டு, ஒழுக்கம் உள்ளவர்களாக மாற்ற சில நடவடிக்கைகள் தேவை. அமைச்சரவையின் இரு மூத்த அமைச்சர்கள் இன்னும் சில வாரங்களில் இளைய சமுதாயத்தின் ஒழுக்க நெறிகளுக்கான புதிய கொள்கைகளை வகுப்பர். அவற்றில், 16வயதில் உள்ள அனைவருக்கும் தேசிய மக்கள் சேவைப் பயிற்சி அளிக்கப்படும். இதன் மூலம் அவர்களுக்குப் போதுமான உடற்பயிற்சியும், சமூகத்தில் பழகுவதற்கான பயிற்சி, மக்களுக்கு உதவிகள் செய்வதற்கான பயிற்சி அளிக்கப்படும். புதிய மனித உரிமைகள் மசோதாவின் படி சட்டத்தை கையில் எடுக்கும் போக்கு தடுத்து நிறுத்தப்படும் என்றார்.

## லிபியத் தலைநகர் நோக்கி புரட்சிப்படை முன்னேற்றம்

லிபியாவில் ஜனாதிபதி கடாபியை பதவி விலகக்கோரி ஆயுத மேந்திப் போராடும் புரட்சிக்காரர்களின் படை தலைநகர் திரிபோலி அருகேயுள்ள சாவியா நகரைக் கைப்பற்றியது. இதன் மூலம் கடாபியின் தலைநகருக்கும், வெளி உலகத்துக்கு முள்ள தொடர்பு துண்டிக்கப்பட்டுவிட்டது.

இந்த வெற்றி கடாபி ஆதரவு இராணுவத்துக்கு மிகப்பெரிய பின்னடை வாகும். இதன் மூலம் புரட்சிப் படையின் பலம் கூடியுள்ளது. அத்துடன் திரிபோலிக்கு வடக்கு, மேற்காக செல்லும் கடலோரசாலைகள் புரட்சிப்படையின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிட்டன.

# சிக்குன்குனியா காய்ச்சலுக்கு தடுப்பூசி மருந்து கண்டுபிடிப்பு

வாஷிங்டன்,ஒக.17

சிக்குன்-குனியா காய்ச்சலுக்கான தடுப்பூசி மருந்தை, அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர். கடும் காய்ச்சலோடு மூட்டு வலியை ஏற்படுத்தும் சிக்குன்-குனியா நோய்க்கான தடுப்பு மருந்து கண்டுபிடிக்கப்படாமல் இருந்தது. தற்போது, அமெரிக்காவின் டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானிகள், சிக்குன்- குனியா வைத் தடுக்க வழி செய்யும் மருந்தைக் கண்டு பிடித்துள்ளனர்.

மரபணு மாற்றம் செய்யப்பட்ட சிக்குன்-குனியா வைரஸைக் கொண்டு இந்த மருந்து தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மருந்து, பரிசோதனை ரீதியாக எலிக்குப் பயன்படுத்தப்பட்டு, அதில் வெற்றி காணப்பட்டுள்ளது.

''மனிதர்களுக்கு இந்த மருந்து எந்த விதத்தில் வேலை செய்கிறது என்பது உள்ளிட்ட சோதனைகள் முடிந்த பின், இதற்கு அனுமதி கிடைக்கும். இந்தத் தடுப்பு மருந்து தயாரிப்புச் செலவும் குறைவுதான்'' என, டெக்சாஸ் பல்கலைக்கழக விஞ்ஞானி ஸ்கேட் வீவர் தெரிவித்துள்ளார்.

# ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்பு: 75 பேர் பலி

பாக்தாத்,ஒக.17

ஈராக்கின் தலைநகர் பாக்தாத் உட்பட பல்வேறு நகரங்களில், நேற்றுமுன்தினம் நடந்த தொடர் குண்டு வெடிப்பு மற்றும் தற்கொலைத் தாக்குதல்களில், 75 பேர் பலியாகினர். நூற்றுக்கணக்கானோர் காயம் அடைந்தனர்.

பாக்தாத் தின் தெற்கில் 150 கி.மீ., தொலை வில் உள்ள குத் நகரில், நடந்த இரட்டை குண்டு வெடிப்பில், 34 பேர் பலியாகினர். இதையடுத்து நஜாப், பக்குவபா, பாக்தாத், கர்பாலா, கிர்குக் உள்ளிட்ட முக்கிய நகரங்களில் தொடர் குண்டு வெடிப்புகள் நிகழ்ந்தன. இந்தத் தாக்குதல்களில் 75 பேர் பலியாகினர்.

இத்தாக்குதல்களுக்கு கார் வெடிகுண்டுகள், சாலை யோரக் குண்டுகள், தற்கொலைத் தாக்குதல்கள் ஆகியவை பயன் படுத்தப் பட்டுள்ளன. தியாலா மாகாணத்தில் மட்டும், ஏழு குண்டு வெடிப்புகள் நிகழ்ந்துள்ளன. மிக அதிகபட்சமாக, குத் நகரில் பலியாகியுள்ளனர்.

ஈராக்கில் கடந்த பத்தாண்டுகளுக்கு மேலாகத் தங்கியுள்ள அமெரிக்கப் படையினர், இந்த ஆண்டின் இறுதிக்குள் முழுமையாக வெளியேறுவர் என, முன்பே அமெரிக்க அதிபர் ஒபாமா அறிவித்திருந்தார்.

ஆனால், ஈராக்கின் பாதுகாப்புக் குறித்து சந்தேகித்த அந்த நாட்டுத் தலைவர்கள், 2012ஆம் ஆண்டு வரை அங்கு ஒரு சிறு படைப் பிரிவாவது தங்கியிருக்க வேண்டும் என, சமீபத்தில் தான் முடிவெடுத்தனர். ஈராக்கில் தொடரும் தாக்குதல்களைக் கட்டுப்படுத்தவும், பாதுகாப்புப் பணியில் மேலும் திறன் பெறவும் இந்த அமெரிக்கப் படை, ஈராக் வீரர்களுக்குப் பயிற்சி அளிக்கும். இதையடுத்து நிகழ்ந்துள்ள திட்டமிட்ட மிகப் பெரிய தாக்குதல்கள் இவை. இத்தாக்குதல்களுக்கு இதுவரை எந்த அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளூராட்சி வார மென்பந்தாட்டம்; நல்லூர் பிரதேச சபை அணிகள் சம்பியன்

யாழ்ப்பாணம், ஒக.17

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு நல்லூர் பிரதேச சபையால் நடத்தப்பட்ட உள்ளூராட்சி மன்றங்களுக்கு இடையிலான ஆண்கள் பெண்களுக்கான மென்பந்து துடுப்பாட்டப் போட்டியின் இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச சபை அணி சம்பியன் ஆனது.

நாணயச் சுழற்றி யில் வெற்றி பெற்ற உள்ளூராட்சி திணைக் கள மகளிர் அணி முதலில் துடுப்பெடுத்தாடி 12 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் 5 இலக்கை இழந்து 69 ஓட்டங்களைப் பெற்றது.

சிவகாமி 26, தேவகி 13, பொன்ராணி 12 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச சபை பெண்கள் அணியினர் விக்கெட் இழப்பின்றி வெற்றி இலக்கை அடைந்தனர்.

நள்ாயினி 31, சுதாஜினி நான்கு நான்கு உட்பட 28 ஓட்டங்களைத் தமது அணி சார்பாக பெற்றனர்.

பந்துவீச்சில் அணித்தலைவர் கிருஸ்ணமணி 3 இலக்கையும், சுதாஜினி, கஜேந்தினி ஆகியோர் முறையே தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் நல்லூர் பிரதேச சபை அணியை எதிர்த்த வலி.கிழக்கு பிரதேச சபை அணி மோதிக் கொண்டது. நாணய சுழற்றியில் வெற்றி பெற்ற நல்லூர் பிரதேச சபை அணித் தலைவர் சாந்தசீலன் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

அதற்கமைய முதலில் துடுப்பெடுத்தாடிய நல்லூர் பிரதேச சபை அணியினர் 12 பந்து ப் பரிமாற்றங்கள் நிறைவில் 160 ஓட்டங்களைப் பெற்றனர்.

சிவசாந்தன் 47, சிந்துராஜ் 44, பத்மரூபன் 21, நிரோஜன் 9 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய வலி. கிழக்கு பிரதேச சபை அணியினர் 56 ஓட்டங்களை மட்டுமே பெற்று 104 ஓட்டங்களால் தோல்வி அடைந்தது.

நல்லூர் பிரதேச சபை அணி சார்பாக பந்து வீச்சில் சாந்தசீலன் 3 இலக்கையும், சிவசாந்தன், சிந்துராஜ் ஆகியோர் முறையே ஒரு இலக்கையும் வீழ்த்தினர்.

(ம-23)



சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் இடம்பெற்ற கோல் காப்பாளர்களுக்கான பயிற்சி முகாமில் பங்கு பற்றிய வீர வீராங்கனைகளுடன் விருந்தினர்கள் மற்றும் பயிற்றுநர்கள். (ம-23)

# பயிற்சி முகாம் இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக.17

வடமாகாணப் பாடசாலைகளுக்கு இடையிலான தடகளப் போட்டியில் வெற்றி பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கான நான்கு நாள் பயிற்சி முகாம் இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

கொழும்பிலிருந்து வருகை தரும் பயிற்சியாளர்கள் இவர்களுக்கான பயிற்சிகளை வழங்குவர்.

பயிற்சிமுகாம் சனிக்கிழமை வரை இடம்பெறும்.

தேசிய மட்டப் போட்டிகள் எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் ஆரம்பமாகவுள்ளது. அந்தப் போட்டியில் பங்கு பெற்றும் போட்டியாளர்களைத் தயார்படுத்துவதற்காகவே இந்தப் பயிற்சி முகாம் நடத்தப்படுவதாகப் போட்டி ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ம-23-86)

# விலகல் முறையிலான உதைபந்தாட்டம்

யாழ்ப்பாணம், ஒக.17

கிளிநொச்சி உதைப்பந்தாட்ட லீக்கின் ஆதரவுடன் பரந்தன் மத்திய விளையாட்டுக் கழகம் 11 பேர் பங்கு கொள்ளவுள்ள விலகல் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது.

அதற்கான ஏற்பாடுகள் இடம்பெற்று வருவதாகவும் போட்டிகள் 20 ஆம் திகதி முதல் இடம்பெறவுள்ளன என்றும் கிளிநொச்சி உதைபந்தாட்ட லீக்கின் தலைவர் ஜோய்பியசீலன் தெரிவித்துள்ளார்.

* * *

யாழ். உதைபந்தாட்ட லீக் அங்கத்துவ கழகங்களுக்கு இடையிலான 7 பேர் பங்கு கொள்ளும் விலகல் முறையிலான உதைபந்தாட்ட சுற்றுப்போட்டியை நடத்தவுள்ளது.

மேற்படி போட்டிக்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. போட்டிகள் செப்ரெம்பர் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று செயலாளர் எஸ்.தர்மராஜா.தெரிவித்துள்ளார்.

(23)

## யாழ். வீரன் லண்டனில் சாதனை

லண்டனில் இடம்பெற்ற பிரிட்டன் வாழ் தமிழர்களுக்கிடையிலான மூன்றாவது விளையாட்டு விழாவில் யாழ்ப்பாணத் தைச் சேர்ந்த பொ.கிருபானந்தன் இரண்டு தங்கப்பதக்கம், ஒரு வெள்ளிப் பதக்கம் உட்பட மூன்று பதக்கங்களை வென்றுள்ளார்.

இவர் யாழ்.பல்கலைக்கழகத்தின் சகல துறை வீரராகவும் யாழ்.மாவட்டத் தடகளப்போட்டி, பிரதேச மாகாண தேசிய மட்டப் போட்டிகளில் பங்குபற்றி சாதனை படைத்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.(ம-23)


## மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
24 * 08 * 1940



விண்ணில்
17 * 08 * 2008

திருமதி
## வின்சென்டீபோல் பிலோமினா

விழிகளில் நீர் காய்வதற்குள் காலமும்
மூன்றாண்டு சென்றதுவோ
அம்மா என்றழைக்க எங்கள் தெய்வம்
நீங்கள் இங்கில்லை
கட்டியரவணைத்து கண்துடைக்க
தாயே நீங்கள் இல்லை
வேரறுந்த மரம் போல கதியற்று நிற்கின்றோம்
மூன்றாண்டு கடந்த போதும்
ஆறாத் துயருக்கு முடிவில்லை

ஆயிரம் ஆயிரம் உறவுகள்
ஆறுதல் சொன்ன போதும்
ஆறுதில்லை அம்மா எங்கள் உள்ளம்
வாழுகின்ற போது எங்களைப் பார்த்து மகிழ
வாழ்வு தந்த அன்னையே நீங்கள் இல்லை
எத்தனை காலம் சென்றாலும்
எங்கள் துயர் ஆறாது.
எந்நாளும் தெய்வமாய் நீங்கள் நின்று
எங்களை அரவணைக்கவேண்டும் அம்மா

**அன்னாரின் ஆன்மா ஈடேற்றத்துக்காக இன்று (17.08.2011) புதன்கிழமை மாலை 5 மணிக்கு யாழ்/ பருத்தித்துறை புனித தோமையார் ஆலயத்திலும், மன்னார் தூய செபஸ்தியார் பேராலயத்திலும் இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படும்**

"றோஸ் கோட்"
கடற்கரை வீதி,
பருத்தித்துறை. (6965)(45-24-25)

இவரின் பிரிவால் துயறுறும்
குடும்பத்தினர்



## மரண அறிவித்தல்



### சந்தியாகோ நீக்கிலஸ் நேசராசா

கரணவாய் கிழக்குக் கரவெட்டியை பிறப்பிடமாகவும் பண்டித்தறை, நெல்லியடியை வதிவிடமாகவும் கொண்ட சந்தியாகோ நீக்கிலஸ் நேசராசா 15.08.2011 அன்று அகால மரணமானார்.

அன்னார் ஆன் லில்லி ஞானபுஸ்பாவின் அன்புக் கணவரும் மாறிடில்ஷி, அருட்சகோதரி பிரிய வதனி மரினா(கார்மேல் கன்னியர் மடம், பொறளை) ஆகியோரின் பாசமிகு தந்தையும் அந்தோணிப்பிள்ளையின் சகோதரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 16.08.2011 செவ்வாய் பிற்பகல் 2.30 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து இரங்கல் திருப்பலிக்காக புனித அந்தோனியார் ஆலயத்திற்கு எடுத்து செல்லப்பட்டு, பின் கிரிப்பல்லி சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

முருகமூர்த்தி வீதி,
பண்டித்துறை,
நெல்லியடி.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.



ஸ்ரீராம ஜெயம்

## தசாக கிருஹயக்ஞ அழைப்பு

அன்புடையீர்!

நிகழும் கர வருஷம் ஆடி மாதம் 24ஆம் நாள் (09.08.2011) செவ்வாய்க்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

### பிரம்மஸ்ரீ ஸ்ரீவத்ஸ சண்முகசுந்தரக் குருக்கள் சபாநாதசர்மா

அவர்களது ஆத்மாசாந்திக் கிரியைகள் பின்வரும் தினங்களில் நடைபெறவிருப்பதால் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திப்பதோடு அதனைத்தொடர்ந்து வரும் சமாராதனையிலும் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகின்றோம்.

தசாகம் 18.08.2011 வியாழக்கிழமை முற்பகல் 10 மணி
கிருஹயக்ஞம் 21.08.2011 ஞாயிற்றுக்கிழமை.

முருகமூர்த்தி கோயிலடி,
உடுவில்.

குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இலங்கையின் வியூகத்தில் வீழ்ந்தது ஆஸி.

அம்பாந்தோட்டை, ஒக. 17

வென்றாக வேண்டிய கட்டாயத்தில் நேற்று களம் புகுந்த இலங்கை அணி ஆஸ்திரேலியாவை வீழ்த்தி அபார வெற்றியைப் பெற்றுக் கொண்டது. துடுப்பாட்டத்தில் தரங்க சதமடிக்க, பந்து வீச்சில் லசித் மலிங்க விக்கெட்டுக்களை சாய்க்க இலங்கை அணி ஆஸ்திரேலிய அணியை 78 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

இலங்கைக்குச் சுற்றுப் பயணம் செய்துள்ள ஆஸ்திரேலிய அணி இரண்டு ரி-20 ஆட்டங்கள், 5 ஒரு நாள் ஆட்டங்கள், 3 டெஸ்ட் ஆட்டங்களில் விளையாடி வருகின்றது. முன்னதாக நடைபெற்று முடிந்த இரண்டு ரி-20 ஆட்டங்களிலும் இலங்கை அணி வெற்றி பெற்றிருந்தது. அடுத்து இடம்பெற்ற இரண்டு ஒரு நாள் ஆட்டங்களிலும் ஆஸ்திரேலிய அணி வெற்றி பெற்றிருந்தது. நேற்றைய ஆட்டத்திலும் ஆஸி. வெற்றியைப் பதித்திருக்குமாயின்





இந்தத் தொடரை ஆஸி அணி கைப்பற்றியிருக்கும். மிகவும் நெருக்கடியான நிலையில் இலங்கை அணி களம் கண்டது. சுழற் பந்து வீச்சுக்கு முக்கியத்துவம் அளித்து களமிறங்கும் இலங்கை அணி நேற்று ஒரு சுழற் பந்து வீச்சாளர் மற்றும் மூன்று வேகப் பந்து வீச்சாளர்களுடன் களமிறங்கியது. அஞ்சலோ மத்தியுஸ், ஹேரத் ஆகியோர் நீக்கப்பட்டு சாமர சில்வா, சமின்ட எரங்க ஆகியோர் அணியில் இணைக்கப்பட்டனர். நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற ஆஸி. அணி முதலில் இலங்கை அணியை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது.

இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கிய தரங்க - டில்ஷான் இருவரும் ஆரம்பத்தில் ஆஸியின் பந்து வீச்சை திணறடித்தனர். ஆட்டத்தின் முதலாவது பந்தை லீ வீச தரங்க அதனை பவுண்டரிக்கு தட்டி விட்டு இலங்கையின் கணக்கை ஆரம்பித்தார். இருவரும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாட அணியின் ஓட்ட எண்ணிக்கை வேகமாக அதிகரித்தது. தரங்க 63 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். மறுமுனையில் துடுப்பெடுத்தாடிய டில்ஷான் அதிரடியாக 51 பந்துகளில் தனது அரைச்சதத்தை பூர்த்தி செய்தார். முதலாவது விக்கெட்டுக்காக 25.1 ஓவர்களில் 139 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது டில்ஷான் 59 பந்துகளில் 4 பவுண்டரிகள் அடங்கலாக 55 ஓட்டங்களுடன் பொலஞ்சரின் பந்து வீச்சில் ஆட்டமிழந்தார்.

டில்ஷானை தொடர்ந்து களமிறங்கிய சங்ககார வந்த வேகத்திலேயே சிக்ஸர் அடித்து அசத்தினார். தொடர்ந்தும் அதிரடியாக ஓட்டக்குவிப்பில் இலங்கை அணி ஈடுபட்டது. தரங்க 128 பந்துகளில் தனது 12 ஆவது சதத்தை புர்த்தி செய்தார். அதிரடியாகத் துடுப்பெடுத்தாடிய சங்ககார 37 பந்துகளில் 2 சிக்ஸர்கள், 3 பவுண்டரிகளுடன் 49 ஓட்டங்களைப் பெற்றபோது ஆட்டமிழந்து வெளியேறினார். அடுத்து நுழைந்த சன்டிமால் 4 ஓட்டங்களுடன் பவிலியன் திரும்பினார். இறுதியில் தரங்க 139 பந்துகளில் 12 பவுண்டரிகள் அடங்கலாக 111 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். ஒரு கட்டத்தில் 219 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டினை மாத்திரம் இழந்திருந்த இலங்கை அணி பின்னர் மளமளவென விக்கெட்டுக்களை இழந்தது. மத்திய வரிசையில் களமிறங்கிய மஹேலவின் அதிரடியான ஆட்டத்தின் மூலம் இலங்கை வலுவான இலக்கை எட்டியது. மஹேல 33 பந்துகளில் ஒரு சிக்ஸர் மற்றும் மூன்று பவுண்டரிகள் அடங்கலாக 39 ஓட்டங்களைப் பெற்று ஆட்டத்தின் இறுதி ஓவரில் ஆட்டமிழந்தார்.

இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுக்களை இழந்து 286 ஓட்டங்களைப் பெற்றது. பந்து வீச்சில் பொலஞ்சர் 42 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களை கைப்பற்றினார்.


பதிலுக்கு கடினாமான இலக்கை விரட்டத் தொடங்கிய ஆஸ்திரேலிய அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாய் அமைந்தது. மலிங்கவின் பந்து வீச்சில் வொட்ஸன் 5 ஓட்டங்களுடன் வெளியேற்றப்பட்டார். அத்துடன் ஆஸி. வீரர்களால் இலங்கை அணியின் பந்து வீச்சை சமாளித்து ஓட்டங்களைக் குவிக்க முடியவில்லை. அறிமுக வீரர் எரங்க தனது முதலாவது ஓவரிலேயே ஹடினை 5 ஓட்டங்களுடன் பவிலியனுக்குத் திருப்பினார். தொடர்ந்தும் சிறப்பாக பந்து வீசிய எரங்க கடைசி ஆட்டத்தின் நாய்கனாக தெரிவு செய்யப்பட்ட பொன்டிங்கை 22 ஓட்டங்களுடன் வெளியேற்ற ஆஸி. அணி 12.3 பந்து வீச்சுக்களில் 52 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

பின்னர் இணைந்து சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி அணித்தலைவர் கிளார்க் மற்றும் மைக் ஹஸி இருவரும் மெதுவாக அணியின் ஓட்ட எண்ணிக்கையை அதிகரித்துச் சென்றனர். நான்காவது விக்கெட்டுக்காக 71 ஓட்டங்கள் இணைப்பாட்டமாகப் பகிரப்பட்டபோது மீண்டும் பந்து வீச அழைக்கப்பட்ட லசித் மலிங்க அணித்தலைவர் கிளார்க்கை 46 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்கச் செய்தார். மைக் ஹஸி மட்டும் சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி தனது 35 ஆவது அரைச்சதத்தை புர்த்தி செய்தார். ஏனைய வீரர்கள் இலங்கையின் பந்து வீச்சை சமாளிக்க முடியாமல் திணறினர். இறுதியில் மைக் ஹஸி 63 ஓட்டங்களுடன் மலிங்கவின் பந்தில் ஆட்டமிழந்து வெளியேற ஆஸி.யின் தோல்வி உறுதியானது.

இறுதியில் 44.2 பந்து வீச்சுக்களில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து ஆஸ்திரேலிய அணி 208 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. லீ மட்டும் ஆட்டமிழக்காமல் 8 பந்துகளில் தலா ஒரு சிக்ஸர், பவுண்டரியுடன் 14 ஓட்டங்களைப் பெற்றார். பந்து வீச்சில் இலங்கை அணி சார்பாக லசித் மலிங்க 8.2 ஓவர்கள் பந்து வீசி 2 ஓட்டமற்ற ஓவர்கள் அடங்கலாக 28 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களை கைப்பற்றினார். ஆட்டநாயகனாக இலங்கையின் சார்பில் சிறப்பாக துடுப்பெடுத்தாடிய தரங்க தெரிவு செய்யப்பட்டார். (15)

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நஷீட்டுடன் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ நேற்று அம்பாந்தோட்டை, சூரியவெவ மகிந்த ராஜபக்ஷ சர்வதேச மைதானத்தில் ஆஸ்திரேலிய - இலங்கை அணிகளுக்கு இடையிலான 3ஆவது ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியைக் கண்டுகளித்தார்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி வபுஸ்டாதேவி மயில்வாகனம்

(Retired Matron, General Hospital, Jaffna)

வல்வெட்டித்துறையைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வதிவிடமாகவும், தற்போது திருகோணமலையில் வசித்து வந்தவருமாகிய திருமதி வபுஸ்டாதேவி மயில்வாகனம் நேற்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற மயில்வாகனம்(இளைப்பாறிய நிர்வாக உத்தியோகத்தர், A.G.A Office செங்கலடி) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற திருமதி கோணநாயகம்- சந்திரகாந்தி அம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான செல்லத்துரை- தங்கம்மா தம்பதியரின் மருமகளும், செல்வவிநாயகம் (இளைப்பாறிய அதிபர்), குழந்தைவேல்(இளைப்பாறிய ஆசிரியர்), சரவணமுத்து (இளைப்பாறிய மருந்தாளர்), காலஞ்சென்றவர்களான ராஜராஜேஸ்வரன், புஸ்பதேவி, மின்னொளி தேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், சியாமளா, விஜயகௌரி, தர்மசாந்தினி (மாகாணக் கல்வித் திணைக்களம், வடக்கு மாகாணம் தற்காலிக இணைப்பு பொறியியல் சேவை, உட்கட்டமைப்பு, கிழக்கு மாகாணம்) ஆகியோரின் அருமைத் தாயும், ஜெயக்குமார்(உயிரியல் மருத்துவ பொறியியல் பிரிவு, RDHS பணிமனை, திருகோணமலை), சிவகுமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், சாயிகாத்யாயனி, ஜனார்த்தனி, ஜனனி, திவ்யா ஆகியோரின் பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2011) புதன்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று மாலை 4 மணிக்கு பாலையூற்று இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக பூதவுடல் எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.1166, பாலையூற்று,
திருகோணமலை.

தகவல்:
குடும்பத்தினர்.

## கந்தசாமி ஜெகதீச்சந்திரன் (தீசன்)

(ஓய்வுபெற்ற ஆயுள்வேத வைத்தியர், வழக்கம்பரை)



சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், மூளாயை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி ஜெகதீசந்திரன் (15.08.2011) திங்கட் கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி(இராசா வாத்தியார் J.P)- செல்லாச்சி தம்பதியரின் அன்பு மகனும், தங்கம்மாவின் அன்புக் கணவரும், ஜெயச்சந்திரன், ஜெயக்குமார் ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்ற சுபாஸ்சந்திரன் மற்றும் கமலாலயம்(கனடா), சக்தி, சின்னையா, முத்துலிங்கம், இலங்கைக்காவல் குணசேகரம் (ஆஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் மூளாய் கிழக்கு, மூளாயிலுள்ள அவரின் இல்லத்தில் மு.ப 10 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பித்தனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

மூளாய் கிழக்கு, மூளாய்.

தகவல்:
மனைவி,
பிள்ளைகள்.

## தென்மராட்சியில் விசர் நோய் தடுப்பூசி

தென்மராட்சி,ஒக.17

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர் நோய்த் தடுப்பு ஊசி மருந்து ஏற்றும் பணிகள் சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக உத்தியோகத்தர்களால் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை பெரிய அரசடி ஆசிரியர் வீதி, சங்கத்தானை கந்தசாமி கோயிலடி, காளி கோயிலடி, சாவகச்சேரி வடக்கு மருதடிச் சந்தி, மண்டுவில் கிராம அலுவலர் அலுவலகம், சாவகச்சேரி செருக்கப் பிள்ளையார் கோயிலடி, பழநி ஆண்டவர் கோயிலடி, ஆகிய இடங்களிலும், சனிக்கிழமை பெருங்குளம் சந்தி, கிராம் புவில் முருகமூர்த்திகோயிலடி, தாமோதரம்பிள்ளை வீதி, மீசாலை கிழக்கு மதுவன் சனசமூக நிலையம், அல்லாரை கமலாம்பிகை வித்தியாலயம் ஆகிய இடங்களிலும் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-207)

## தவறிவிட்டது

உடுத்துறை வடக்கு தாளையடியைச் சேர்ந்த புனிதராசா மனோராஜ் என்பவருடைய கடவுச்சீட்டு நெல்லியடிக்கும் அச்சுவேலிக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு-0750493206

## ENGLISH, SINHALA CLASSES

IELTS, Spoken English வகுப்புக்கள்

வெளிநாடுகளுக்கு செல்வோருக்கான ஆங்கில (IELTS) வகுப்புக்கள் இலகு முறையில், கூடிய புள்ளிகள் பெற புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன.

சிங்கள வகுப்புக்கள்

பேச, எழுத, வாசிக்க பூரண தமிழ் விளக்கத்துடன் புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. ஆர்வமுள்ள அனைவரும் இணைந்து கொள்ளலாம்.

அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களால் கற்பிக்கப்படும்

NORTH LEAD
EDUCATIONAL CENTER
328, Stanly Road, Jaffna. (ஆரியகுளம் சந்திக்கு அருகில்)
Tel : 222 4459, 0772533390, Fax : 222 4460.

## அடிப்படை உடல் பரிசோதனை.



கிரமமான உடல் பரிசோதனைகள் பாரிய நோய்களை முற்கூட்டியே இனங்காட்டி உங்களை பாதுகாக்கும்.

*இலவச வைத்திய ஆலோசனை வழங்கப்படும்

A full package includes
Scan,ECG,Blood and Urine Tests&Reports

Lava Diagnosis & Lava Hospitals

Member of Reg No:PV74170
Lava Holdings Pvt Ltd

கணனி மயப்படுத்தப்பட்ட ஆய்வுகூடம் மற்றும் அறிக்கைகள்.

Tel: 0212224333 | # 75,Temple Road,Jaffna | www.Lavahospitals.com

## சேவை நலன் பாராட்டு

வடமாகாண தொழிற்றுறைத் திணைக்களத்தில் கடந்த எட்டு ஆண்டு காலமாக மாகாணப் பணிப்பாளராகக் கடமையாற்றி ஓய்வுபெற்றுச் செல்லும்

### திரு.இ.விஸ்வலிங்கம்

B.Sc. (Phy) Hons



அவர்களின் சேவையை மனமாரப் பாராட்டி வாழ்த்துவதோடு அவர் சீரும் சிறப்புடனும் பல்லாண்டு காலம் வாழ உளம் நிறைந்து வாழ்த்துகின்றோம்!

வாழ்க உங்கள் சேவை!
வளர்க உங்கள் புகழ்!

உத்தியோகத்தர்கள், தொழிற்றுறைத் திணைக்களம், மாவட்ட அலுவலகம், கச்சேரி யாழ்ப்பாணம்.

# மரண அறிவித்தல்

## கந்தசாமி செல்லையா (சீனியர்)

(உரிமையாளர், யாழ். வைத்தீஸ்வரா சந்தி தேநீர்க் கடை)



யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், புங்குடுதீவு மடத்துவெளியை வசிப்பிடமாகவும், தற்போது பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி செல்லையா 15.08.2011 திங்கட்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தசாமி- சின்னம்மா தம்பதியரின் அன்பு மகனும், பொன்னம்பலம்- தெய்வானை தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற மகாலெட்சுமி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், சண்முகநாதன், ரெங்கநாதன், யோகநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சுதர்ஜினி(கஜனி-இலங்கை), ஸ்ரீரங்கநாதன்(பிரான்ஸ்), டினேஸ்குமார்(லண்டன்), காந்தரூபி(பிரான்ஸ்), யசிந்தாயினி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், வாகீசன்(ஈசன்-இலங்கை), சுனித்தா(ஜெயந்தி- பிரான்ஸ்), பிரசாந்தி(பிரபா-லண்டன்), கிருபராஜ்(பிரான்ஸ்), ரமேஸ்குமார்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும், காலஞ்சென்றவர்களான நல்லையா, இராசம்மா, கந்தசாமி மற்றும் பத்மநாதன்(லண்டன்), சிவலிங்கம் (பிரான்ஸ்), அமிர்தலிங்கம்(கனடா), சண்முகநாதன்(பிரான்ஸ்), கிருஸ்ணபிள்ளை(கிட்டு- பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், வாவிதா(பிரான்ஸ்), யதுஷா, பிரதீபா, தனுஷாந் (இலங்கை), நிந்துஜன்(லண்டன்), கிரிஸ்னி(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (18.08.2011) வியாழக்கிழமை பிரான்ஸில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

195, சிவன்பண்ணை வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்.

## கிளி/ அருள்மிகு கந்தசாமி தேவஸ்தான

### விசேட பொதுக் கூட்ட அழைப்பு

இடம்: ஆலய மண்டபம்
காலம்: 20.08.2011 சனிக்கிழமை.
நேரம்: நேரம் மு.ப 10 மணி

இவ்வாலய பொதுச் சபை உறுப்பினர்கள், திருவிழா உபயகாரர்கள், விஷேஷ தின உபயகாரர்கள், கந்தசஷ்டி உபயகாரர்கள், நிர்வாக உறுப்பினர்கள், தர்மகர்த்தா உறுப்பினர்கள், முருகன் அடியார்கள், நலன்விரும்பிகள் அனைவரையும் கூட்டத்தில் கலந்து 03.09.2011 ஆரம்பமாகும் திருவிழா விடயங்களை கலந்துரையாடி தீர்மானங்களை நிறைவேற்றுமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

குறிப்பு: இந்த அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு அன்பாக வேண்டுகின்றோம்.

செல்லையா செல்வரத்தினம்
செயலாளர்.

ச.ஸ்ரீகௌரிபாலா.
தலைவர்

## அக்கராயன் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்

(வரையறுக்கப்பட்டது) பதிவு எண்.(K/N150)

### கிளை பொதுச் சபை கூட்டங்களுக்கான அறிவித்தல்

கிளைக் குழுக்களைத் தெரிவு செய்தல்.

20.08.2011 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு மேற்படி சங்கத்தின் கிளைக் குழுத் தெரிவுக் கூட்டம் ஏற்கனவே உதயன் பத்திரிகையில் 27.07.2011ஆம் திகதியில் 08ஆம் பக்கத்தில்பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலின்படி 20.08.2011 சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

ஸ்கந்தபுரம் மேற்குக் கிளைக்கான கூட்டம் ஸ்கந்தபுர இல.2 அ.த.க பாடசாலையில் நடைபெறும். வாக்களிக்கத் தகுதியுள்ள அனைத்து அங்கத்தவர்களுக்கும் அறிவித்தல் கடிதம் வழங்கப்பட்டுள்ளது.

அறிவித்தல் கடிதம் கிடைக்கப் பெறாதவர்களும் இந்த அறிவித்தலை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொண்டு குறித்த நேரத்துக்கு உரிய இடங்களுக்கு சமுகமளித்து தத்தமது ஜனநாயக உரிமையை பயன்படுத்துமாறு அறியத் தருகின்றோம்.

செயலாளர்:
அக்கராயன் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். நகரில் நேற்றுப் பகல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

''குகநாதன் மேல் விழுந்த அடி உண்மைக்கு விழுந்த இடி'' என்று எழுதப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தாங்கி இருந்தனர். ''கைது செய், கைது செய் குகநாதனைத் தாக்கியவர்களைக் கைது செய்'' என்று கோஷங்களை எழுப்பினர்.

முற்பகல் 11 மணிக்கு ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்டம் பங்காளர்களின் உணர்ச்சித் தூண்டலால் பின்னர் ஊர்வலமாக மாற்றமடைந்தது. மத்திய பஸ் நிலையத்திலிருந்து புறப்பட்டு ஆஸ்பத்திரி வீதியில் சென்ற ஊர்வலம், போதனா வைத்தியசாலையின் முன்பாகத் திரும்பி மீண்டும் பஸ் நிலையத்தை வந்தடைந்தது.

ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் காவல் கடமையில் இருந்த பொலிஸ் அதிகாரிகளுக்கும் இடையில் முறுகல் நிலை ஏற்பட்ட போதும் பின்னர் புரிந்துணர்வுடன் ஆர்ப்பாட்டம் இடம்பெற்றது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ்பிரேமச்சந்திரன், ஈ.சரவணபவன், சிறீதரன், ஐ.தே.க.நாடாளுமன்ற உறுப்பினர் விஜயகலா மகேஸ்வரன், கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கம், ஜே.வி.பி. முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இராமலிங்கம் சந்திரசேகரன், மாநகர சபை உறுப்பினர்கள் உட்பட பல பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்த ஊடகவியலாளர்கள் *உதயன்* பத்திரிகை நிறுவனத்துக்குச் சென்று ஏற்கனவே பல்வேறு தடவைகள் இடம்பெற்ற தாக்குதல்களின் அடையாளங்களையும் சான்றுப் பொருள்களையும் நேரடியாகப் பார்வையிட்டதுடன், தாக்குதலுக்கு இலக்கான செய்தியாசிரியர் குகநாதனையும் நேரில்பார்வையிட்டு நலம் விசாரித்து ஆறுதல் கூறினர்.

**கண்டன உரைகள்**

ஆர்ப்பாட்டத்தின் இறுதியில் கண்டன உரையாற்றிய சுதந்திர ஊடகத் தொழிற்சங்கத்தின் அமைப்பாளர் தர்மசிறி லங்கா பேலி தெரிவித்ததாவது:-

அரசுக்காக வேலை செய்யும் குண்டர்களுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். கை, கால்களை உடைத்தோ, தலையில் அடித்தோ ஊடகவியலாளர்களின் எழுத்தை நிறுத்த முடியாது. கிழக்காயிருந்தாலும் சரி, வடக்காயிருந்தாலும் சரி, தெற்காயிருந்தாலும் சரி எங்கேயிருந்தாலும் நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து இந்த ஊடக அடக்கு முறைக்கு எதிராகப் போராடுவோம்.

அரசுக்கு எதிராக எழுதிய ஊடகவியலாளர்கள் மீது கடந்த காலங்களில் நடந்த தாக்குதல் தொடர்பில் இதுவரையும் எதுவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தெற்கிலிருந்து நாங்கள் யாழ்ப்பாணம் வந்து மஹிந்த அரசுக்கு ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான குற்றவாளியைக் கைதுசெய்து நீதிமன்றத்தின் முன் ஆஜர்படுத்துங்கள்.

உழைக்கும் பத்திரிகையாளர் சங்கத்தின் சார்பில் உரையாற்றிய ஞானசிறி கொத்தியாகொட தெரிவித்ததாவது:-

அரசின் ஊடகத்துறை அமைச்சர் சொல்கின்றார் உதயன் பத்திரிகை அரசின் அபிவிருத்தியைப் பற்றி எழுதவில்லையென்று. அவர் சொல்லாமல் சொல்கின்றார் குகநாதன் ஒரு அப்பாவி. குகநாதனைத் தாக்கியிருக்க வேண்டியதில்லை. அவரது ஊடக நிறுவனத்தைத் தாக்கியிருக்க வேண்டும் என்று. அத்துடன் குகநாதனை தாக்கியவர் யார் என்பதையும் இவர் மறைமுகமாகச் சொல்லியிருக்கிறார்.

**ஒருவர் கைது என்பது அரசின் பிரசாரம்**

குகநாதனைத் தாக்கிய ஒருவரைக் கைது செய்துள்ளதாக அரசு பிரசாரம் செய்கின்றது. இது ஒரு கேலியான விடயமாக இருக்கின்றது. இதற்கு முன்னரும் இவ்வாறு கைதுசெய்து விட்டுப் பின்னர் அவர்கள் மீது குற்றச்சாட்டுகள் இல்லையென்று விடுவித்து விடுவார்கள்.

தாக்குதலுடன் தொடர்புடைய உண்மையான குண்டர்களைக் கைதுசெய்யாத பொலிஸ், இன்று எங்களது போராட்டத்தால் வீதிப் போக்குவரத்துத் தடைப்படுகின்றது என்றும் அதனால் எம்மை அகலுமாறும் சொல்கிறார்கள். குண்டர்களை பிடிக்காத பொலிஸாருக்கு இதனைச் சொல்ல என்ன உரிமை இருக்கின்றது - என்றார்.

**ஜனநாயகம் இல்லாததே யுத்தத்துக்குக் காரணம்**

தொடர்ந்து ஊடகவியலாளர் ஊடகப் பணியாளர் அமைப்பைச் சேர்ந்த சந்தன சிறிமல்வத்த கருத்துத் தெரிவித்ததாவது:-

இந்த நாட்டில் யுத்தம் ஏற்படக் காரணம் ஜனநாயகத்தையும் சுதந்திரத்தையும் இல்லாமல் செய்தமைதான். இந்த நாட்டை ஆளுபவர்கள் நாட்டை இரண்டாகப் பிரித்தே ஆட்சியை நடத்தி வந்துள்ளனர். இந்த நாட்டு மக்கள் சகல பேதங்களையும் மறந்து ஒன்றாகச் சேர்ந்தால் நாட்டை ஆளுபவர்களுக்குப் பிரச்சினையாகப் போய்விடும். இன்று வடக்கு மக்களுக்கும் தெற்கு மக்களுக்கும் உள்ள ஒரு பிரச்சினை ஜனநாயகம் இல்லாததுதான்.

இறுதியாக உரையாற்றிய இலங்கைத் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர் நிக்ஷன் கூறுகையில்;

ஊடக சுதந்திரம், ஜனநாயகம் பாதுகாக்கப்பட வேண்டும். இதற்காக நாங்கள் யாரிடமும் அனுமதி பெறத் தேவையில்லை. அடித்துக் காயப்படுத்துவதால் எமது எழுத்தைத் தடுக்க முடியாது.

குகநாதன் மீது தாக்குதல் நடத்தியவர்களை நேற்று கைது செய்ததாக கூறுகின்றார்கள். இதில் எங்களுக்கு நம்பிக்கை இல்லை. இவ்வளவு காலமும் கைது செய்யப்படாமல் இருந்த ஒருவர் நாங்கள் யாழ்ப்பாணத்தில் ஆர்ப்பாட்டம் நடத்தப் போகின்றோம் என்றதும் கைது செய்யப்பட்டுள்ளார். உண்மையான குற்றவாளியைக் கைதுசெய்ய வேண்டும்.

ஊடக சுதந்திரம், ஜனநாயகத்துக்கு பொறுப்புக் கூறும் வகையில் அரசு செயல் படும் வரை எமது போராட்டம் தொடரும் -என்றார்.

**சுனில் ஜெயசேகர**

சுதந்திர ஊடகவியலாளர் ஒன்றியத்தின் அமைப்பாளர் சுனில் ஜெயசேகர தெரிவித்ததாவது:-

மக்களின் குரலாக மக்களுக்காக சேவை செய்கின்ற இந்த உதயன் பத்திரிகைக்கு எங்களின் ஆதரவை தெரிவிக்கவே நாங்கள் இங்கு வந்திருக்கின்றோம். கடந்த காலங்களில் ஊடகவியலாளர்கள் பலர் கொல்லப்பட்டுள்ளனர். ஆனால் எந்தவொரு கொலைக்கும் சரியான குற்றவாளிகள் கண்டுபிடிக்கப்படவில்லை.

யாழ்ப்பாணத்தில் உள்ள ஊடகவியலாளர்கள் மற்றும் இந்தப் பிரதேசத்திலுள்ள ஊடக நிறுவனங்கள் மீதான அச்சுறுத்தல்கள் குறித்து எங்களுக்குத் தெரியும். இந்த நாட்டு மக்களுக்கு சுதந்திரம் அவசியம். ஊடகவியலாளர்களுக்கு சுதந்திரமாக எழுதுவதற்கு உரிமை உண்டு. இதை இல்லாமல் செய்ய முற்படுவது ஜனநாயகத்தை இல்லாமல் செய்யும் முயற்சியாகும். இவ்வாறான நடவடிக்கைகளை நாங்கள் எதிர்க்கிறோம்; கண்டிக்கின்றோம்.

இந்த நாட்டில் ஊடக சுதந்திரத்துக்காக போராடுகின்ற இயக்கங்கள் என்ற வகையில் 7 பிரதான அமைப்புக்கள் யாழ்ப்பாணத்துக்கு இன்று வந்து ஊடக அடக்குமுறைக்கு எதிராகக் குரல்கொடுக்கின்றன. ஊடகவியலாளர்கள் மோசமாகத் தாக்கப்பட்டு வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டுத் துன்பங்களை அனுபவித்துள்ளனர். ஆனால் இதுவரைக்கும் இது தொடர்பில் எவராவது கைதுசெய்யப்பட்டனரா?

தெற்குக்கு வேறு சுதந்திரம் வடக்குக்கு வேறு சுதந்திரம் என்ற வேறுபாடு இருக்கக்கூடாது. எல்லோருக்கும் சுதந்திரம் வேண்டும். எங்கு சுதந்திரம் பறிக்கப்பட்டாலும் அங்கு வந்து நாங்கள் போராடுவோம்.

தோழர் குகநாதன் மீது மிருகத்தனமாக நடைபெற்ற தாக்குதல் இது முதல் தடவையல்ல. 2006 ஆம் ஆண்டு குண்டர்கள் உதயன் அலுவலகத்துக்குள் புகுந்து குகநாதனைத் தேடினர். அவர் சிக்கவில்லை. ஆனால் அங்கு பணிபுரிந்த இருவரைச் சுட்டுக் கொன்றனர். அலுவலகத்தை மோசமாகச் சேதப்படுத்தினர். அவர்கள் இவ்வாறு செய்ததன் நோக்கம் எங்களை எழுத விடாமல் செய்வதுதான்.

இந்தக் குண்டர்களுக்கு நாங்கள் ஒன்றைச் சொல்லிக்கொள்ள விரும்புகின்றோம். நீங்கள் எங்களைத் தான் தாக்கினாலும் பயப்பட மாட்டோம். தொடர்ந்தும் ஊடக சுதந்திரத்துக்காக போராடுவோம். நாங்கள் தொடர்ந்தும் மக்களுக்குச் செய்திகளைச் சொல்லிக் கொண்டேயிருப்போம்-என்றார்.

(உ-02,04,07,14,15,23,26,86,115,311,313,319,236,405)

# ஐ.தே.கட்சிக்குள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருஜெயசூரியவிடம் கையளிக்குமாறு சஜித் பிரேமதாஸ குழுவினர் கோரி வருகின்றனர். ஆனால் ரணில் விக்கிரமசிங்க தலைமையை விட்டு விலக மறுக்கிறார்.

இந்த நிலையில், உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான வேட்புமனுக் குழுக்களை நியமிப்பதற்கான தகுதி தலைமைக்கு இல்லை எனத் தெரிவித்து இன்று சிறிகோத்தாவில் சத்தியாக்கிரகப் போராட்டம் நடத்தப்போவதாக கிளர்ச்சிக் குழு தெரிவித்துள்ளது. ஆனால், அத்தகைய போராட்டம் ஏதாவது நடந்தால் அதில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக கட்சி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கும் என்று பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க அறிவித்துள்ளார்.

இதற்கிடையே, தமக்கு எதிராக மகாராஜா தொலைக்காட்சி நிறுவனம் செயற்படுகிறது என்று ரணில் விக்கிரமசிங்க நேற்றுக் குற்றஞ்சாட்டினார். பொதுத் தேர்தலில் இரண்டு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை அந்த நிறுவனம் கேட்டபோது வழங்க மறுத்ததாலேயே தான் பழிவாங்கப் படுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (உ)

# புதுடில்லியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய நாடாளுமன்ற சபாநாயகர் மீராகுமார் தலைமையில் இலங்கை விவகாரம் தொடர்பான விவாதம் நேற்றுப் பி.ப. 12.05 மணியளவில் ஆரம்பமானது. தி.மு.க. நாடாளுமன்றக் குழுத் தலைவர் டி.ஆர்.பாலு விவாதத்தை ஆரம்பித்து உரையாற்ற எழுந்தபோது அன்னா ஹஸாரே கைதுசெய்யப்பட்டதைக் கண்டித்து எதிர்க்கட்சியினர் கூச்சல் எழுப்பினர். இதையடுத்து, சபாநாயகர் சபையை இன்று மு.ப. 11 மணி வரை ஒத்திவைத்தார். (உ)


# மரண அறிவித்தல்



*திருமதி சோமசுந்தரம் நாகதேவி*

**'கணேச வாசம்'** ஆஸ்பத்திரி வீதி, சங்கானையைப் பிறப்பிடமாகவும் கொழும்பு மாளிகாவத்தையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சோமசுந்தரம் நாகதேவி (தேவி) (15.08.2011) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் சோமசுந்தரத்தின் (ஜேர்மனி) அன்பு மனைவியும், சங்கானை காலஞ்சென்றவர்களான பொன்னையா - மனோன்மணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ் சென்றவர்களான கந்தையா - தங்கம்மா தம்பதியரின் மருமகளும் கனகாம்பிகை (சிங்கப்பூர்) காந்திமதி (ஆஸ்திரேலியா) சிவகாமிஅம்மை, ஜெயசோதி செல்வமலர், சிவயோகமலர், கணேசானந்தமூர்த்தி (சுவிஸ்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் பரமலிங்கம் (சிங்கப்பூர்) ரவுடேந்திரன் (அஸ்திரேலியா) காலஞ்சென்றவர்களான நடராஜா, நவரத்தினசிங்கம் மற்றும் விக்கினேஸ்வரன்(மக்கள் வங்கி ஓய்வூதியர்) கந்தவேள் ,நந்தினி (சுவிஸ்) சிவசுப்பிரமணியம் (அமெரிக்கா) பாக்கியலட்சுமி (கொழும்பு) கதிர்காமராஜா ராஜேஸ்வரி, பரமேஸ்வரி, கணேசராஜா, சண்முகநாதன் ஆகியோரின் மைத்துனியும் சுதந்தினி (கொழும்பு) சுதந்திரா, சுதாயினி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு தாயும் உதேஷ் (கட்டார்) குகராஜினி, கிருபாகரன் (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு மாமியும் அக்ஷயன், அக்ஸ்வின் (கொழும்பு) அர்ஸின், ஜெர்ஸின், ஜெர்சிகா சகானா, சந்தியா (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2011) புதன்கிழமை கணேசவாசம், ஆஸ்பத்திரி வீதி, சங்கானை என்னும் முகவரியில் நண்பகல் 12 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக விளாவெளி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*'கணேச வாசம்'*
*ஆஸ்பத்திரி வீதி,*
*சங்கானை.*

**தகவல்:**
குடும்பத்தினர்

(6976)



# தவறிவிட்டது

*திருநகரைச் சேர்ந்த காணிக்கை அன்வர்லியூ என்பவருடைய தேசிய அடையாள அட்டை [790994787V] சாரதி அனுமதிப்பத்திரம் என்பன [illegible] இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தந்துதவவும். சன்மானம் வழங்கப்படும்.*

**தொடர்பு-0776181813**



# கண்ணீர் அஞ்சலி

எமது பாசமிகு சகோதரர்

**குணரெட்ணம்** (குணம்)

( உரிமையாளர், சரஸ்வதி பவான், மண்கும்பான், யாழ்ப்பாணம்)



அன்னாரின் திடீர் மறைவினால் துன்புறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த துயரங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உரிமையாளர், யாழ். போன் சொப்.



# மரண அறிவித்தல்

*திருமதி மாகிறெற் யோசப்*



யாழ்ப்பாணம் இளவாலையைப் பிறப்பிடமாகவும் லண்டன் (Manor Park) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மாகிறெற் யோசப் 12.08.2011 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற அந்தோனி மரியம்மா தம்பதியரின் அருமை மகளும் காலஞ்சென்ற பெஞ்சமின் யுவக்கீன் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற பெஞ்சமின் யோசப் அவர்களின் அருமை மனைவியும், லிகோறி, தேவராஜா, யுவக்கீன் ஜெனிற்றா, ஜூலியற் ஜெனிற்றா, காலஞ்சென்ற ஜக்குலின் ஜெனிற்றா ஆகியோரின் அன்புத் தாயும் வின்சன் குலமகன், லெனன் கெனடி, வின்னிகோமதி, மரியகொன்செஸ்ரா ஆகியோரின் அன்பு மாமியும் சில்வெஸ்ரரின் பெரிய தாயும், பத்திநாதர், அல்போன்ஸஸ், கொன்சாய்க், Rev.Fr.ஞானப் பிரகாசம், காலஞ்சென்றவர்களான விக்ரோரியா, மெக்டலின் ஆகியோ ரின் அன்புச் சகோதரியும், ஜெறோம், ஜெருஷா, றொஷான், யோகானா, எரினா, எமிலி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இரங்கற் திருப்பலி லண்டனில் நாளை (18.08.2011) வியாழக்கிழமை பிற்பகல் ஒரு மணிக்கு ஒப்புக்கொடுக்கப்பட்டு பூதவுடல் பிற்பகல் 3 மணிக்கு அங்கு நல்லடக்கம் செய்யப்படும்.

அதேவேளை இரங்கற் திருப்பலி இளவாலை புனித யாகப்பர் ஆலயத்திலும் மாலை 6 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இளவாலை.

*தகவல்:*
பத்திநாதர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்றில் கழிப்பறைக்குள் ஒளித்திருந்த கிறிஸ் மனிதர்கள்

அக்கரைப்பற்று பிரதேசத்தில் உள்ள கோளாவில் என்னும் இடத்தில் இளம் பெண் ஒருவர் நேற்று மாலை தமது வீட்டு கழிப்பறைக்குள் சென்ற போது அங்கு ஒளிந்திருந்த கிறீஸ் மனிதர்களால் தாக்கப்பட்டு காயமடைந்த நிலையில் அக்கரைப்பற்று மாவட்ட மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கோளாவில் கிராமத்தில் குமார் கடை வீதியிலுள்ள 20 வயதுடைய ஜெகன் சோதி மலர் என்னும் ஒருவயது குழந்தைக்குத் தாயான இளம் குடும்பப்பெண்ணே இவ்வாறு கிறீஸ் மனிதனின் தாக்குதலுக்கு இலக்காகி காயமடைந்தவராவார்.

இதுபற்றி தெரியவருவதாவது:

நேற்றுதிங்கட்கிழமைமாலை 3.00மணியளவில் அவரது வீட்டிலுள்ள மலசல கூடத்திற்கு குறித்த பெண் சென்றபோது மலசல கூடத்திற்குள் மறைந்திருந்த இரு கிறீஸ் மனிதர்கள் அவரை பிடித்து கை, கால்களை கம்பியினால் கட்டி வாயை சலோரேப்பினால் ஒட்டிய போது அருகிலுள்ள வீட்டின் பெண் ஒருவர் கண்டு கூச்சலிட்டதையடுத்து அவர்கள் இருவரும் அங்கிருந்து ஓடித் தப்பியுள்ளனர்.

அவர்களது தாக்குதலி னால் அந்த இளம்பெண் காலில் சிறுகாயங்களுடன் மயக்கமடைந்த நிலையில் அக்கரைப்பற்று மாவட்ட மருத்துவமனையில் சோ்க்கப்பட்டார்.

இதனையடுத்து மருத்துவமனையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த பொலிஸார் மீது பொதுமக்கள் கல்வீச்சு தாக்குதலை நடாத்தி தமது எதிர்ப்பை வெளிப்படுத்தினர்

அந்தநிலையில் அங்கு வரவழைக்கப்பட்ட இராணுவத்தினர் பொதுமக்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து அவ் விட்டதைவிட்டு கலைத்தனர்.

இந்தச் சம்பவத்தையடுத்து கோளாவில் கிராமத்து மக்கள் பெரும் அச்சம் பதற்றத்துடன் காணப்பட்டது.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம்



காரைநகர் வாரிவளவைப் பிறப்பிடமாகவும், காரைநகர் பெரியமணலில் வசித்தவரும், தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாக்கியம் ஞானப்பிரகாசம் நேற்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை இறையடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சோமநாதர் - தங்கமுத்து தம்பதியரின் புதல்வியும், காலஞ்சென்றவர்களான கந்தப்பு - மீனாட்சி தம்பதியரின் மருமகளும், காலஞ்சென்ற ஞானப்பிரகாசம் (சுதேச வைத்தியர், பிறப்பு, இறப்பு, விவாகப் பதிவாளர்) அவர்களின் அன்பு மனைவியும், கமலாதேவி, விமலநாயகி, அம்பிகைபாகன், மீனாட்சியம்மை, சிவஞானம், நாகேஸ்வரி, சத்தியதேவி, கருணாநிதி, காலஞ்சென்றவர்களான குமாரகுலசிங்கம், தனபாலசுந்தரம் ஆகியோரின் அன்புத் தாயும், கணேசமூர்த்தி, V.T. கணேசன், கயிலைவாசன், ஆனந்தராசா, சுசீலாதேவி, வடிவாம்பிகை, காலஞ்சென்றவர்களான சிவசுப்பிரமணியம், Dr.விஜயரட்ணம், கைலாயபிள்ளை ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான கனகரட்ணம் (மலேசியா), வேலுப்பிள்ளை (மலேசியா), இராசம்மா, தர்மலிங்கம் (ஆசிரியர்) ஆகியோரின் பாசமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.08.2011) காலை புதன்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (18.08.2011) வியாழக்கிழமை பொரளை ஜெயரட்ண மலர்ச்சாலையில் மு.ப. 10 மணிக்கு இறுதிக்கிரியைகள் நடைபெற்று கனத்தை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர் , நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*தகவல்:*
**பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.**

## மரியநாயகம் யூயின் ஜெகநாதன்

(அருந்தா)



முல்லைத்தீவைப் பிறப்பிடமாகவும், லண்டன் மில்ரன் கீன்சை வசிப்பிடமாகவும் கொண்ட மரியநாயகம் யூயின் ஜெகநாதன் கடந்த (14.08.2011) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற மரியநாயகம் மற்றும் மேரிதிரேசா தம்பதியரின் அன்பு மகனும், திருச்செல்வம் பற்றிமா தம்பதியரின் அன்பு மருமகனும், அன்ரனற் வினோதினி அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நவரட்ணம் (பிரான்ஸ்) மற்றும்பேபி, செல்வம், பபி (லண்டன்), கிளி (சுவிஸ்), பேபிராசா (ஜேர்மனி), ஜெயா (இந்தியா), பவா (மிருசுவில்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், டிருஷா, அலைசா ஆகியோரின் அன்புத் தந்தையும், நல்லபிள்ளை, காலஞ்சென்ற யோகதாசன் மற்றும் ஜெயம், தேவராசா, யோசேப்பு, கெளரி, மனோகரன், மனோ (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனரும், அனிற்றலா, ஷாமினி (பிரான்ஸ்), டிலோஜன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மச்சானும், ரூபன் அவர்களின் அன்புச் சகலனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (17.08.2011) புதன்கிழமை காலை 9 மணிதொடக்கம் 9.45 மணிவரை 159 Church St. Wolverton, Milton Keynes, MK 12 5LA, U.K எனும் முகவரியில் பார்வைக்காக வைக்கப்பட்டு, மு.ப. 10 மணிக்கு St.Augustine Church, Longcliffe Drive,Heelards, Milton Keynes, MK 13 7PL, U.K எனும் முகவரியில் இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டு New Bradwell, Milton Keynes எனும் முகவரியிலுள்ள சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சிலாவத்தை,*
*முல்லைத்தீவு.*

*தகவல்:*
**பவா (சகோதரி)**

# இனப்பிரச்சி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகச் சாய்கிறது என்று புதுடில்லி நம்புவதால், 80களைப் போன்று அது மீண்டும் இனப்பிரச்சினை விடயத்தில் நேரடித் தலையீடுகளை மேற்கொள்ளத் தயாராகிறது என்று சென்னையில் உள்ள இராஜதந்திரி ஒருவர் தெரிவித்தார்.

இதன் முதற்கட்டமாக தமிழ்க் கட்சிகளுக்கு இடையில் தீர்வு தொடர்பான கருத்தொருமைப்பாட்டை ஏற்படுத்த புதுடில்லி விரும்புகிறது என்றார் அவர். அதற்காகவே தமிழ்க் கட்சிகள் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

''தமிழ்க் கட்சிகள் அனைத்தையும் வருமாறு இந்தியா அழைத்துள்ளது. காங்கிரஸ் கட்சியின் தமிழக நாடாளுமன்ற உறுப்பினரான சுதர்சன நாச்சியப்பன் இது தொடர்பிலான அழைப்பை அனுப்பி உள்ளார்'' என்று உதயனுக்குத் தெரிவித்தார் சுரேஷ்பிரேமச்சந்திரன்.

எதிர்வரும் 23, 24 ஆகிய இரு தினங்கள் இந்தக் கூட்டம் நடத்தப்பட உள்ளது. இதில் கலந்துகொள்ள, தமிழரசுக் கட்சி, தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் (ஈபிஆர்எல்எவ்) சுரேஷ் மற்றும் பத்மநாபா அணிகள், தமிழீழ விடுதலை இயக்கம் (ரெலோ), தமிழீழ மக்கள் விடுதலைக் கழகம் (புளொட்), ஈழ தேசிய ஜனநாயக விடுதலை முன்னணி (ஈஎன்டிஎல்எவ்) ஆகிய கட்சிகளுக்கு அழைப்புக்கள் அனுப்பப்பட்டுள்ளன. ஒவ்வொரு கட்சியில் இருந்தும் இரு பிரதிநிதிகள் கூட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் இருந்து கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தை அழைப்பதற்கு முயற்சிகள் எடுக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது. ஆனால் உத்தியோகபூர்வ அழைப்பு இன்னும் அனுப்பப்படவில்லை.

தமிழரசுக் கட்சியில் இருந்து மாவை சேனாதிராசா மற்றும் எம்.ஏ.சுமந்திரன், தமிழர் விடுதலைக் கூட்டணியில் இருந்து ஆனந்தசங்கரி, ஈபிஆர்எல்எவ் வரதர் அணியில் இருந்து வரதராஜப் பெருமாள் மற்றும் சுகு, சுரேஷ் அணியில் இருந்து சுரேஷ் பிரேமச்சந்திரன், சிவசக்தி ஆனந்தன் ஆகியோரும் ரெலோவில் இருந்து செல்வம் அடைக்கலநாதன், புளொட் சித்தார்த்தன், ஈஎன்டிஎல்எவ் பரந்தன் ராஜன் ஆகியோரும் இந்தக் கூட்டத்தில் பங்கேற்பார்கள் என்று தெரியவருகிறது.

முதல்நாள் கூட்டத்தில் தீர்வு தொடர்பில் தமிழ்க் கட்சிகளின் கருத்துக்களை இந்திய அரச பிரதிநிதிகள் கேட்டறிவார்கள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

''முதல்நாள் அமர்வில் தற்போதைய அரசியல் நிலைவரம் மற்றும் தீர்வு தொடர்பில் எமது கருத்துக்களைத் தெரிவிக்க முடியும் என்று நினைக்கிறோம். அனைத்துக் கட்சியினரும் இணக்கப்பாடான கருத்துக்களைத் தெரிவிப்பது நன்மையளிக்கக்கூடும். இரண்டாம் நாள் அமர்வில் இந்தியாவில் உள்ள முக்கிய கட்சிகளின் அரசியல் தலைவர்களைச் சந்தித்துப் பேச வாய்ப்புக் கிடைக்கும்'' - என்றார் சுரேஷ் பிரேமச்சந்திரன்.

இந்தியா செல்வதற்கு முன்னதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகள் அனைத்துக்கும் இடையில் தீர்வு தொடர்பான பொது இணக்கப்பாடு ஒன்றை எட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

உள்ளூராட்சி சபைகளில் வெற்றி பெற்ற தலைவர், உபதலைவர், உறுப்பினர்கள் பதவியேற்பு நிகழ்வில் நடைபெறும் 20ஆம் திகதி, கட்சித் தலைவர்கள் இது பற்றிக் கலந்துரையாடுவார்கள் என்றும் தெரிகிறது. இந்தியா செல்வதற்கு முன்னர் பொது இணக்கப்பாடு பற்றிய புரிந்துணர்வு தமிழ்க் கட்சிகளின் தலைவர்களின் மத்தியில் எட்டப்படுவது அவசியம் என்று கருதப்படுகிறது. (உ)

**விற்பனைக்கு**

நல்ல நிலையிலுள்ள YAMAHA PSR - S900 KEYBOARD (Arranger work Station) விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0718474312

**பிரத்தியேக கணினி வகுப்பு**

* Laptop (மடிக்கணினி) மூலமாக உங்கள் வீடுகளுக்கு வந்து அனைத்துக் கற்கை நெறிகளும் கற்பிக்கப்படும்.
* MS Office 2007/2010, Internet and E-mail, DTP, Web Design, Graphic Design, சிறுவர்களுக்கான பயிற்சி நெறிகள்.
* சான்றிதழ்கள் வழங்கப்படும்.

ஆசிரியர்: KRC
T.P. 0779672038 நல்லூர்.

# இராணுவத்தினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கத் தேர்தலிலும் தலையிடுகின்றனர் என்று அவர் தெரிவித்துள்ளார். ''பூநகரி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பல்வேறு கிளைகளுக்குத் தேர்தல் நடந்தது. இதில் இராணுவத்தின் ஒரு பகுதியினர் உத்தியோகப்பற்றற்ற முறையில் ஊரடங்குச் சட்டத்தை நடை முறைப்படுத்தி பலரைத் தேர்தலிலும் உத்தியோகத்தர் தெரிவிலும் கலந்துகொள்ளவிடாது தடுத்துள்ளனர்'' என்று சங்கரியின் மனுவில் கூறப்பட்டுள்ளது.

இவ்வாறு இராணுவத்தினரின் உதவியை நாடி உள்ள அரசியல் கட்சியானது ஒவ்வொரு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்திடம் இருந்தும் ரூபா 10 லட்சத்தைக் கோரி இருக்கிறது என்றும் ஆனந்த சங்கரி குற்றஞ்சாட்டுகிறார்.

''உங்களுக்கும் எமது நாட்டுக்கும் தமது நடத்தையால் அபகீர்த்தியை ஏற்படுத்தும் இராணுவத்தினர் மீது தயவுசெய்து உரியமுறையில் நடவடிக்கை எடுத்து அப்பாவி மக்களுக்கு முறையான பாதுகாப்பும் அமைதியான வாழ்வும் கொடுக்க வேண்டியது தங்களது கடமை'' என்று அவர் ஜனாதிபதியிடம் கோரி உள்ளார். (உ)

**பணியாளர்கள் தேவை**

*யாழ்.நகரில்* **Transport Company, Hotel** *ஆகியவற்றுக்கு கீழ்க்காணும் பணிநிலைக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

1. காசாளர்
2. லொறிச்சாரதி
3. லொறி உதவியாளர் (கிளினர்)
4. தோட்டப் பராமரிப்பாளர்
5. றூம் போய்ஸ் (Room Boys)
6. காவலாளி

*விண்ணப்பங்களை 25.08.2011 இற்கு முன்னராக கீழ்க் காணும் முகவரிக்கு தொலைபேசி இலக்கத்தைக் குறிப்பிட்டு அனுப்பிவைக்கவும்.* **முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.**

விளம்பர இல: 4148, மே/பா உதயன்.

**கட்டடம் வாடகைக்கு**

A-9 வீதி, நாவற்குழி அரசாங்க உணவுக் களஞ்சியத்துக்கு அருகில் 1200 சதுர அடிகளைக் கொண்ட புதிய கட்டடம் வாடகைக்குண்டு. காட்சியறை, களஞ்சியம் அல்லது இரு கடைகளாக பாவிக்கக் கூடியது. 6 வாகனங்கள் நிற்கக் கூடியதும், தண்ணீர், மின்சாரம் மற்றும் வசதிகளும் உண்டு.

தொடர்பு: 0777711071

**பணியாளர்கள் தேவை**

**யாழ்ப்பாணம், இராமநாதன் வீதியிலுள்ள பிரபல்யமான றெஸ்ரோரன்ற் அன்ட் ஹெஸ்ற் ஹவுஸுக்கு கீழே குறிக்கப்பட்டவர்கள் தேவையாக உள்ளது.**

I. சுத்திகரிப்பாளர் - *(ஆண், பெண் விரும்பத்தக்கது)*
II. உணவு பரிமாறுநர் - *(3பாஷையும் தெரிந்தவர் விரும்பத்தக்கது)*
III. சமையலாளர்
IV. சமையல் உதவியாளர்.
V. சிட்டை எழுதுநர் - *(3மொழிகளும் தெரிந்தவர் விரும்பத் தக்கது)*

**கவர்ச்சிகரமான சம்பளம் வழங்கப்படும்.**
**இன்று (17.08.2011) புதன்கிழமை காலை 9.00மணிக்கு நேரில் சந்திக்கவும்.**

தொ.பே.இலக்கம்
021 222 5876,
0776016310

**மிலேனியம்**
**76/60, இராமநாதன் வீதி,**
**யாழ்ப்பாணம்.**

# மரண அறிவித்தல்

## நடராசா காசிநாதன்



கல்வியங்காடு கட்டப்பிராயைப் பிறப்பிடமாகவும், கந்தரோடையை வசிப்பிடமாகவும் கொண்ட நடராசா காசிநாதன் நேற்று (16.08.2011) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடராசா தம்பதியிரின் அன்பு மகனும், சுக்கிரவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - நாகபாக்கியம் தம்பதியரின் மருமகனும், உதயகுமார் (பிரான்ஸ்), கவிதா (ஆசிரியை மு/விசுவமடு மகா வித்தியாலயம்), மகிந்தராசன் (வவுனியா), சிவகுமார் ஆகியோரின் அன்புத் தந்தையும், சந்திரிக்கா (பிரான்ஸ்), ரஜீவன் (யா/போதனா வைத்தியசாலை), சைஜையா (ஆசிரியை) ஆகியோரின் அன்பு மாமனும், ரஜீவன், சஜீவன், பதுர்சனா, டென்சிகா, விதுர்சிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (17.08.2011) புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கந்தரோடை சங்கம்புலவு இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கந்தையா உபாத்தியாயர் வீதி,*
*கந்தரோடை,*
*சுன்னாகம்.*

*தகவல்:*
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 17.08.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

# பறவைகள் அதிகாலையில் ஏன் சத்தமிருகின்றன?

அதிகாலையில் பறவைகள் குரலெழுப்புவதற்கு மூன்று காரணங்கள் உள்ளன. ஒன்று, பெரும்பாலும் எல்லா உயிரினங்களிலும் உள்ள உயிரியல் கடிகார இயக்கம். இரண்டு உணவு. மூன்று தம் எல்லையில் அதிகாரத்தை நிலைநாட்டுவது.

அதிகாலையில் எழுகின்ற பறவை இரை பிடிக்கும் எனும் ஆங்கிலப் பழமொழி, பறவைகளின் காலை நேரக் கூச்சல்களை விளக்குகிறது. அதிகாலையில் பறவைகள் இரை தேடுவதற்கான பரபரப்பில் இருக்கும். ஆயினும் குறைவான வெப்ப நிலையும், மங்கிய வெளிச்சமும் அதிகாலையில் இரை தேடுவதற்குத் தடையாக இருக்கின்றன. இரை குறைகின்ற காலகட்டங்களில் தான் பறவைகள் மிக உரக்கக் கத்துகின்றன என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.

காலையில் எழுந்தவுடன் பறவைகள் அலைந்து திரியும். உணவு கிடைக்கும் வாய்ப்புடைய இடங்களைக் கண்டுபிடித்து, அந்த இடத்தின் மீது தங்கள் உரிமையை நிலைநாட்ட முயற்சிக்கும். அப்படி ... இடங்களுக்கு மற்றப் பறவைகள் வந்துவிடாமல் இருப்பதற்காகத்தான் அவை ஓசை எழுப்புகின்றன.

பறவைக் குழுவிலிருக்கும் வலிமையான ஆண் பறவைதான் அதிக உரத்த குரலில் கூவும், அல்லது பாடும். தான் தான் இந்தப் பறவைகளின் தலைவன் என்று அறிவிப்பதற்காகத் தான் அது இவ்வாறு செய்யும்.

தட்டிக் கேட்பதற்கு ஒரு தலைவர் அந்த இடத்தில் உண்டென்று அறிந்தால் மற்ற பறவைகள் அங்கே அவ்வளவு சுலபமாக வந்துவிடுவதில்லை. இது ஒரு ஆய்வு மூலம் தெரியவந்திருக்கிறது. பறவைக் கூட்டத்தின் தலைவரை கூட்டத்திலிருந்து விலக்கி அங்கே ஒரு ஒலி பெருக்கி வைக்கப்பட்டது. அதன் வழியே தலைவரின் குரல் ஒலிபரப்பப்பட்டது. அந்த இடத்திற்கு வர முற்பட்ட பல பறவைகளும் அந்தக் குரலைக் கேட்டு திரும்பிப் போய்விட்டன. ஆனால் அதிக எதிர்ப்புத் தன்மை கொண்ட சில பறவைகள், ஒலி பெருக்கியைத் தாக்க முற்பட்டன. ஒலி பெருக்கி வைக்காத இடங்களில், மற்ற பறவைகள் நிறைய வந்து சேர்ந்தன.

இதைப்போன்று, சூரியன் உதிக்கும் போது சேவல் கூவுவதற்கும் மூன்று காரணங்கள் உள்ளன. சேவலின் உயிரியல் கடிகாரம், உணவு தேடுவதற்கான ஆயத்தம், தன் அதிகார எல்லையை மற்றவர்களுக்கு அறிவிப்பது ஆகியவையே அவை.







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Lanka IOC

# புதியதோர் பயணத்திற்கான புதியதோர் சக்தி

உங்களின் முன்னேற்றப் பாதையில் உங்களுடன் கைகோர்த்து சேவை புரிய
சேர்வோ பிரிமியம் CF4 டீசல் இன்ஜின் ஒயில்
இப்போது உங்கள் அருகில்

கனரக வாகனங்களின் இன்ஜினை அதிக வெப்பநிலையில் இருந்து பாதுகாப்பதோடு, எண்ணெய் படிதல் மற்றும் துருப்பிடித்தலையும் தடுக்கும் சேர்வோ பிரிமியம் CF4 டீசல் இன்ஜின் ஒயில் வடக்கு, கிழக்கு மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

அத்தோடு நாடளாவிய ரீதியில் காணப்படும் IOC பெற்றோல் நிலையங்கள், அங்கீகரிக்கப்பட்ட முகவர்கள் மற்றும் விநியோகத்தர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

**அம்பாறை மாவட்டம்**
எஸ்.எஸ். டிஸ்றிபியுட்டர்ஸ்,
பிரதான வீதி,
அக்கரைப்பற்று-01.
067 3 672315
067 2 277419
0777 664869

**பொலன்னறுவை & திருகோணமலை மாவட்டம்**
ஜயபிம ஸ்டோர்ஸ்,
மட்டக்களப்பு வீதி,
பொலன்னறுவை.
027 2 223032
0772 689061

**வவுனியா மாவட்டம்**
எஸ்.கே.கே. டிஸ்றிபியுட்டர்ஸ்
202, சூசை பிள்ளையார் குளம்,
வவுனியா.
024 2 222 555
0777 488 222

**யாழ்ப்பாண மாவட்டம்**
அஸ்வினி மல்டி பிளாஸா,
74, ராஜா பிளாஸா, பலாலி வீதி,
கோண்டாவில் கிழக்கு,
யாழ்ப்பாணம்.
021 5 677777
021 2 228 032
0773 169488




SERVO

Rediffusion-Y&R

# பறவைகளின் 'வலசை'ப் பயணம்



பறவைகளும் விலங்குகளும், தக்க சூழ்நிலையைத் தேடி இடம்பெயர்ந்து செல்வது வலசை போவது எனப்படும்.

பறவை உலகின் பல அற்புதமான சம்பவங்களில் ஒன்று இது. வலசைப் பறவைகளின் பயணங்கள் அணிவகுப்புடன் துல்லியமாக நடைபெறும்.

ஏறக் குறைய, தெற்குத் திசையை நோக்கியும் வடக்குத் திசையை நோக்கியும்தான் இவை பயணம் செய்யும். பூமத்திய ரேகைக்கு வடக்கிலுள்ள பல இனத்தைச் சேரந்த நிறைய பறவைகள் குளிரின் கடுமையிலிருந்து தப்புவதற்காக தெற்கு நோக்கிப் பயணம் செய்கின்றன.

ஏறத்தாழ ஆறு மாத காலம் அங்கே தங்கிய பிறகு அவை தங்கள் பழைய இடத்துக்கே திரும்பிச் செல்கின்றன.

வலசைப் பறவைகளில் மிகவும் திறமையானது ஆர்ட்டிக் டெர்ன் என்ற பறவைதான்.

வட துருவத்துக்குச் சுற்றிலுமுள்ள இடங்களில் இனப்பெருக்கம் செய்த பின்னர் இவை தெற்கு நோக்கிப் புறப்பட்டு, ஏறத்தாழ 18,000 கிலோ மீற்றர் தூரம் பறந்து தென் துருவப் பிரதேசங்களை அடைகின்றன. ஒரு மீற்றரின் மூன்றில் ஒரு பங்கு நீளம்தான் இருக்கும் இந்தப் பறவை.

இவ்வளவு தொலைவு பயணம் செய்கிற பறவைகள் குறைவு. ஆயினும் 3 ஆயிரம் அல்லது 4 ஆயிரம் கிலோ மீற்றர் தொலைவைக் கடந்து வருகின்ற பறவைகளும் இருக்கின்றன. இது போன்ற பறவைகளை குளிர் காலத்தில் பார்க்கலாம்.

உயரமான மலைகளில் வசிக்கின்ற பல வகையான பறவைகள், வடக்கு தெற்காக பயணம் செய்வதற்குப் பதிலாக, உயரத்திலிருந்து கீழ்ப் பகுதிக்கு வருகின்றன. குளிர் காலம் முடிந்ததும் மீண்டும் உயரத்துக்குச் சென்றுவிடுகின்றன.

வலசைப் பறவைகள் , வழி தவறாமல் பெரிய மலைகளையும் கடல்களையும் கடந்து, எல்லா வருடமும் வருகிற அதே இடத்தைச் சரியாக அடைகின்றன. பறவைகளால் இது எப்படி முடிகிறது என்பதை இப்போதும் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. சூரியனின் நிலையையும், இரவு நேரங்களில் நட்சத்திரங்களின் நிலையையும் அடிப்படையாகக் கொண்டுதான் அவை பயணம்போகின்றன என்று விஞ்ஞானிகள் கண்டு பிடித்திருக்கிறார்கள். ஆனால் இதுபோன்ற நீண்ட பயணம் போவதற்கான சக்தி பறவையின் மூளையில் எங்கே, எப்படி ஒளிந்திருக்கிறது என்று இப்போதும் ஆராய்ந்து கொண்டிருக்கிறார்கள். சுருக்கமாக, நாளின் நீளத்திலுள்ள வித்தியாசமும் - இனப்பெருக்கத்தோடு தொடர்புடைய உள் உணர்வும்தான் பறவைகளை வலசை போகத் தூண்டுகின்றன என்று சொல்லலாம். அவற்றின் மரபான குணங்கள்தான், பயணம் போவதற்கான நேரத்தையும், திசையையும், தூரத்தையும் முடிவு செய்கின்றன என்றும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பறவைகள் மட்டுமல்ல, சால்மன் எனும் மீனும், மோனார்க் எனும் வண்ணத்துப் பூச்சியும் நெடுந்தூரம் பயணம் போவதில் மிகவும் திறமை பெற்றவை.

சேமிப்புக்களுக்கு மிகக் கூடுதலான வட்டி வீதம் 7% p.a.

நிபந்தனைகள் கிடையாது!

Fitch Rating – BB+(lka) RAM Rating – BBB-P3

சேமிக்கும் வேளையில் வெல்லுங்கள்!

1,000,000 வரை வெல்லுங்கள்

ரூ.10,000 வீதம் 100 வெற்றியாளர்கள்

மாபெரும் சீட்டிழுப்பு 2011 டிசெம்பர் 31

யூனியன் வங்கி

Tel.(011) 2374100 www.unionb.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org